REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜுன் 8 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
1932 - 2022

வரு. 90 இல. 133 | Wednesday 08, June, 2022 | 16 பக்கங்கள் | 40/-

மாணவர் கரங்களில்
புதுப்பொலிவுடன்
தரம்-5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
பிரதி வெள்ளிக்கிழமை தோறும்
உங்கள் அபிமான தினகரனுடன் வெளியாகும்
இலவச இணைப்பிதழ்
உங்கள் தினகரன் பிரதியை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்!
மாணவச் செல்வங்களுக்கு வாரம் தோறும் தினகரன் வழங்கும் அரிய வரப்பிரசாதம்!

மக்களுக்கான நிவாரணத் தொகை 900 மில். டொலராக அதிகரிப்பு

# பொருளாதார நெருக்கடிக்குள்ளான மக்களுக்கு இலவச உணவு திட்டம்



## உடன் ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானமென பிரதமர் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இலவசமாக உணவு வழங்கும் வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அது தொடர்பில் நேற்று அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார். நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் மக்கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ள பாதிப்பிலிருந்து, அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமென தெரிவித்த அவர், மக்களுக்கு வழங்கும் நிவாரணங்களுக்கு ஒதுக்கப்படும் தொகையை அதிகரிக்க

06

அடுத்த மூன்று மாதங்களுக்கு நாட்டில் சவால்மிக்கதோர் நிலை உருவாகலாம். முகம்கொடுக்க மக்களை தயாராகுமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

பிரதமரினால் சமர்ப்பிக்கப்பட்ட

# ரூபா 69,500 கோடி குறைநிரப்பு பிரேரணை

## அரசாங்க நிதி குழு அனுமதி வழங்கியது

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாட்டில் அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றி தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்லும் வகையில், தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதமரும் நிதியமைச்சருமான ரணில் விக்ரமசிங்கவினால் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 69500 கோடி ரூபா குறைநிரப்பு பிரேரணைக்கு அரசாங்க நிதி தொடர்பான குழு அனுமதி வழங்கியுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பாவின் தலைமையில், நேற்று இடம் பெற்றுள்ள அரசாங்க நிதி குழுவின் கூட்டத்திலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**இன்று விவாதத்தையடுத்து சபையில் நிறைவேற்றப்படும்**

எதிர்கொள்ள நேர்ந்துள்ள பொருளாதார நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சமூகத்தின் பல்வேறு தரப்பினருக்கும் நிவாரணம் வழங்குவதற்கும்

06

# எரிபொருள் விநியோகம் இன்று முதல் வழமைக்கு

- அமைச்சர் கஞ்சன



எரிபொருள் விநியோகம் இன்று முதல் வழமைக்கு திரும்புமென எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில், தேவையான அளவு டீசல் மற்றும் பெற்றோல் இன்று முதல் சந்தைக்கு விநியோகிக்கப்படும் என்று அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார். இதற்கமைய, 5,000 மெற்றிக் தொன் டீசல் மற்றும் 3,500 மெற்றிக் தொன் பெற்றோல் என்பன விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# சிறை தீர்மானத்தால் எம்.பி பதவியை இரத்துச் செய்ய முடியாது

தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனையைப் பெற்ற அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பாராளுமன்ற பதவியை இந்தத் தீர்மானத்தினால் இரத்துச் செய்ய முடியாதென, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பதவியை நீக்கினால் இரண்டு வருடங்கள் ஆறு மாத சிறைத்தண்டனை அல்லது இரண்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்படுமென பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்தி 64 மில்லியன் ரூபாவை கப்பம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில், இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர், அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கான தீர்த்தம் எடுத்தல்



உப்பு நீரில் விளக்கெரியும் அற்புதம் நிறைந்த வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கான தீர்த்தம் எடுத்தல் உற்சவம் நேற்று (07) மாலை முல்லைத்தீவு தீர்த்தக் கரை பகுதியில் சிறப்பாக நடைபெற்றது.

வரலாற்றுச்சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த

06

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுவரும்வரை

# ஒரு வருடத்துக்கு சம்பளம் பெறாது பணியாற்ற அமைச்சர்கள் முடிவு

**ஷம்ஸ் பாஹிம்**



ஒரு வருட காலத்திற்கு அமைச்சர்கள் எவரும் சம்பளம் பெறாது அர்ப்பணிப்புடன் பணியாற்றும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். கடந்த வருடம் 400 கோடியாக தினசரி வருமானம் காணப்பட்டதோடு செலவு 1000 கோடிகளாக உள்ளன. 600 கோடியை

06

65 மில்.டொலர் முறைகேடு

# அஜித் கப்ரால் சரீரப் பிணையில் விடுதலை



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் 10 மில்லியன் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். தினியாவில பாலித தேரர்

06

நம்பிக்கையில்லா பிரேரணை

# இங்கிலாந்து பிரதமர் ஜோன்சனுக்கு வெற்றி



பிரிட்டன் பாராளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் பொரிஸ் ஜோன்சனுக்கு 211 எம்பிக்கள் ஆதரவாகவும், 148 பேர் எதிராகவும் வாக்களித்தனர். பெரும்பான்மை அடிப்படையில் போரிஸ் ஜோன்சன்

06



## மின் கட்டணத்தை 250 வீதத்தால் உயர்த்துவதற்கு உத்தேசம்!

03

பயன்படுத்தப்படாத காணிகளை

# தோட்ட தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

**மனோ கணேசனின் வேண்டுகோளுக்கு பிரதமர் சபையில் பதில்**

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படும் பயன்படுத்தப்படாத காணிகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு, விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மனோ கணேசன் எம்பி மனோ கணேசன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட பிரதமர் ரணில் விக்ரமசிங்க, இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் என சபையில் தெரிவித்தார்.

06

# பிரதமருக்கும் எனக்கும் கருத்து முரண்பாடா?

## இ.ம.வ ஆளுநர் மறுப்பு



தனக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் முரண்பாடு இருப்பதாக கூறப்படும் கூற்றுகளை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க கடுமையாக நிராகரித்துள்ளார்.

"ஆளுநருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் முரண்பாடு இருப்பதாக சமூக ஊடகங்களில் பரவும் சில செய்திகளை,

06

# சு.க பதவியிலிருந்து நிமலை நீக்க முடியாது

## நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு!



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவியிலிருந்து அமைச்சர்,நிமல் சிறிபால டி சில்வாவை நீக்கியதை இடைநிறுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று (07) தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வாவை கட்சியின் சகல பதவிகளிலிருந்தும் நீக்குவதாக

06

# கச்சதீவை மீட்பதே BJPயின் நோக்கம்

## தமிழக தலைவர் அண்ணாமலை



தமிழக மீனவர்களின் நலனை பாதுகாக்கும் வகையில் கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்பதே பா.ஜ.கட்சியின் நோக்கமென கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

06



நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு

## ரஞ்சனுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறை விதிப்பு

03



## யாழ்.பல்கலைக்கழக மாணவர் மீது தாக்குதல் முயற்சி

மர்ம நபர்கள் மாணவர்களால் மடக்கிப்பிடிப்பு

03



## யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம்

03

வட்டுவாகல் கோட்டாபய கடற்படை முகாமுக்காக:

# பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு



முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் பொதுமக்களின் காணிகளில் அமைந்துள்ள "கோட்டாபய கடற்படை கப்பல்' என்னும் கடற்படை முகாமுக்கு காணிகளை நிரந்தரமாக சுவீகரிப்பதற்கு நில அளவை திணைக்களத்தினரால் நேற்று (07) மேற்கொள்ளப்பட்ட முயற்சி, காணி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக வட்டுவாகல் பகுதியில் கடற்படை முகாம் அமைந்துள்ள தமிழ் மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணிகளை கடற்படை முகாமுக்கு நிரந்தரமாக சுவீகரிப்பதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு, நில அளவை திணைக்களத்தினரின் ஒத்துழைப்போடு அளவீடு செய்து

06

நாட்டு கடனை அடைக்க புலம்பெயர் தமிழர் முன்வரின்

# தமிழருக்கான அரசியல் தீர்வை பெற்றுத்தர அரசாங்கம் தயாரா?

## சபையில் சிறிதரன் எம்.பி அரசிடம் கேள்வி



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாட்டின் 50,000 மில்லியன் கடனை செலுத்த 13 இலட்சம் புலம் பெயர் தமிழர்கள் தயாராக வந்தால் வடக்கு, கிழக்கிலும் மலையகத்திலும்

06

# இலங்கை மீது நம்பிக்கை இழந்த சர்வதேச நாடுகள் எப்படி உதவும்



## முஜிபுர்ரகுமான் எம்.பி சபையில் கேள்வி

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

சர்வதேசம் இலங்கை மீது நம்பிக்கை இழந்துள்ள இத்தகைய சூழ்நிலையில், எமது பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்ய சர்வதேச நாடுகள் எவ்வாறு உதவி செய்ய முடியுமென

06

# யூரியா இறக்குமதிக்கு இந்தியாவிடமிருந்து 55 மில்லியன் டொலர் கடன்



யூரியா உரத்தை பெற்றுக்கொள்வதற்கு இந்திய ஏற்றுமதி – இறக்குமதி வங்கியில் (Exim Bank) இருந்து கடன் பெறும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2022/23 பெரும்போகத்துக்கு தேவையான யூரியா உரத்தை பெற்றுக் கொள்வதற்காக55மில்லியன்அமெரிக்க டொலர்களை இந்திய ஏற்றுமதி – இறக்குமதி வங்கியிடமிருந்து பெற்றுத்தருவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்திருந்தது. இந்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திட பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

06

# சர்வதேச செய்திகள்

## இங்கிலாந்தில் 4 நாள் வேலை வாரம் அமுல்



நான்கு நாட்கள் வேலை வாரம் திட்டத்தை சோதனை அடிப்படையில் இங்கிலாந்து நடைமுறைப்படுத்தியுள்ளது.

70 நிறுவனங்களைச் சேர்ந்த மூன்றாயிரத்து 300 தொழிலாளர்கள் நான்கு நாட்கள் வேலை வாரத் திட்ட சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆறு மாதங்களுக்கு சோதனை அடிப்படையில் திட்டத்தை செயல்படுத்த உள்ளதாகவும், மன அழுத்தம், சோர்வு, வேலை மற்றும் வாழ்க்கையில் ஏற்படும் திருப்தி உள்ளிட்டவைகளை கூடுதல் நாள் விடுமுறை மூலம் பணியாளர்கள் கையாள்வதை ஆய்வு செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

# நம்பிக்கையில்லா தீர்மானம்: பொரிஸ் ஜோன்சன் வெற்றி



பிரிட்டிஷ் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தம்மை அதிகாரத்தில் இருந்து நீக்கக்கூடிய ஆளும் கட்சியின் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் வெற்றிபெற்றுள்ளார்.

அவர் தனது அளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்குள் அதிருப்தியை சந்தித்தபோதும் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பில் நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு எதிராக 211 வாக்குகளை வென்றுள்ளார். அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 148 வாக்குகள் கிடைத்துள்ளன.

இந்த வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதன் மூலம் அடுத்து வரும் பல ஆண்டுகளுக்கும் அவரது தலைமைக்கு போட்டியில்லை என்றபோதும் 359 கன்சர்வேடிவ் எம்.பிக்களில் 148 பேரின் எதிர்ப்பை பெற்றிருப்பது பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

கன்சர்வேடிவ் கட்சியின் குறைந்தது 54 உறுப்பினர்களிடம் இருந்து கடந்த திங்கட்கிழமை நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டதை அடுத்தே கட்சி விதியின் கீழ் இந்த வாக்கெடுப்பை நடத்த தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஜோன்சன் இதில் தோல்வி அடைந்திருந்தால் கட்சித் தலைமை மற்றும் பிரதமர் பதவியை இழந்திருப்பார்.

பொரிஸ் ஜோன்சன் கொரோனா காலகட்டத்தில் ஊரடங்கை மீறி விருந்து நடத்தியது தொடர்பாக, வெளியான அறிக்கையையடுத்து, அவருடைய தலைமைக்கு எதிராக சொந்த கட்சியில் எதிர்ப்பு கிளம்பியது. மேலும், ஊரடங்கை மீறி பிறந்த நாள் விருந்தில் கலந்து கொண்டதாக, ஜூன் 2020இல் அவருக்கு பொலிஸார் அபராதம் விதித்தனர்.

இதன்மூலம், பிரிட்டனின் பிரதமராக ஆட்சியில் உள்ள ஒருவர் மீது சட்டத்தை மீறியதாக அபராதம் விதிக்கப்படும் முதல் பிரதமராக அவர் ஆனார்.

மேலும், வரி உயர்வு, வாழ்க்கைச் செலவுகள் உயர்வு மற்றும் அரசு கொள்கைகள் மீதும் கன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்த எம்.பிக்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

## தலிபான் அரசுக்கு ஐ.எஸ் அச்சுறுத்தல்



ஆப்கானிஸ்தானின் தமது கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக ஐ.எஸ் மற்றும் தேசிய எதிர்ப்பு முன்னணி, தலிபான்கள் மீதான தமது தாக்குதல்களை தீவிரப்படுத்த விருப்பதாக வொஷிங்டன் போஸ்ட் வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஐ.எஸ் மற்றும் ஆப்கானின் முன்னாள் பாதுகாப்பு படையினரின் கெரில்லா தாக்குதல்கள் தலிபான்களுக்கு பிரதான அச்சுறுத்தலாக இருப்பதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தலிபான்கள் தமது ஆட்சி முறை மற்றும் நடத்தை மீதான நம்பிக்கை அடிப்படையில் கடும்போக்காளர்கள் மற்றும் சீர்திருத்தவாதிகள் என பிளவுபட்டிருப்பதாகவும் அந்த பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :..........

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை :..........

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை :..........

வாக்களித்தவர் பெயர் :..........

முகவரி :..........

மொபைல் இல. :..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 11-06-2022 இல. 11





# ட்விட்டருக்கு மஸ்க் எச்சரிக்கைக் கடிதம்




ட்விட்டரின் பயனர் தளம் பற்றிய தனது கோரிக்கை முறியடிக்கப்பட்ட நிலையில் அந்த சமூக ஊடகத்தை வாங்கும் தனது 44 பில்லியன் டொலர் உடன்படிக்கையில் இருந்து வெளியேறப்போவதாக எலொன் மஸ்க் எச்சரித்துள்ளார். ட்விட்டரில் உள்ள போலி கணக்குகள் பற்றி சொந்த மதிப்பீட்டைப் பெற தமக்கு உரிமை இருப்பதாக அந்த நிறுவனத்திற்கு எழுதிய கடிதத்தில் உலகின் பெரும் செல்வந்தரான மஸ்க் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக ட்விட்டரை வாங்கும் உடன்படிக்கையை மஸ்க் இடைநிறுத்தியது தொடக்கம் கடந்த சில வாரங்களாக இந்தப் பிரச்சினை நீடித்து வருகிறது.

ட்விட்டரின் தினசரி பயனர்களில் 5 வீதத்திற்கு குறைவான போலி கணக்குகள் இருப்பதாக அந்த நிறுவனம் கூறுகின்றபோதும் அந்த எண்ணிக்கை அதனை விடவும் அதிகம் என்று மஸ்க் நம்புகிறார்.

## ஆப்கானியத் துருப்புகளை இந்தியா அனுப்ப விருப்பம்



ஆப்கான் இராணுவத்தை பயிற்சிக்காக இந்தியா அனுப்புவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று ஆப்கான் பாதுகாப்பு அமைச்சரும் தலிபான் நிறுவனர் முல்லா ஒமரின் மகனுமான முல்லா யாகூப் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் நியுஸ் 18 தொலைக்காட்சி சேவைக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். “இதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இருப்பதாக நான் பார்க்கவில்லை. ஆப்கான்–இந்திய உறவு வலுப்பெற்றிருப்பதோடு அதற்கான அடித்தளம் அமைக்கப்படும்” என்று கூறினார்.

சிறந்த அரசியல் மற்றும் இராஜதந்திர உறவுகளை பேணும் போதே பாதுகாப்பு உறுதிக்காக நாம் தயாராக இருப்போம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## கட்டார் – இந்திய உறவை வலுப்படுத்துவதற்கு உறுதி



கட்டார் நாட்டுடனான தமது வரலாற்று ரீதியிலான நட்புறவை இந்தியா மேலும் வலுப்படுத்தும் என்று இந்தியாவின் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். கட்டார் நாட்டு அமீர் தமீம் பின் ஹமத் அல் தானியின் ஆரம்ப விஜயம் உள்ளிட்ட உயர் மட்டத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ள சந்திப்புகளுக்கும் இணக்கம் காணப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய துணை ஜனாதிபதி நாயுடு தலைமையிலான உயர் மட்ட தூதுக்குழுவினர் கபொன், செனகல் மற்றும் கட்டார் ஆகிய மூன்று நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

# இஸ்ரேலிய கூட்டணி அரசுக்குள் நெருக்கடி



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள இஸ்ரேலிய சட்டவிரோத குடியேறிகளின் சட்ட அந்தஸ்தை புதுப்பிப்பது மற்றும் உறுதிப்படுத்தும் சட்ட மூலம் ஒன்றை நிறைவேற்றுவதில் இஸ்ரேலிய அரசு தோல்வி அடைந்துள்ளது.

இது பலவீனமான கூட்டணி அரசில் ஏற்பட்டுள்ள பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள சுமார் 500,000 இஸ்ரேலிய குடியேறிகள் இஸ்ரேலிய பிரஜா உரிமையின் நன்மைகளை அனுபவித்து வரும் அதே நேரம் அங்குள்ள சுமார் 3 மில்லியன் பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய இராணுவத்தின் அதிகாரத்தின் கீழ் வாழ்கின்றனர்.

இந்நிலையில் இஸ்ரேலிய குடியேறிகளுக்கு பிரத்தியேக சட்ட முறைமைகளை ஏற்படுத்துவதாகவே கடந்த திங்கட்கிழமை கொண்டுவரப்பட்ட சட்டமூலம் இருந்தது. எனினும் இது 58க்கு 52 என்ற வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது.

கூட்டணி அரசுக்குள் ஏற்பட்டிருக்கும் பின்னடைவு இஸ்ரேலில் புதிய தேர்தலுக்கு இட்டுச் செல்ல வாய்ப்பு உள்ளது.

# டொமினிக்கன் குடியரசின் அமைச்சர் சுட்டுக்கொலை



டொமினிக்கன் குடியரசின் சுற்றாடல் மற்றும் இயற்கை வளத் துறை அமைச்சர் ஓர்லான்டோ ஜோர்ஜ் மேரா தனது அலுவலகத்தில் வைத்து நெருங்கிய நண்பரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கூட்டம் ஒன்றில் பங்கேற்றிருந்த வேளையிலேயே தாக்குதலுக்கு இலக்காகி உள்ளார். அவரது தலையில் குறைந்தது ஆறு துப்பாக்கி குண்டுகள் பாய்ந்துள்ளன. ஜனாதிபதி பேச்சாளர் ஒருவர் என கூறப்படும் அமைச்சரின் பால்ய நண்பரான மிகுவேல் க்ரூஸ் என்பவரே தாக்குதலை நடத்தியுள்ளார். அவர் தற்போது தடுப்புக்காவலில் உள்ளார். இந்த துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் தெரியவில்லை.

55 வயதான ஜோர்ஜ் மேரா முன்னாள் ஜனாதிபதி சல்வாடோர் ஜோர்ஜ் பிளன்கோவின் மகனாவார். அவரது மனைவி டொமினிக்கன் குடியரசுக்கான பிரேசில் தூதுவராகவும் இரு மகன்களில் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் உள்ளார்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 ஜுன் 8 புதன்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
07 முதல் 10 வரை
சுபஹ் - 04.31
ளுஹர் - 12.11
அஸர் - 03.38
மஃரிப் - 06.25
இஷா - 07.42

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் வைகாசி 25
ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 9.00 - 10.30வரை
யோகம்: அமிர்தமரண யோகம்
திதி: நவமி



# உண்டியல் முறையில் பணம் அனுப்புவதை தடுக்க நடவடிக்கை

## வங்கியூடாக மாதாந்தம் 500 மில்லியன் அனுப்ப கோரிக்கை

ஷம்ஸ் பாஹிம்

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர் வங்கிகளினூடாக நாட்டுக்கு பணத்தை அனுப்பினால் டொலர் நெருக்கடிக்கு தீர்வு ஏற்படும்.மாதாந்தம் 500 மில்லியன் டொலர்களை அனுப்ப இவர்கள், முன்வரவேண்டுமென இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

உண்டியல் முறையை நிறுத்த மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,



டொலர் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக கடனற்ற வழிகளில் பணம் அனுப்பும் முறைகளை பெற வேண்டும். வெளிநாட்டில் பணிபுரிவோரூடாக கடந்த காலத்தில் 600700 மில்லியன் டொலர்கள் கிடைத்தன. அனுப்பும் பணம் வங்கிகளூடாகவன்றி வேறு வழிகளில் அனுப்பப்பட்டதால் அது 230 மில்லியன் டொலர்களாக குறைந்துள்ளது. அதனை 500 மில்லியன்களாகவாவது அதிகரிக்க வேண்டும். சரியான வழிகளில் பணம் அனுப்பப்பட்டால் அடிப்படை தேவைகளை நிறைவு செய்ய முடியும். அவ்வாறு பணம் அனுப்புவோருக்கு வரிச்சலுகை, வட்டியின்றி அல்லது குறைந்த வட்டியில் வீட்டுக் கடன், சலுகை அட்டை என்பனவும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. நம்பகத்தன்மை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறோம். உரிய விடயங்களுக்கு மாத்திரம் இந்தப் பணம் பயன்படுத்தப்படும். கருப்புப்பணம் மற்றும் மறைத்து வைக்கப்பட்டுள்ள பணத்தை வெளியில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உண்டியல் முறையை நிறுத்த மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது என்றார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு

## ரஞ்சனுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறை விதிப்பு

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டாவது வழக்கு, நேற்று (07) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



இதன்போது குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உயர் நீதிமன்றத்தினால் 05 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட, இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

புவனேக அலுவிஹாரே, எல். டி. பி. தெஹிதெனிய மற்றும் காமினி அமரசேக்கர ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழுவினரே இந்த உத்தரவை பிறப்பித்தனர்.

## யாழ், பல்கலைக்கழக மாணவர் மீது தாக்குதல் முயற்சி

மர்ம நபர்கள் மாணவர்களால் மடக்கிப்பிடிப்பு

யாழ்.பல்கலைகழகத்துக்குள் நுழைந்து மாணவர்கள் மீது தாக்குதல் நடத்திய இருவர், மாணவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



இச்சம்பவம் நேற்று முன்தினம் (06) மாலை இடம்பெற்றுள்ளது. யாழ். பல்கலைகழகத்தில் தியாகி பொன் சிவகுமாரனின் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றபோதே,இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அங்கு குழுமியிருந்த மாணவர்கள் மீது, திடீரென பல்கலைகழகத்துக்குள் நுழைந்த இருவர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதன் பின்னர் அங்கிருந்த மாணவர் மீதும் இருவரும் தாக்குதல் 06

## உயிரிழந்த நிலையில் இருவர் சடலங்களாக மீட்பு

எப்பாவல பகுதியில் சம்பவம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

எப்பாவல எந்தகல பகுதியிலுள்ள அரிசி ஆலையொன்றிலிருந்து, வெட்டுக்காயங்களுடன் உயிரிழந்திருந்த இருவருடைய சடலங்களை எப்பாவல பொலிஸார் நேற்று (07) மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு நேற்று காலை 8.00 மணியளவில் கிடைத்த தகவலொன்றுக்கமைய சம்பவயிடத்திற்கு விரைந்த எப்பாவல பொலிஸார், கூரிய ஆயுதங்களினால் அரிசி ஆலைக்குள் வெட்டிக் கொலைசெய்யப்பட்டிருந்த இருவருடைய சடலங்களை மீட்டுள்ளனர். 31 வயதுடைய எப்பாவல எந்தகல சந்தி பகுதியை வசிப்பிடமாக கொண்ட அரிசி ஆலையின் உரிமையாளரும் அதே முகவரியை வசிப்பிடமாக கொண்ட 47 வயதுடைய அவரின் நண்பருமே கொலை செய்யப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இக்கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றிருக்கலாம் என விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எப்பாவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஹஜ் கடமைக்கான ஏற்பாடுகள் குறித்து

## கலாசார அமைச்சருடன் முஸ்லிம் எம்.பிக்கள் நேற்று கலந்துரையாடல்

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவது மற்றும் இதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களை களைவது தொடர்பான முக்கிய கூட்டம், கலாசார அலுவல்கள் மற்றும் புத்தசாசன அமைச்சர் விதுரவிக்ரமநாயக்க தலைமையில் நேற்று (07) அமைச்சில் நடைபெற்றது.



நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி மற்றும் டொலர் பற்றாக்குறைக்கு மத்தியில் ஹஜ் செல்வோருக்கான ஏற்பாடுகளை செய்வது குறித்து இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இதில், சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், பைஸல் காஸிம், இஷாக் ரஹ்மான் முஷர்ரப் முதுநபீன், மர்ஜான் பளீல், ஆகியோர் கலந்து கொண்டனர்.இந்தக் கூட்டத்தில் ஹஜ் முகவர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொள்வதில் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மத்தியில், அதிகளவான நிதி வெளிப்பாய்வதில் உள்ள நிலைமைகள் பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. எனினும் இந்த கூட்டத்தில் ஹஜ்ஜுக்கு அனுப்புவது சம்பந்தமாக சாதகமான முடிவு எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு இன்று தொடக்கம் மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு கமநல சேவை திணைக்களம் ஊடாக வழங்கப்பட்ட எரிபொருள் அட்டைகளின் அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.



மாவட்டச் செயலாளர் க.மகேசனின் அறிவுறுத்தலில் கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணைந்து இந்த நவடிக்கைகளை நேற்று முதல் முன்னெடுத்தன.

மாவட்ட விவசாயிகளுக்கு எரிபொருளை வழங்குவதற்கு அவர்களது 06

## மின் கட்டணத்தை 250 வீதத்தால் உயர்த்துவதற்கு உத்தேசம்!



இலங்கை மின்சார சபை ஊழியர்களின் சம்பளத்தை வழங்குவதற்காக மின்சார கட்டணத்தை 250 வீதத்தால் அதிகரிக்க இலங்கை மின்சார சபை உத்தேசித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் (PUCSL) இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி. பெர்டினாண்டோ தெரிவித்தார்.

கட்டணங்கள் உயர்த்தப்படாவிட்டால், இலங்கை மின்சார சபை ஊழியர்களின் சம்பளம் பாதிக்கப்படுவது டன், பிற செயல்பாட்டு சிக்கல்கள் உருவாகும் என்றும் அவர் கூறினார். தற்போது, இலங்கை மின்சார சபையின் வருமானம் 277 பில்லியன் ரூ பாவாகவுள்ளதுடன், செலவுகள் 755 பில்லியன் ரூபாவாகவுள்ளது. செலவுகளை சமாளிக்க மின்கட்டணத்தை உயர்த்துவது அவசியம் என்றார். மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் நேற்று முன்தினம் (06) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பெர்டினாண்டோ, மின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பாக அமைச்சரவை விரைவில் முடிவு செய்யும் என்றார்.

கட்டணத்தை 250 வீதத்தால் அதிகரிக்க 06

## துறைமுக நகரத்தில் முதலீடு செய்ய 40 வருடங்கள் விசேட வரிச்சலுகை

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு

ஷம்ஸ் பாஹிம்

துறைமுக நகரத்தில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலீட்டாளர்களுக்கு 40 வருட காலத்துக்கு விசேட வரிச்சலுகை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ,எமக்கு போட்டியாக உள்ள நாடுகள் முதலீடுகளுக்கு அதிக வரிச்சலுகைகளை வழங்குகின்றன. நெருக்கடி நிலையிலும் முதலீடுகள் பெறுவது சிக்கலாகியுள்ளது. ஓமான் போன்ற நாடுகள் தமது 06

## அரச உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளில் பணியாற்றும் சுற்றறிக்கை விரைவில் வெளியீடு

ஷம்ஸ் பாஹிம்

அரச உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளில் பணியாற்ற அனுமதிப்பது தொடர்பான சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படுமென, இணை அமைச்சரவைப் பேச்சாளர் தொழிலாளர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். அரச உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளுக்கு தொழில்வாய்ப்புக்காகச் செல்லும்போது, அவர்களது ஓய்வூதியம் மற்றும் சேவை மூப்புக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாதவாறு சுற்றறிக்கையை வெளியிடுவதற்குத் தேவையான ஒழுங்குமுறைகளை சுகாதார அமைச்சும் பொது நிர்வாக அமைச்சும் வகுத்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களிடமிருந்து பணம் அனுப்புவதை அதிகரிப்பதன் மூலம், நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வுகாணும் வகையில் துரித வேலைத்திட்டத்தின் கீழ் அரச ஊழியர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

நிதி நெருக்கடிக்கு தீர்வு காணவே பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப் படுகின்றன.

இலவசக் கல்வியில் கற்று வெளிநாட்டில் தொழில் புரிவோருக்கு தமது நாட்டுக்கு உதவ சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. ராஜபக்ஷவினர் வீட்டுக்கு செல்லும் வரை பணம் அனுப்பமாட்டோம் என்றால் எமது நாட்டு மக்கள் இறக்கும் நிலையே ஏற்படும்.புதிய அரசாங்கத்துக்கு மக்களை வாழ வைப்பதே பிரதானமாகவுள்ளது. மருந்தின்றி மக்கள் இறக்கட்டும், நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் பிரச்சினையை தீர்க்கிறோம் என்று சில கட்சிகள் கருதுகின்றனவா?

இலங்கையர் என்ற வகையில் இந்த பிரச்சினைகளை தீர்க்க அனைவரும் பங்களிக்க வேண்டும். அரசியல் லாபம் பெற முயலக்கூடாது. அனுப்பப்படும் பணத்தை துஷ்பியோகம் செய்ய இடமளிக்க மாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார். (பா)

பாக். தேசிய பாதுகாப்பு பல்கலையின்

## பிரதிநிதிகள் பாதுகாப்பு செயலாளருடன் சந்திப்பு



ஸாதிக் ஷிஹான்

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள எயார் கொமடோர் அக்தார் இம்ரான் சத்தேசய் தலைமையிலான பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் பிரதிநிதிகள் குழு, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ணவை ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டேயிலுள்ள பாதுகாப்பு அமைச்சின் தலைமையகத்தில் (06) நடைபெற்றது.

பாதுகாப்புச் செயலாளருக்கும், பாகிஸ்தான் தூதுக் குழுவுக்கும் இடையில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, சுமுக கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் இந்த சந்திப்பை நினைவு கூரும் வகையில் பாதுகாப்புச் செயலாளருக்கும் எயார் கொமடோர் அக்தார் இம்ரான் சத்தேசயிக்குமிடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இந்தச்சந்திப்பில் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தினேஷ் நாணயக்கார மற்றும் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் முஹம்மட் சப்தார் கான் ஆகியோர் கலந்துகொண்டார்.

## 2022 நிதி ஒதுக்கீட்டு சட்டத்தை திருத்தி நிவாரணம், உற்பத்திகளுக்கு கூடுதல் நிதி

பிரதமரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

ஷம்ஸ் பாஹிம்

2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்தி பதிலாக திருத்தப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வேறு அத்தியாவசிய செயற்பாடுகளுக்கு செலவிடுவதற்கு தேவையான பணத்தை பெறும் வகையில் சட்ட திருத்தம் செய்யப்படவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடினமான பொருளாதாரச் சூழ்நிலையால் 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் நடுப்பகுதி தொடக்கம் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்கு மேலதிகமாக வேறு அத்தியாவசிய செயற்பாடுகளுக்கு செலவிடுவதற்கு நேரிட்டமையாலும், 2022 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்படும் போதுகாணப்பட்ட அமைச்சுக்களின் கட்டமைப்புக்கள் தற்போது குறிப்பிடத்தக்களவு மாற்றமடைந்துள்ளமையாலும், 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்துக்குப் பதிலாக திருத்தப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அதற்கமைய, 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவைஅங்கீகாரம் வழங்கியுள்ளது.

2022 வரவு செலவுத்திட்டத்தை அதேபோன்று செயற்படுத்த முடியாத நிலை பொருளாதார நெருக்கடியால் உருவாகியுள்ளது. பணவீக்கம் ஏற்பட்டுள்ளது. பொருட்களின் விலைகள் அதிகளவில் உயர்ந்துள்ளது. 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 255.52 | 266.96 |
| கனடியன் டொலர் | 280.59 | 291.86 |
| யூரோ | 383.09 | 393.95 |
| ஜப்பான் யென் | 2.7258 | 2.8339 |
| சிங்கப்பூர் டொலர் | 258.78 | 267.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 445.19 | 460.70 |
| சுவிஸ் பிராங்க் | 369.45 | 383.41 |
| அமெரிக்க டொலர் | 355.31 | 365.28 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 955.66 | கட்டார் ரியால் | 98.64 |
| குவைத் டினார் | 1,177.52 | சவூதி ரியால் | 96.05 |
| ஓமான் ரியால் | 935.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.09 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 25ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 07

## குறள் தரும் சிந்தனை



ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு

ஆக்கமும் அழிவும் சொல்லால் ஏற்படும் என்பதால், எந்தவொரு சொல்லிலும் குறைபாடு நேராமல் கவனமாக இருக்க வேண்டும்.

# நாட்டின் பல பகுதிகளில் மீண்டும் தலைதூக்கும் டெங்கு அபாயம்!

நாட்டில் கடந்த சில வாரங்களாக மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றது. இக்காலநிலையில் ஒரிரு நாட்கள் தொடர் மழைவீழ்ச்சி உள்ளது. இன்னும் சில நாட்கள் இடையிடையே மழை கிடைக்கப் பெறுகின்றது. இம்மழை வீழ்ச்சி காலநிலையின் ஊடாக நாட்டின் பல பிரதேசங்களும் மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொள்கின்றன.

மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறுவது பெரிதும் நன்மை பயக்கக் கூடியதாகும், என்றாலும் மழை வீழ்ச்சியுடன் சேர்த்து மனிதனின் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடிய நுளம்புகளும் பல்கிப் பெருகக் கூடியனவாக உள்ளன. அவற்றில் டெங்கு வைரஸைக் காவிப் பரப்பும் நுளம்புகள் குறிப்பிடத் தக்கவையாகும்.

நுளம்பானது தெளிந்த மழைநீர் தேங்கும் இடங்களில் பல்கிப் பெருகக்கூடிய இயல்பைக் கொண்டுள்ளது. அதன் காரணத்தினால் தற்போதைய மழைக் காலநிலை இவ்வகை நுளம்பின் பெருக்கத்திற்கு சாதகமாக அமைந்துள்ளது. உயிராபத்து மிக்க டெங்கு வைரஸைக் காவிப் பரப்பும் நுளம்புகள் பல்கிப் பெருகுவதற்கு துணை போகாத வகையில் சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்திருக்க வேண்டும். இதனைத் தமது பொறுப்பாகவும் கடமையாகவும் ஒவ்வொரு குடிமகனும் கருதுவது அவசியம்.

இலங்கையானது வருடாவருடம் மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நாடாக உள்ளது. அதனால் வருடா வருடம் டெங்கு நுளம்பு பல்கிப் பெருகக் கூடியதாக விளங்குவதோடு, ஆயிரக்கணக்கானோரைப் பாதிக்கக் கூடியதாகவும் விளங்குகிறது. பலரது உயிரிழப்புக்கும் காரணமாக அமைந்து விடுகின்றது இவ்வைரஸ்.

அந்த வகையில் கடந்த அரை நூற்றாண்டு காலமாக டெங்கு வைரஸின் அச்சுறுத்தலை இந்நாடு வருடாந்தம் அவ்வப்போது எதிர்கொண்ட வண்ணமுள்ளது. குறிப்பாக இந்நோயின் தாக்கத்திற்கு அதிகூடியளவானோர் உள்ளான ஆண்டாக 2017 விளங்குகின்றது. இவ்வாண்டில் மாத்திரம் ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 101 பேர் இந்நோய்க்கு உள்ளாகினர். அவர்களில் 300 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

இந்நோய்க்கு வருடா வருடம் சராசரியாக இருபதாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்நாட்டில் உள்ளாகக் கூடியவர்களாவும் அவர்களில் சிலர் உயிரிழக்கக் கூடியவர்களாகவும் உள்ளனர் என்பதை தொற்று நோயியல் தடுப்பு பிரிவின் தரவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

டெங்கு வைரஸ் நோய் உயிராபத்து மிக்கதான போதிலும், அதன் பெருக்கத்தையும் தாக்கத்தையும் முழுமையாக கட்டுப்படுத்தித் தவிர்த்துக் கொள்ளலாம். அத்தோடு இந்நோய்க்கு உள்ளானால் ஆரம்ப கட்டத்திலேயே நோயை உரிய முறையில் அடையாளம் கண்டு சிகிச்சை பெற்றுக் கொண்டால் அதனை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளவும் முடியும்.

இருந்தும் கூட மழையுடன் கூடிய காலநிலை, மழைநீர் தேங்கக் கூடிய வகையிலான கழிவுப் பொருட்கள், அவற்றில் நுளம்புகள் பல்கிப் பெருகுதல் என்பன குறித்து மக்களிடம் தொடரான விழிப்புணர்வும் முன்னெச்சரிக்கையும் இல்லாதிருப்பதால் அதனைத் தமக்கு சாதகமாக டெங்கு நுளம்புகள் பயன்படுத்திக் கொள்கின்றன. அதனை அடிப்படையாகக் கொண்டு டெங்கு நோய் அச்சுறுத்தல் மழைக் காலநிலையுடன் சேர்ந்து அவ்வப்போது தலைதூக்கி வருகின்றது.

இந்நிலையில் டெங்கு ஒழிப்புக்கான தேசிய வேலைத்திட்டத்தின் சமூக மருத்துவ அதிகாரி டொக்டர் இந்திக வீரசிங்க, 'தற்போதைய மழைக்காலநிலையுடன் சேர்த்து டெங்கு நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதை சில பிரதேசங்களில் அவதானிக்க முடிகிறது. அதனால் மழைநீர் தேங்க முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்திருப்பதில் ஒவ்வொருவரும் விஷேட கவனம் செலுத்த வேண்டும் என்றும் இந்த நாட்களில் இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் காணப்படுமாயின் தாமதியாது மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார். இவ்வாறான ஏற்பாடுகளின் ஊடாக டெங்கு நோயின் அச்சுறுத்தலையும் தாக்கத்தையும் கட்டுப்படுத்தி தவிர்த்துக் கொள்ள முடியும்.

ஆகவே இந்நோய்த் தவிர்ப்பு தொடர்பில் முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புணர்வுடனும் செயற்படுவது அவசியம். அப்போது டெங்கு நோய் ஒரு அச்சுறுத்தலாகவே இருக்கப் போவதில்லை. அதற்கு ஏற்ப செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதே இன்றைய அவசரத் தேவையாக உள்ளது.

editor.tkn@lakehouse.lk

# வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா



இலங்கையின் பழம்பெரும் திருத்தலங்களில் ஒன்றாக மத்திய மாகாணம் வத்துகாமம் நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தானம் விளங்குகிறது. இத்தேவஸ்தானம் யாழ்ப்பாணம் இணுவிலை பிறப்பிடமாகவும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வத்துகாமத்தில் உயர்பதவி வகித்தவருமான ஸ்ரீ கனகசபை வைத்திலிங்கம் அவர்களால் நிர்மாணிக்கப்பட்டதாகும். தமது காலஞ் சென்ற புதல்வி மூத்தம்மாள் எனும் முத்தாச்சியின் நினைவாகவும், அம்பாளின் தரிசன அருள் பெறவும் அவர் இந்த ஆலயத்தை அமைத்தார்.

கட்டுகலை பிள்ளையார் தேவஸ்தான நிர்மாணப் பணிகள் நிறைவுற்ற போது அங்கிருந்த சிற்பாசிரியர்களை அழைப்பித்து ஆச்சாரி, சுடலைமுத்து ஆச்சாரி, கதிர்வேல் ஆச்சாரி முதலிய விஸ்வகர்தாக்களை கொண்டு எழுந்தருளி விக்கிரகங்களையும் செய்து பிரதிஷ்டை உபயங்களையும் செய்து ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. பலரும் நன்கொடைகளையும் வழங்கி ஊக்குவித்தனர்.

மார்லேண்ட் அமுணுகம தோட்டம் காணியை தேவஸ்தானத்திற்கு எட்வட் என்பவர் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வத்துகாமம் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தை 1887ஆம் ஆண்டு அமுனுவத்தை என்ற இடத்தில் கனகசபை வைத்தியலிங்கம்பிள்ளை, ச.ந. சீனி ஆச்சாரியார், எஸ். முனியாண்டி தேவர், வி. சின்னையா, பி. கதிர்வேல் ஆச்சாரி ஓவசியார் ஆகியோர் இணைந்து புளியமரத்தடியில் இரும்புத் தூண்களை கொண்டு அமைத்தனர்.

1905ஆம் ஆண்டு மண்டாலாபிஷேகம் நடைபெற்றது. 1910ஆம் ஆண்டு செப்டெம்பர் 16ஆம் திகதி அனுமுவத்தை, கொரக்காதண்ட காணியையும் கோயிலுக்கு இணைந்தனர். 1913 ஆம் ஆண்டு செல்லம்பிள்ளை, நாகலிங்கம், வைத்தியலிங்கம் ஆகியோர் நிர்வாகித்து வந்தனர். 1926ஆம் ஆண்டு கனகசபை வைத்தியலிங்கம் காலமானார். அவரின் மகன் செல்லம்பிள்ளை 1929.05.19 நிர்வாகத்தை ஏற்றார். அவர் தலைமையில் 1927.06.09 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1932 முதல் செல்லம்பிள்ளை ஜோதிலிங்கம் தலைமையில் நிர்வாகம் செயற்பட்டது.

2013.03.13ஆம் திகதி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் சரஸ்வதி அறநெறி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 2020.5.21 கொவிட் தொற்று காரணமாக பஞ்சரத பவனி ரத்து செய்யப்பட்டு அம்பாள் தேர்பவனி மட்டும் வீதி உலாவர சுகாதார திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டது. அத்தோடு ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளபோது பொலிசார் தேர் பவனிக்கும் ,பக்தர்களுக்கும் அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டது. 2021.03.15 பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. மீண்டும் 4வது மகாகும்பாபிஷேகம் 2022.06.10 ஆம் திகதி நடைபெற உள்ளது.

எஸ்.ராமதாஸ் ஜே.பி
(சைவ அபிமானிக சங்க பிரசார உத்தியோகத்தர்)

# பீதி கொள்ள வேண்டியதா குரங்கு அம்மை நோய்?

## குரங்கு அம்மை தற்போது சர்வதேச அளவில் பேசப்படுகின்ற ஒரு நோய் ஆகும். இந்நோய் பற்றி மக்கள் மத்தியில் உள்ள தவறான சிந்தனைகளுக்கு விளக்கம் தருகின்றார் குழந்தைநல மருத்துவ நிபுணர் டொக்டர் பீ.எம். அர்சாத் அஹமட்

சமீப காலமாக மேற்கு நாடுகளில் பரவி வருகின்ற நோய் குரங்கு அம்மை ஆகும். குரங்கம்மை நோய் குறித்து நமது ஊடகங்களில்தொடர்ச்சியாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. வழமை போலவே பெரும்பாலும் அச்சமூட்டும், மிகைப்படுத்தப்படும் செய்திகளாகவே இவை காணப்படுகின்றன.

செய்திகள், தொடர்பாடல்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என மலிந்து காணப்படும் இந்தக் காலத்தில்குரங்கு அம்மை பற்றி பலரும் பலவாறு கருத்துகளை முன்வைக்கின்றனர். இதனால் செய்திகளை வெளியிடும் ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் என்பன தங்களுக்கு ஏற்றால் போல் தகவல்களை வழங்க துணிந்து விட்டன. இது பற்றி மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய ஐந்து அடிப்படைகள் உள்ளன என்கிறார் டொக்டர் அர்சாத் அஹமட்.

1. இந்த நோய்த் தொற்று மனிதனுக்கு ஒன்றும் புதிய தொற்று கிடையாது. *NOT a novel infection*. மனிதர் மத்தியில் முதன் முதலில் இந்த நோய்த் தொற்று 1970 களிலே கொங்கோவில் கண்டறியப்பட்டிருக்கிறது.



2. தற்போதும் நமது பகுதிகளில் நோய்த் தொற்றுப் பரவலை ஏற்படுத்தும் *Chicken pox* (அம்மை நோய்) வைரைஸ் குடும்பத்தை சேர்ந்ததுதான் இந்த *Monkey Pox*.

3. இது நேரடியாக மனிதர்களிடம் இருந்து இன்னொரு மனிதருக்கு பரவ மாட்டாது. குரங்கு, எலி, அணில் போன்ற விலங்குகளிடம் நேரடி தொடர்பில் இருப்பவர்களுக்கே இந்த நோய்த் தொற்று ஏற்படும்.

4. முதன் முதலில் தடுப்பூசி மூலமாக உலகை விட்டு விரட்டியடித்த பெரியம்மை *small pox* நோய்க்கு எதிரான வக்சீன்கள் இந்த *Monkey Pox* ஐயும் தடுக்கும் ஆற்றல் கொண்டவையாக இருக்கின்றன.



5. கொரோனா போன்று ஒரு *Pandemic* பெருந் தொற்றாக உருவெடுக்கும் சாத்தியம் இந்த வைரஸூக்குஇல்லை.

மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளிலிருந்து பல்வேறு நாடுகளுக்கும் செல்லும் உல்லாச/ நாடுகாண் பயணிகள் மூலம் இந்த தொற்றானது பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் இதற்கு முன்னரும் பல தடவை கண்டறியப்பட்டிருக்கின்றது.

அந்த வரிசையில், இந்த வருட மே மாதம் முதல் இதுவரை 12 இற்கு மேற்பட்ட நாடுகளில் 100 தொற்றாளர்கள் வரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும், இந்த முறை இவர்களில் பலர் நோய்த் தொற்றுள்ள ஆபிரிக்க நாடுகளோடு நேரடி தொடர்பின்றி தொற்றுக்குள்ளாகியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. இதை *CWC* என்று சொல்வோம்( *Clusters Without Contacts*). ஆகவே இந்த வைரஸ், மிருகங்களிடம் இருந்து மனிதனுக்கு தொற்றுவது போல ஒரு மனிதனிடம் இருந்து மற்றொரு மனிதனுக்குப் பரவுவதற்கு பாலியல் தொடர்பு போன்றதொரு நெருங்கிய தொடர்பு (*Close Contact intimacy*) தேவை என்று இப்போது அறியப்பட்டிருக்கிறது.

**குரங்கு அம்மை நோயின் அறிகுறிகள்:**

சிக்கன் பொக்ஸ் அம்மையை போன்ற நோய் அறிகுறிகளே இதற்கும் உள்ளன. இந்த வைரஸ் மனிதனுக்கு தொற்றியதிலிருந்து அறிகுறிகளை ஏற்படுத்த எடுத்துக் கொள்ளும் காத்திருப்புக் காலம் (*Incubation Period*)

6 முதல் 21 நாட்களாகும். அதன் பின்னர் முதல் ஐந்து நாட்களில் காய்ச்சல், தலைவலி, உடல் சோர்வு, உடல் வலி போன்றவை ஏற்படலாம். அதுபோல கழுத்து, கமக்கட்டு(*axilla*), கால்கவுடு (*inguinal*) போன்றவற்றில் நெறி கட்டுதல்/ வீங்குதல் *LYMPHADENOPATHY* உருவாகும்.

பெருமளவான ஊடங்களில் காட்டப்படும், நம்மை பயமுறுத்தும் படங்கள் போன்ற, அம்மை கொப்புளங்கள் தோலில் தோன்றும். இது முகம் மற்றும் கைகால்களில் அதிகமாகக் காணப்படும். அம்மை கொப்புளங்களை விட கொஞ்சம் பெரிதாகவும் அதிகமாகவும் காணப்படும். இவை சாதாரணமாக 2 வாரங்களுக்குள் தானாக குணமாகிவிடும். இந்தக் கொப்புளங்களும் சிக்கன் பொக்ஸ் போலவே பெரும்பாலும் தழும்பின்றி மறையும்.

ஆகவே இதற்கு அச்சப்பட ஒன்றும் இல்லை. இருப்பினும் தொற்றைத் தவிர்க்கும் எளிய வழிகள் காணப்படுகின்றன.

## தொற்று ஏற்படாமல் தடுப்பதற்கான வழிவகைகள் எவை?

1. தொற்று அடைந்தவர்களை தனிமைப்படுத்தல். அவர்கள் உபயோகித்த துணி, துவாய் போன்ற பொருட்களை உபயோகிக்காமல் இருத்தல்.

2. தொற்றுக்குள்ளானவரின் வீட்டில் வசிப்பவர்களும் குறைந்தது 2 தொடக்கம் 3 வாரங்கள் தங்களை முன்னெச்சரிக்கையாக தனிமைப்படுத்திக் கொள்வது சிறந்தது.

3.எப்போதும் சுகாதார வழிமுறைகளை கடைப்பிடித்தல்.

ஆகவே குரங்கம்மை குறித்து அதீத அச்சம் தேவையில்லை. நம்மில் பெரும்பாலானவர்களுக்கு இது சாதாரண அம்மை நோய் போன்று வந்து தானாகவே குணமடைந்து விடும். எந்த மருத்துவ பராமரிப்பும் தேவைப்படாது.

எனினும் சிறுவர்கள், வயோதிபர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குன்றியவர்களிடத்திலும் சற்று வீரியத்துடன் நோய்த் தொற்று உருவாகலாம். எனவே முன்னெச்சரிக்கை அவசியம். ஏனெனில் இதுவரை தொற்றுக்கு உள்ளானவர்களிடையே மரண வீதத்தையும் இந்த குரங்கு அம்மை வெளிப்படுத்திஇருக்கிறது.எனவே எல்லாவற்றிலும் முன்னெச்சரிக்கையும், அவதானமும் அவசியமாகும்.



இவ்வாறு விளக்கம் தருகின்றார் விளக்கம் தருகின்றார் குழந்தை நல மருத்துவ நிபுணர் டொக்டர் பீ.எம். அர்சாத் அஹமட்.

றிசாத் ஏ. காதர்
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# லண்டனில் நடைபெறவுள்ள மலையக இலக்கிய மாநாட்டில் ஓவியக் கண்காட்சி 2022

கல்வித்துறையில் என்றுமில்லாத எழுச்சியுடன் முன்னேறி வரும் மலையகத்தில் ஓவியக் கலையில் விழிப்பு ஏற்பட வேண்டும் என்ற முனைப்பில் லண்டன் விம்பம் அமைப்பு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வந்திருக்கிறது. நவீன ஓவியக்கலையின் முன்னோடியான அ.மாற்கு நினைவாக 2019 ஆம் ஆண்டு அனைத்திலங்கை ரீதியில் நடத்தப்பட்ட 15 வயதுக்குக் குறைந்த பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் மலையக மாணவர்கள் மீது விஷேட அக்கறை செலுத்தப்பட்டது.

பரவலாக பெருமளவு பாடசாலைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அக்கறையே அதுவாகும். இந்த ஓவியப் பயிற்சி நெறிகளுக்குப் பொறுப்பாயிருக்கும் பீடாதிபதி தர்மதாஸ் (கார்ட்டுனிஸ்ட் செல்வன்) மிகுந்த ஒத்துழைப்புத் தந்து ஹற்றன், நோர்வூட், டிக்கோயா ஆகிய இடங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களிடமிருந்து சிறந்த ஓவியங்களைப் பெற்றுத் தந்தார்.



எதிர்வருங் காலங்களில் மலையகத்தில் மிகப் பரந்த அளவில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உதவியுடன் ஓவிய விழிப்புணர்வுச் செயற்திட்டங்களை லண்டன் விம்பம் அமைப்பு முன்னேடுக்கவிருக்கிறது. ஓவிய உபகரணங்களை வழங்கியும் சிறந்த பரிசில்களை வழங்கியும் மலையகம் எங்கும் இந்த ஓவியப் போட்டிகளை நடத்தவிருக்கிறது. பதினைந்து வயதுக்கும் குறைந்த மலையக மாணவர்களின் ஓவியங்கள் லண்டன் மலையக இலக்கிய மாநாட்டின் ஓவியக் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன. அந்த ஓவியங்களில் சில வற்றை இங்கு காணலாம்.

லண்டனில் நடைபெறவுள்ள மலையக இலக்கிய விழாவில் இலங்கையிலிருந்து மூத்த ஊடகவியலாளரும், எழுத்தாளருமான எச்.எச். விக்ரமசிங்கவும் கலந்து கொள்கின்றார். லண்டனில் நடைபெறுகின்ற ஓவியக் கண்காட்சியை ஊடகவியலாளர் விக்ரமசிங்க அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார்.

அமரர் சி.வி. வேலுப்பிள்ளை தினகரன் பத்திரிகையில் அக்காலத்தில் எழுதிய கட்டுரைகளை நித்தியானந்தன், விக்ரமசிங்க ஆகிய இருவரும் தற்போது பதிப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# அக்கரபத்தனையில் இரண்டு யுவதிகளை 06 நாட்களாக காணவில்லை

**ஹற்றன் விசேட நிருபர்**

விறகு தேடச் சென்ற இரண்டு யுவதிகளை கடந்த 06 நாட்களாக காணவில்லை என அக்கரபத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காணாமல் போனவர்கள் அக்கரப்பத்தனை சென்மார்கட் தோட்டத்தில் வசிக்கும் சிவக்குமார் ரூபிகா வயது 15, சிவலிங்கம் ஸ்ரீதேவி வயது 18 ஆகிய இரண்டு யுவதிகள் என பொலிஸார் தெரிவித்தனர்.





கடந்த 2 ஆம் திகதி காலை 11 மணியளவில் வீட்டில் இருந்து விறகு சேர்க்க சென்றவர்கள் மீண்டும் வீடு திரும்பவில்லை என்றும், இதுவரை இவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் தெரிவித்தனர்.

இவர்களின் தாய், தந்தையர்கள் மற்றும் உறவினர்கள் கொழும்பு உட்பட சகல இடங்களிலும் தேடிய போதிலும், இதுவரை கிடைக்கவில்லை. அக்கரப்பத்தனை பொலிஸ் அதிகாரிகள் தொடர்ந்து தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த யுவதிகள் தொடர்பான தகவல்கள் இதுவரை கிடைக்காத காரணத்தினால் தோட்டத்தில் உள்ள பொதுமக்கள் தொடர்ந்து வேலைக்கு செல்லாமல் இருக்கின்றனர். அத்தோடு, குறித்த 2 யுவதிகளும் தோட்டத்தில் தொழிலாளியாக தொழில் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொகவந்தலாவ கெம்பியன் கீழ் பிரிவு தோட்டத்தில் பாரிய மண்சரிவு

## 22 பேர் இடம் பெயர்வு



**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ கெம்பியன் கீழ் பிரிவு தோட்டத்தில் 03ஆம் இலக்க லயன் குடியிருப்பின் 11 குடியிருப்புகளை கொண்ட தொடர் லயன் குடியிருப்புகளுக்கு அருகாமையில் பாரிய மண்சரிவு காரணமாக நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 22பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் குறித்த மேலும் தெரியவருவதாவது,

சம்பவத்தில் எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை. மண்சரிவு ஆபாயம் காரணமாக தற்காலிமாக கெம்பியன் தோட்டத்தில் உள்ள உத்தியோகத்தர்களின் விடுதிகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதில் 06 ஆண்கள், 05பெண்கள், 11சிறுவர்கள் உள்ளடங்கலாக மொத்தம் 22 பேர் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தம் தொடர்பில் பிரதேசத்திற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் ஊடாக அம்பகமுவ பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த தோட்டத்தில் இதற்கு முன்பும் மண்சரிவு அபாயம் ஏற்பட்ட போதும் மலையக அரசியல் வாதிகள் பார்வையிட்டு சென்றார்களே தவிர எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பண்டாரவளை, கெப்பெட்டிபொல

# பொருளாதார மத்திய நிலையங்களில் மரக்கறி கொள்வனவில் பெரு வீழ்ச்சி

**ஹாலிஎல விசேட நிருபர்**

பண்டாரவளை மற்றும் கெப்பெட்டிபொல பொருளாதார மத்திய நிலையங்களில் பல வாரங்களாக மரக்கறிகளை பெற்றுக்கொள்ளும் வியாபாரிகள் மற்றும் மரக்கறிகளை கொள்வனவு செய்யும் வியாபாரிகளின் எண்ணிக்கை 50 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளமையினால் மரக்கறி விலைகள் பாரியளவில் அதிகரித்து வருவதாக வர்த்தகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

வாரக்கணக்கில் விலை உயர்ந்துள்ள காய்கறிகளில் தக்காளி கிலோ ரூ.600, பீன்ஸ் ரூ.550, வெண்டிக்காய், கத்தரிக்காய், பாகற்காய் போன்ற காய்கறிகள் கிலோ ரூ.300 ஆக மொத்த விலையில் விற்பனையானதும் காணப்பட்டது.

எரிபொருள் பற்றாக்குறை, விவசாய இரசாயனங்கள் மற்றும் உரங்களின் பற்றாக்குறை மற்றும் அதிகளவான விவசாயிகள் மரக்கறி பயிரிடுவதை விட்டு வெளியேறுவது போன்ற பல காரணங்களால் பொருளாதார நிலையத்திற்கு காய்கறிகளின் வரத்து நாளுக்கு நாள் குறைந்து வருவதாக வியாபாரிகளும் விவசாயிகளும் சுட்டிக்காட்டுகின்றனர்.

# பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

**கண்டி தினகரன் சுழற்சி நிருபர்**

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிமுதல் உபவேந்தர் காரியாலயம் அமைந்துள்ள செனட் கட்டடத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர் அனைவருக்கும் விடுதி வசதி கோரியும், விடுதிகளை சரிவர சீர்செய்து தருமாறும், தரமான உணவு வசதி, கற்றல் சூழலை ஏற்படுத்தி தருமாறும், மாணவர் மீதான பலிவாங்கல்களை நிறுத்துமாறும் கோரியே ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் செய்ததோடு பொது கூட்டமும் நடாத்தினர். பொது கூட்ட முடிவில் 1.30 மணி முதல் இச்செய்தி எழுதும் வரை தொடர்ந்தும் உபவேந்தர் காரியாலயத்திற்கு செல்லும் வழியிலும், செனட் கட்டடத்தை சுற்றியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அமர்ந்திருந்தனர்.

அரசின் அடிவருடிகளான பல்கலைக்கழக நிர்வாகம் ஒன்லைன் கல்வியை நிறுத்தி நேரடி விரிவுரைகளை நடத்த வேண்டும்.எமது இக்கோரிக்கைகள் நீண்டகாலமாக முன்வைத்த தொன்றாகும். ஆனால் பல்கலைக்கழக நிர்வாகம் இதனை செவிமடுப்பதில்லை எனவும் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

# மலையக மண்ணுக்கு பெருமை சேர்த்த துரைசாமி விஜிந்த்;

## இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் வாழ்த்து





நேபாளத்தில் இடம்பெற்ற Indo Nepal international விளையாட்டுப் போட்டிகளில் பங்குப்பற்றி மலையக மண்ணுக்கு பெருமை சேர்த்த பூண்டுலோயாவை சேர்ந்த துரைசாமி விஜிந்த் அவர்களுக்கு இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் இடம்பெற்ற Indo Nepal international விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை சார்பாக மலையகத்தை சேர்ந்த துரைசாமி விஜிந்த் பங்குப்பற்றி உயரம் பாய்தலில் (master athletic) தங்கப் பதக்கத்தையும் வேக நடை போட்டியில் வெள்ளி பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

இவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, மேலும் பல போட்டிகளில் பங்கேற்று பல சாதனைகளை நிலைநாட்ட வேண்டும் என்பதோடு, அயராது முயற்சி செய்து மலையகத்திற்கும் எமது நாட்டிற்கும் பெருமை சேர்த்தமைக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் என தெரிவித்து கொள்கிறேன்.





எதிர்கால உணவுத் தேவைக்கு பங்களிப்புகள் வழங்கும் பொருட்டு, அரச நிறுவனங்களின் வளாகங்களில் வீட்டுத்தோட்டம் அமைக்க எடுத்துள்ள தீர்மானத்திற்கு அமைவாக கண்டி மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று முன்தினம் (06) முதல் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது. படங்கள்: எம்.ஏ.அமீனுல்லா

# அதிக விலைக்கு எரிபொருள் விற்பனை செய்த பெண் கைது

**ஹாலி எல விசேட நிருபர்**

நாட்டில் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ளநேரத்தில் அனுமதியின்றி எரிபொருளை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்த பெண்ணொருவரை எம்பிலிப்பிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய கங்கேயாய பிரதேசத்தில் வசிக்கும் 52 வயது பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்படும் போது அந்த பெண்ணிடம் 42 லீட்டர் பெட்ரோல் மற்றும் 28 லிட்டர் டீசல் இருந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் எரிபொருள் தொகையை எரிபொருள் நிலையத்தில் விற்கும் விலையை விட அதிக விலைக்கு சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்த போது கைது செய்யப்பட்டுள்ளார்.

# அரச, தனியார் போக்குவரத்து பஸ்களுக்கு இன்று முதல் டிப்போக்கள் மூலம் எரிபொருள்

## அமைச்சர் கஞ்சன விஜேசேகர சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



அரசாங்க மற்றும் தனியார் துறை பொது போக்குவரத்து பஸ்களுக்கு இன்று முதல் இ.போ.ச டிப்போக்கள் மூலம் எரிபொருள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி மின்சக்தி அமைச்சு கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன் பாடசாலை வேன்கள், சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்ட பொது போக்குவரத்து ஆகியவற்றுக்கும் இ.போ.ச டிப்போக்கள் மூலம் எரிபொருள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கும் எரிபொருள் வழங்குவதில் முக்கியத்துவம் வழங்கப்படும் என தெரிவித்த அவர், நாடளாவிய 24 மீன்பிடி துறைமுகங்கள் மூலம் மீனவர்களுக்கு எரிபொருள் வழங்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் விவசாயிகளுக்கான எரிபொருள் இன்று முதல் தட்டுப்பாடின்றி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று அமைச்சு தொடர்பில் விசேட உரையொன்றை ஆற்றிய அமைச்சர், அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

ஜூன் மாதத்துக்கான எரிபொருள் இறக்குமதிக்காக 557 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது.கடந்த மூன்று மாதங்களில் இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் 700 மில்லியன் டொலர் எரிபொருளுக்காக செலவிடப்பட்டுள்ளது. அதன் மீதி தொகையையும் எரிபொருள் கொள்வனவுக்கு செலவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் 500 மில்லியன் நிதிக்கான அனுமதி கிடைத்துள்ளது. அவர்களின் அனுமதிக்கிணங்க அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.கடந்த மாதங்களோடு ஒப்பிடுகையில் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் பெருமளவு எரிபொருள் உபயோகம் இடம்பெற்றுள்ளது. அதற்கிணங்க 5400 மெட்ரிக் தொன் டீசலும் 3400 மெட்ரிக் தொன் டீசலும் உபயோகப் படுத்தப்பட்டுள்ளன. மேலும் இரண்டு எரிபொருள் கப்பல்கள் 8,9ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையும்.

# பயன்படுத்தப்படாத அரச காணிகளை குறுகிய கால விவசாய செய்கைக்கு வழங்க தீர்மானம்

## அமைச்சர் மஹிந்த அமரவீர சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

தேசிய உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், பயன்படுத்தப்படாத இலட்சக்கணக்கான ஏக்கர் அரச காணிகளை குறுகிய விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை அடுத்த சிறுபோக நெல் உற்பத்திக்கான இரசாயன உரத்தை கொள்வனவு செய்வதற்கு உலக வங்கியின் உதவியை பெற்றுக்கொள்ள பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதுடன் அதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

அதேவேளை, நாட்டில் தற்போது ஒக்டோபர் மாதம் வரை அரிசி கையிருப்புள்ள நிலையில் எதிர்வரும் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்துக்கான அரிசியை இறக்குமதி செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவித்த அவர், அது தொடர்பில் வர்த்தக அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படுமானால் அதற்குப் பதிலாக பயறு போன்ற மாற்றுப் பயிர்ச்செய்கைகளை முன்னெடுக்கும் வகையில் பாவிக்கப்படாத விவசாய காணிகளை பயன்படுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விஷேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் அவர் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது உலக உணவு ஸ்தாபனம், உணவு நெருக்கடி தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளது. அனைத்து நாடுகளும் இதற்கு முகம்கொடுக்க நேரிடும் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. இதில் எமது நாட்டுக்கு கடுமையான தாக்கம் ஏற்படலாம்.

எவ்வாறாயினும், சிறுபோகத்தை சாத்தியமானதாக முன்னெடுப்பதற்கு வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ளோம்.

அதன் பிரதிபலனாக விவசாயத்துறையினர் அதிகளவில் பயிர் செய்ய முயற்சிகளை முன்னெடுக்கின்றனர்.

இந்நிலையில், உரம் தொடர்பான பிரச்சினைகள் எழுந்துள்ளன. இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து உரம் கிடைக்கப் பெற்றுள்ளன.அதனை விரைவில் விவசாயிகளுக்கு நிவாரண விலைகளில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன்மூலம் அதிகளவில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.சேதனப்பசளை பயன்பாட்டையும் நிறுத்தாது முன்னெடுத்துச் செல்வதே எமது நோக்கம்..

இப்போது கையிருப்பிலுள்ள அரிசி, நெல் மற்றும் அறுவடைகள் ஒக்டோபர் மாதம் வரையில் போதுமானது.எனினும் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்காக அரிசியை இறக்குமதி செய்ய நேரிடலாம்.

உலக நாடுகள் பலவும் உணவு நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளதால், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை சில நாடுகள் நிறுத்தியுள்ளன. எனினும், நாம் இராஜதந்திர ரீதியில் நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம். விவசாயிகள் எந்தவித பயமுமின்றி தமது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். அதற்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் அரசாங்கம் பெற்றுக் கொடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கட்சி தலைவர்கள் முன்வைத்த திருத்தங்கள் குறித்து அடுத்த அமைச்சரவையில் ஆராய்வு

**ஷம்ஸ் பாஹிம்**

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பில் தொடர்ந்து பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுவதால், கட்சி தலைவர்கள் முன்வைத்த திருத்தங்கள் குறித்து அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் ஆராயப்படுமென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

21 ஆவது,திருத்தத்துக்கு அனைவரதும் ஒத்துழைப்பை பெறுவது கடினமானது. நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்‌ஷ சகல கட்சிளுடனும் இது தொடர்பில் பேசி வருகிறார். தேவையான திருத்தங்களை உள்ளடக்கிய யோசனை நேற்று அமைச்சர்களுக்கு கிடைத்தது. பல்வேறு கட்சி தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களில் கிடைத்த திருத்தங்கள் இதில், உள்ளடக்கப்பட்டுள்ளன. அடுத்த அமைச்சரவையில் இது குறித்து ஆரயப்படும். இந்நிலையிலே, ஆளும் தரப்பு எம்.பிக்களின் கூட்டத்தில் பல்வேறு மாற்றுக் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இவை பேச்சுவார்த்தை மட்டத்தில்தான் உள்ளது. அரசாங்க அமைச்சரே, ஜனாதிபதியின் கோரிக்கைப்படி இதனை முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## யூரியா இறக்குமதிக்கு

இதேவேளை, 2022/23 பெரும்போகத்திற்காக விவசாயிகளுக்கு 150,000 மெற்றிக் தொன் யூரியா, 45,000 மெற்றிக் தொன் MOP (மியூரேட் ஒஃப் பொஸ்பேட்) மற்றும் 36,000 மெற்றிக் தொன் TSP (ட்ரிபல் சுப்பர் பொஸ்பேட்) உரங்கள் தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த உரத் தொகையை வரையறுக்கப்பட்ட லங்கா உர நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் உர நிறுவனம் ஊடாக இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## பிரதமருக்கும் எனக்கும்...

இலங்கை மத்திய வங்கி அறிந்துள்ளதாக மத்திய வங்கி டுவிட் செய்துள்ளது.

மேலும், "மத்திய வங்கி ஆளுநர் இத்தகைய சுற்றுகளை கடுமையாக நிராகரிப்பதோடு, பிரதமரும் ஆளுநரும் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கு தொடர்ந்தும் நல்லிணக்கத்துடன் செயற்படுகின்றனர் என்றும் இந்த டுவிட்டர் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரு வருடத்துக்கு சம்பளம் பெறாது...

கடனாக பெற வேண்டும். இந்த நிலையால் பாரிய நிதி நெருக்கடி ஏற்பட்டது. சிறிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் எந்த அமைச்சரும் சம்பளம் பெறாமல் சேவையாற்ற அமைச்சரவை அனுமதி வழங்கியது. நாட்டு மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்படும் போது வருட காலத்தினுள் நாட்டுக்காக அமைச்சர்கள் அர்ப்பணிப்பு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. சம்பளம் பெறாமல் ஒருவருடம் பணியாற்ற அமைச்சரவை பத்திரமொன்றை பிரதமர் சமர்ப்பித்தார். அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது. நான் அமைச்சராக சலுகைகள் பெறவில்லை. எரிபொருளுக்காக அமைச்சர்களுக்கு சலுகை வழங்கப்படுகிறது. பயணம் செல்ல எரிபொருள் தேவை. சம்பளத்தை தான் அமைச்சர்கள் பெறாதிருக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

## அஜித் கப்ரால் சரீரப் பிணையில்...

செய்த தனிப்பட்ட முறைப்பாட்டையடுத்து, இந்த வழக்கு (07) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அஜித் நிவார்ட் கப்ரால் நீதிமன்றத்தில் நேற்று கோட்டை நீதிமன்றத்தில் ஆஜராகியதை அடுத்து அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். 65 மில்லியன் அமெரிக்க டொலரை முறைகேடாக பயன்படுத்தினார் என அவருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து பிரதமர்...

வெற்றி பெற்றுள்ளார்.

இங்கிலாந்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த போரிஸ் ஜோன்சன் பிரதமராக பதவியேற்றார்.

கடந்த 2020 ஆண்டு கொரோனா முதல் அலையினால் இங்கிலாந்தில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டத்தை மீறி, லண்டனின் பிரதமரின் அலுவலக இல்லத்தில் 100க்கும் மேற்பட்டோரை அழைத்து போரிஸ் ஜோன்சன் விருந்து வழங்கினார். இதற்கு கண்டனம் எழுந்ததால், தவறுக்கு போரிஸ் ஜோன்சன் மன்னிப்பு கோரினார்.

இதேபோல், இங்கிலாந்து மகாராணி எலிசபெத்தின் கணவர் பிலிப்பின் இறுதி சடங்கின் போது, பிரதமர் அலுவலக நிர்வாகிகள் மது விருந்து நடத்தியது கடும் விமர்சனங்களை எழுப்பியது.

இந்த இரு விவகாரங்களை முன்வைத்து பிரதமர் பதவியிலிருந்து போரிஸ் ஜான்சன் விலக வேண்டும் என்று, அவரது கட்சியினரே போர்க்கொடி தூக்கினர். இதனால் அவருக்கு நெருக்கடி ஏற்பட்டது.

போரிஸ் ஜான்சனுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென பெரும்பான்மை எம்.பி.க்கள் கன்சர்வேடிவ் கட்சி தலைமைக்கு கடிதம் எழுதினர். இதையடுத்து போரிஸ் ஜோன்சன் அரசுக்கு எதிராக வாக்கெடுப்பு நடத்த உத்தரவிடப்பட்டது.

நேற்று முன்தினம் அந்நாட்டு பாராளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் 211 எம்பிக்கள் ஆதரவாகவும், 148 பேர் எதிராகவும் வாக்களித்தனர். பெரும்பான்மை அடிப்படையில் போரிஸ் ஜோன்சன் வெற்றி பெற்றார். 59 சதவீத பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோன்சனுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். நம்பிக்கை

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ...

உற்சவம் கடந்த (30) திங்களன்று ஆரம்பமாகியது.

அதனைத் தொடர்ந்து நேற்று உப்பு நீரில் விளக்கெரியும் அற்புதம் நிறைந்த வற்றாப்பளை கண்ணகி தாய்க்கான விளக்கு எரிப்பதற்கான உப்பு நீரை,கடலிலே பெற்றுக்கொள்கின்ற அரிய நிகழ்வு நடைபெற்றது.

முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, தீர்த்தக்குடம் பாரம்பரிய முறைப்படி பறை வாத்தியம் முழங்க அடியவர்கள் புடைசூழ பாரம்பரிய வீதிகள் வழியாகச் சென்று தீர்த்தக்கரையில் அமைந்திருக்கின்ற முல்லைத்தீவு பெருங்கடலில் தீர்த்தம் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் திங்கட்கிழமை (13) அதிகாலையில் காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து மடப்பண்டம் எடுத்து வரப்பட்டு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தீர்த்தம் எடுக்கும் நிகழ்வுக்கு அதிகளவான இராணுவத்தினர் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்

## யாழ், பல்கலைக்கழக ... 03ஆம் பக்க தொடர்...

நடத்த முயற்சித்துள்ளனர். இதன் காரணமாக பல்கலைகழகத்தில் சற்றுநேரம் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து, அங்கிருந்த மாணவர்கள் இருவரையும் மடக்கி பிடித்து கோப்பாய் பொலஸாரிடம் ஒப்படைத்ததுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## யாழ். மாவட்ட ... 03ஆம் பக்க தொடர்...

பயிர்ச்செய்கை நிலங்களின் அடிப்படையில், முன்னர் எரிபொருள் அட்டை வழங்கப்பட்டது. இந்த அட்டையைக் காண்பித்து யாழ். மாவட்டத்தில் உள்ளதெரிவு செய்யப்பட்ட 14 எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் இன்று முதல் மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்ள முடியும். முதல் கட்டமாக விவசாயிகளின் தேவையளவின் 25 சதவீத மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது. இதேவேளை, எரிபொருள் அட்டை இல்லாத விவசாயிகள், தத்தமது பிரதேச கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பத்து பெற்றுக்கொண்டு மண்ணெண்ணெய்யைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துறைமுக நகரத்தில் ... 03ஆம் பக்க தொடர்...

கடற்பகுதியை ஒவ்வொரு நாடுகளுக்கு ஒதுக்கி வழங்கி கைத்தொழில்கள் ஆரம்பிக்க வழங்குகின்றன. எமது நாட்டு கைத்தொழிலாளர்கள் தமது கைத்தொழில்களை வேறு நாடுகளுக்கு கொண்டு செல்ல ஆரம்பித்துள்ளனர். போட்டியாக உள்ள நாடுகளை விட அதிக சலுகைகளை வழங்க நேரிடும். முழு நாட்டையும் ஏற்றுமதி மற்றும் சேவைத்துறை வலயமாக முன்னேற்ற வேண்டும். துறைமுக நகருக்கு வரலாற்றில் பெறப்பட்ட கூடுதல் நேரடி முதலீடாக 1.4 பில்லியன் டொலர் கிடைத்தது. நிதி நிறுவனங்கள். சுற்றுலா துறை, ஹோட்டல் ,பாடசாலை, மற்றும் முதலீடுகள் என்பவற்றுக்கு 40 வருடங்கள் வரிச்சலுகை முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் என்றார்.

## மின் கட்டணத்தை 250... 03ஆம் பக்க தொடர்...

வேண்டியிருந்தாலும், மக்கள் மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதைத் தவிர்த்தால் அமைச்சரவை அதனை, ஏற்றுக்கொள்ளாதென்றும் அவர் சுட்டிக்காட்டினார். "இருப்பினும், தலைவர் என்ற முறையில், மின் கட்டணத்தை உயர்த்துவதை நான் ஆதரிக்கிறேன். ஏனென்றால், 2014 க்கு பிறகு மின்கட்டண உயர்வு இல்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. ஆனால் ஆண்டுக்காண்டு கட்டணத்தை உயர்த்தியிருந்தால், மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு இவ்வளவு கடுமையாக இருந்திருக்காதென்றும் அவர் தெரிவித்தார். மேலும், பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டவர்களுக்கு மின் இணைப்பை துண்டிக்கும் பணியை மீண்டும் தொடங்கினோம். இதன்மூலம், மின்சார சபைக்கு வர வேண்டிய பணத்தின் பெரும்பகுதியை மீளப்பெற முடியுமென நாங்கள் நம்புகிறோம்," என்றார். அமைச்சர்கள் செலுத்தத் தவறிய பணத்தை மீளப்பெற முடியுமா? என வினவியபோது, அமைச்சர்கள் தவணை முறையில் கட்டணங்களை செலுத்த ஆரம்பித்துள்ளதாகவும், அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் தெரிவித்தார்.

## 2022 நிதி ஒதுக்கீட்டு... 03ஆம் பக்க தொடர்...

இதனால் சகல மக்களும் குறிப்பாக பின்தங்கிய மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அபிவிருத்திச் செலவுகளையும் மூலதனச் செலவுகளையும் நிறுத்தியாவது மக்களை வாழவைக்கும் தேவைகளுக்கு நிதி ஒதுக்க பிரதமர் யோசனை முன்வைத்தார். பின்தங்கிய தரப்பினருக்கு நிவாரணம் வழங்க வரவு செலவுத் திட்டத்தை மீளமைக்க வேண்டும்.சகல அமைச்சுக்களினதும் செலவுகள் மற்றும் வீண் விரயங்களை குறைத்து அத்தியாவசிய சேவைகளுக்கள் மற்றும் உற்பத்திகளை அதிகரிக்க முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கை மீது நம்பிக்கை...

பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாட்டு மக்களும் நாட்டின் அனைத்து துறைகளும் வீழ்ச்சியடைவதற்கு முக்கிய காரணம் ஜனாதிபதி மேற்கொண்ட மோசமான தீர்மானமே.

எனினும், புதிய பிரதமருக்கு அந்த ஜனாதிபதியினதும் நாட்டை இந்தளவு வீழ்ச்சியுறச் செய்தவர்களுக்கும் மத்தியிலேயே செயல்பட வேண்டியுள்ளது.

நாட்டில் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்துவதற்காக சட்டங்கள் இருந்தன. எனினும் கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி அதனை இல்லாதொழித்ததால் தற்போது அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்துள்ளன. உதாரணமாக 300 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பருப்பு தற்போது 620 ரூபாவாகவும் 350 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட ரின் மீன் தற்போது 600 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

800 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட நெத்தலிக்கருவாடு 1,700 ரூபாவாகவும் 360 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பால் மா ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாகவும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். நாடு மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

## சு.க பதவியிலிருந்து...

அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் அறிவித்திருந்தார்.

எனவே, நேற்று முற்பகல் நிமல் சிறிபால டி சில்வா கொழும்பு மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி ஊடாக இந்த தீர்மானத்திற்கு தடை கோரி மனுவொன்றை தாக்கல் செய்தார்.

சுதந்திரக் கட்சியின் அரசியலமைப்பின் பிரகாரம் அவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு தலைவருக்கோ, பொதுச் செயலாளருக்கோ, மத்திய குழுவுக்கோ அதிகாரம் இல்லையென நிமல் சிறிபால டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார். இதன்படி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்த தீர்மானத்தை இடைநிறுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

## கச்சதீவை மீட்பதே...

இராமநாதபுரத்துக்கு நேற்றுமுன்தினம் சென்ற அண்ணாமலையிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன் போதுஅவர்மேலும்தெரிவிக்கையில்;

'கச்சதீவுக்கு தமிழக மீனவர்கள் விசா அனுமதியின்றி சென்று வர வேண்டும். மீனவர்கள் நினைத்த நேரம் அந்த தீவில் இறங்கிச் செல்ல முடியுமென்ற 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 06ஆவது சரத்து நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

இவற்றை, நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே பா.ஜ.கவின் விருப்பம். மாறாக தி.மு.க போன்று இரட்டை வேடம் போடுவது கிடையாது. அதாவது அதனை கொடுக்கும் போதும் தி.மு.கதான் தமிழ்நாட்டை ஆட்சி செய்தது.

அதவாது, தற்போதைய முதல்வரின் அப்பா. இவ்வளவு கதைக்கும் மு.க.ஸ்டலின், நெருங்கிய நண்பர் டக்ளஸ் தேவானாந்தா போன்றவர்களே தமிழ்நாடு மீனவர்களுக்கு எதிராகவுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

## ரூபா 69,500 கோடி குறைநிரப்பு...

பணவீக்கத்தின் காரணமாக அதிகரித்த வழங்கல் செலவினத்தினை ஈடுசெய்வதற்கான ஒதுக்கீடுகளைச் செய்வதற்கும் இந்தக் குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறைநிரப்பு பிரேரணைக்கான 69500 கோடி ரூபாவில் 39500 கோடி ரூபா மீண்டுவரும் செலவினங்களுக்கும், 30000 கோடி ரூபா மூலதனச் செலவினமாகவும் மதிப்பிடப்பட்டுள்ளன. நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவினால் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஒதுக்கப்படவுள்ள முறைமை குறித்து குழுவுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அதேவேளை, உலக வங்கி மற்றும் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதியுதவி தவிர ஏனைய தொகையான 305,000 மில்லியன் ரூபாவுக்கு உள்நாட்டு நிதியளிப்புக்கான தேவை இருப்பதாகவும் இங்கு புலப்படுத்தப்பட்டது. 695 00 கோடி ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளபோதும் அத்தியாவசிய செலவினங்கள் தவிர,ஏனைய சகல செலவினங்களையும் குறைத்து 300 00கோடி ரூபாவுக்கும் மேலதிகமான தொகையை சேமிப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் நிதி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். அந்த வகையில் எதிர்காலத்தில் இவ்விடயங்களைக் கருத்திற்கொண்டு, திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டமொன்றை முன்வைப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் நிதியமைச்சின் செயலாளர் சிறிவர்தன குறிப்பிட்டுள்ளார்.

## தமிழருக்கான அரசியல் தீர்வை...

அரசியல் தீர்வை பெற்றுத் தர அரசு தயாரா? என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் நேற்று சபையில் கேள்வி எழுப்பினார். பட்டினியை இல்லாமல் செய்வதற்கு நாங்களும் உங்களுடன் கரங்கோர்க்க தயாராக இருக்கிறோம். அதற்காக நீதியான முறையில் இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசாங்கம் முன்வந்தால், நாட்டை சிங்கப்பூராக மலேசியாவாக மாற்றலாமெனவும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், மலையகத்திலுள்ள காணிகளில் பயிரிட இடமளிக்க வேண்டுமென மனோ கணேசன் எம்.பி பிரதமரிடம் கோரினார்.

மலைய மக்களின் வாழ்க்கை நிலை மோசமாக உள்ளது. எரிவாயுக்கும் மண்ணெண்ணெய்க்கும் மக்கள் வரிசையில் நிற்கின்றனர். மலையக மக்கள் பட்டினியை நோக்கி நகர்கின்றனர். அவர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. சுய ஆதிக்கத்துடன் உழைப்பவர்கள் அவர்கள். அவர்களுக்கு பயிரிட நிலங்களை வழங்குங்கள். 200 ஆண்டுகளுக்கு மேலாக உழைக்கும் அந்த மக்களுக்கு ஜனாதிபதியும், பிரதமரும் காணிகளை வழங்கினால் அவர்கள் நாட்டுக்குத் தேவையான உணவை தருவார்கள். பொருளாதாரத்தை நிமிர்த்துவார்கள். மனோ கணேசனின் கோரிக்கை நியாயமானது.

அடுத்து வடக்கு, கிழக்கில் குறிப்பாக வன்னியில் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பட்டினியால் ஒரு காலத்திலும் அந்த மக்கள் சாகவில்லை. 13 இலட்சம் புலம் பெயர் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நாட்டின் 50 ஆயிரம் மில்லியன் கடனை செலுத்த தயாராக வந்தால் வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் அரசியல் தீர்வை பெற்றுத் தர அரசு தயாரா? அரசியல் ஸ்திரத்தன்மையை கட்டியெழுப்ப தயாராக இருக்கிறார்கள்.

## தோட்ட தொழிலாளர்களுக்கு...

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையில் பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ள கஷ்டங்கள் தொடர்பில், நான் பிரதமருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தேன்.

பெருந்தோட்ட தொழிலாளர்கள் தற்போது பெரும் நெருக்கடிக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். நாளொன்றுக்கு அவர்கள் ஒரு நேர உணவையே உண்கின்றனர். இத்தகைய நிலையை கருத்திற் கொண்டு பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பயன்படுத்தப்படாத காணிகளை பயிர் செய்கைகளுக்காக அவர்களுக்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டேன்.

அவர்கள் தமக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் அதன் பிரதிபலன்களை வழங்குவார்கள் என்றும் மனோ கணேசன் எம்பி தெரிவித்தார். இதன்போது அதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்து தெரிவித்த பிரதமர்: பெருந்தோட்டப் பகுதி மக்களுக்கு தோட்டங்களில் காணப்படும் பயன்படுத்தப்படாத காணிகளை விவசாயத்துக்காக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கடித மூலம் மனோ கணேசன் எம்பி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அந்த விடயம் தொடர்பில் நாம் கலந்துரையாடினோம். விவசாய அமைச்சரும் அதற்கு இணக்கம் தெரிவித்தார். பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர், விவசாய அமைச்சர் ஆகியோர் மலையக பகுதிகளில் உள்ள எம்.பிக்களுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்குமாறு நான் குறிப்பிட்டிருந்தேன். நாங்கள் அதனை மனோ கணேசனின் திட்டம் என்றே கூறலாம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## பொதுமக்களின் காணிகளை...

காணி சுவீகரிப்புக்கு கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை மக்கள் தமது எதிர்ப்பு போராட்டங்களால் முறியடித்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று காணிகளை சுவீகரிப்பதற்காக நில அளவை திணைக்களம் மற்றும் கடற்படையினர் இணைந்து முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோது, காணி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் நில அளவை திணைக்கள வாகனத்தை கடற்படை முகாமுக்குள் செல்ல விடாது கடற்படை முகாம் முன்பாக தடுத்தனர். இதனால் அளவீட்டு முயற்சிகள் தடுக்கப்பட்டன. இதனையடுத்து, காணி உரிமையாளர்களில் 15 பேர் தமது காணிகளை கடற்படை முகாமின் தேவைக்காக வழங்க முன்வந்திருப்பதாகவும் அதனை அளவீடு செய்யவே வந்திருப்பதாகவும் நில அளவையாளர் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு தெரிவித்துள்ளார்.

காணிகளை வழங்க முன்வந்தவர்களென தென்பகுதியை சேர்ந்த மூன்று காணி உரிமையாளர்கள் அங்கு வருகை தந்திருந்துள்ளனர். இருப்பினும் 15 பேர் காணிகளை வழங்க முன்வந்திருப்பதாக நில அளவை அதிகாரி தெரிவித்திருந்தமைக்கமைய ஏனைய எவரும் அவ்வேளையில் அங்கு வருகை தரவில்லை . இதனையடுத்து, "15 பேர் காணி வழங்க முன் வந்திருப்பின் அதே பகுதியில் எமது காணிகளும் கடற்படையினரால் வேலி போட்டு மறித்து அடைக்கப்பட்டுள்ளது. எனவே கடற்படை முகாமுக்கு காணி வழங்க முன்வந்தவர்களுக்கு காணிகளை அளவீடு செய்து வழங்குவதற்கு, முன் கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள எமக்குரிய காணிகளையும் அடையாளப்படுத்தி அளவீடு செய்து எமக்கு வழங்கிவிட்டு கடற்படை முகாமுக்கு காணி வழங்க முன் வந்தவர்களின் காணிகளை அளவீடு செய்யுமாறு" எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் நில அளவையாளரிடம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, மக்களின் கோரிக்கையை ஏற்று கடிதம் ஒன்று கையொப்பமிட்டு வழங்கியதையடுத்து நில அளவையாளர்கள் திரும்பி சென்றுள்ளனர்.

## பொருளாதார நெருக்கடிக்குள்ளான ....

தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போது 700 மில்லியன் டொலராக உள்ள அந்த தொகையை 850 அல்லது 900 டொலராக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சீனாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்படும் மாடி வீடுகளை, வீடில்லாதோருக்கு இலவசமாக வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நிலையில் மாற்றம் ஏற்படுத்துவதற்காக ஆறு பில்லியன் அமெரிக்க டொலர்கள் அவசரமாகத் தேவைப்படுகின்றன.

அவற்றைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச அமைப்புக்கள், நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளை ஒன்றிணைத்து விஷேட மாநாடு ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளில், கட்சி அரசியல் மற்றும் ஏனைய நிகழ்ச்சி நிரல்களுக்கு அப்பால் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமென்றும் தெரிவித்த பிரதமர், அதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அனைவரதும் ஒத்துழைப்பும் அவசியமென தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய விஷேட உரையின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்

அது தொடர்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்ததாவது,

பாரம்பரிய அரசியல் சித்தாந்தங்களை குறுகிய காலத்துக்கு ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ள அனைவரும் முன்வர வேண்டும்.

பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க நடவடிக்கை எடுப்பது அவசியம்.

மாதாந்தம் 500 மில்லியன் டொலர்களை எரிபொருளுக்காக நாடு செலவிட்டு வருகிறது. தற்போதைய நெருக்கடி நிலையில் எரிபொருள் விலை மேலும் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை 40 வீதமாக அதிகரிக்கலாமென கணிப்பீட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். அதன்படி, அடுத்த ஆறு மாதங்களுக்காக நாம் எரிபொருளுக்கு 3,300 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தேடவேண்டியுள்ளது.

இத்தகைய பின்னணியில் எரிபொருளுக்கான கூப்பன் முறையை அறிமுகப்படுத்தும் யோசனையை நிராகரிக்க முடியாது. எரிவாயு இறக்குமதிக்காக ஒரு மாதத்திற்கு 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அவசியம். அடுத்த ஆறு மாதங்களுக்கு சமையல் எரிவாயு கொள்வனவு'காக 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகிறது.

அடுத்த மூன்று வாரங்கள், எரிபொருளுக்கு மிகக் கஷ்டம் ஏற்படும். அனைவரும் எரிபொருள் மற்றும் எரிவாயுவை முடிந்தவரை சிக்கனமாக உபயோகிப்பது அவசியம். அதேவேளை அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்த்துக்கொள்வதும் சிறந்தது.

எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவை பதுக்குவதையும் தவிர்க்குமாறு கோருகிறேன்.

கடினமான மூன்று வாரங்கள் கடந்த பின்னர், தட்டுப்பாடின்றி அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். கடினமான மூன்று வாரங்களை பொறுமையாக எதிர் கொள்ளுமாறு மக்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

நாட்டுக்கு தேவையான உணவுப் பொருட்களை உள்நாட்டிலேயே, உற்பத்தி செய்வதுடன் மேலதிகமாக தேவைப்படுவதை இறக்குமதி செய்ய முடியும். பெரும்போக நெல் அறுவடையை சாத்தியமாக்கிக் கொள்வதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும். அந்த அறுவடை பெப்ரவரி 2023இன் இறுதியிலேயே கிடைக்கும்.

நாட்டுக்கு வருடாந்தம் 2.5 மில்லியன் மெற்றிக்தொன் அரிசி தேவைப்படுகிறது. எனினும் 1.6 மில்லியன் மெற்றிக் தொன் அரிசியே தற்போது கையிருப்பிலுள்ளது. இந்நிலை, நெல் மற்றும் பல ஏனைய பயிர்களுக்கும் பொதுவானது. சில மாதங்களில் நாம் பாரிய உணவு நெருக்கடியை எதிர்நோக்க நேரும். நாட்டுக்குத் தேவையான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய மாதாந்த ம் 150 மில்லியன் டொலர் தேவைப்படுகிறது.

நாட்டுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் சுகாதார உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு பல்வேறு சர்வதேச அமைப்புக்களின் உதவிகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அத்துடன் பல்வேறு நாடுகளின் உதவிகளைப் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் அடுத்த ஆறு மாதங்களுக்கு சுகாதாரத் துறைக்காக பெருமளவில் அந்நிய செலாவணி தேவைப்படாது.

அடுத்த 06 மாதங்களுக்குள், இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதற்கு 05 பில்லியன் டொலர் நிதி எமக்கு அவசியமாகிறது. எமது ரூபாவை பலப்படுத்துவதற்கு மேலும் 05 பில்லியன் டொலர் அவசியமாகிறது.

அடுத்த ஆறு மாதங்களுக்காக 06 பில்லியன் டொலர்களை தேட வேண்டும். 2019ஆம் ஆண்டு நாம் நடைமுறைப்படுத்திய வரி முறை ஒழிக்கப்பட்டதால், அரசாங்கம் 6.6 பில்லியன் ரூபா வருமானத்தை இழந்தது.

அதுவே, பொருளாதார வீழ்ச்சியின் ஆரம்பம். அதனை கருத்திற் கொண்டு நாம் உடனடியாக 2019 இல், நடைமுறைப்படுத்திய வரி முறைமைக்கு மீள திரும்ப வேண்டும்.

இக்காலங்களில், காலவரையறையின்றி பணம் அச்சடிக்கப்பட்டு வருவது நாம் அனைவரும் அறிந்த உண்மை. 2020 முதல் 2022 மே 20ஆம் திகதி வரை 2.5 பில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில், எந்த அரச நிறுவனங்களின் நஷ்டத்தையும் ஈடுசெய்ய அரசாங்கத்தினால் நிதி வழங்க முடியாதுள்ளது. அந்தக் கடன் சுமையை இனி அரசோ அல்லது அரச வங்கிகளோ சுமக்க முடியாது. தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, 2023ஆம் ஆண்டு அனைத்து சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

சில தவறான செயற்பாடுகளால், உலகில் ஓரங்கட்டப்பட்ட நாடாக இலங்கை தற்போது இருந்து வருகிறது. அந்த நிலையை மாற்றுவதற்கு அவசியம். அது தொடர்பில் தற்போது வெளிநாட்டு தூதுவர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம். ஐக்கிய அரபு அமீரகத்தின் ஜனாதிபதி, பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் மற்றும் பிரித்தானிய பிரதமர் ஆகியோருடன் தொலைபேசி மூலமான உரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை, ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு, உலக உணவுத் திட்டம், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் உலக சுகாதார அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

நாட்டில் நெருக்கடி நிலையில் உதவி செய்வதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் (09) உலகம் முழுவதற்கும் பகிரங்க வேண்டுகோளை விடுக்க ஐக்கிய நாடுகள் சபை ஏற்பாடு செய்துள்ளது. இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு உதவி கோரப்பட்டுள்ளது.

எமக்கு கடன் மற்றும் உதவிகளை வழங்கும் நாடுகள் வரிசையில் இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் முன்னணியிலுள்ளன. தொடர்ந்து நம்பிக்கைக்குரிய நாடுகளாக இருந்த, இந்த நாடுகளுடனான உறவுகள் தற்போது வீழ்ச்சிடைந்துள்ளன. அதனை நிவர்த்தி செய்வதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். 2019 ஆம் ஆண்டுக்குள் சுமார் 03 பில்லியன் டொலர் பெறுமதியான திட்டங்களை நாட்டுக்கு வழங்க ஜப்பானிய அரசாங்கம் இணக்கம் தெரிவித்தபோதும் இந்த திட்டங்கள் அனைத்தும் எந்த காரணமும் இல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டன.

அடிப்படையற்ற காரணங்களுக்காக நட்பு நாடுகளால் எமக்கு வழங்கப்பட்ட திட்டங்களை இடைநிறுத்தியது தொடர்பில், விசாரணை நடத்துமாறு பொது நிதிக்கான பாராளுமன்ற குழுவை நான் கேட்டுக்கொள்கின்றேன் எமக்கு கடன் வழங்கும் நட்பு நாடுகளை ஒன்றிணைக்க, உதவி வழங்கும் மாநாட்டை நடத்த சர்வதேச நாணய நிதியத்துக்கு நாம்,அழைப்பு விடுத்துள்ளோம்.

உலகளாவிய குற்றச்செயல்களில்

# பாகிஸ்தானியர் நாட்டுக்கு அபகீர்த்தி என பாக். கவலை



உலக நாடுகளில் பாகிஸ்தான் பிரஜைகள் பல்வேறு சட்டவிரோத மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதால் அவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் அவர்களுக்கு விசா வழங்குவதில் அந் நாடுகள் கட்டுப்பாடுகளை விதித்திருப்பதாக தெரிய வந்துள்ளது. பாகிஸ்தானியர் தொடர்பில் தமது விசா கொள்கையை கடுமைப்படுத்தியிருப்பதாக துருக்கி தெரிவித்துள்ளது.

சமீபத்தில் துருக்கி தலைநகரான இஸ்தான்புல்லில் ஆறு பாகிஸ்தானியர் நான்கு நேபாளிகளை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்று சித்திரவதைக்கு உட்படுத்தியதாகவும் பின்னர் துருக்கி பொலிஸார் கடத்தியவர்களை கைதுசெய்ததாகவும் தகவல் வெ ளியாகி இருந்தது. கடத்தப்பட்டவர்களின் குடும்பத்தவரிடமிருந்து தலா பத்தாயிரம் யூரோக்களை மீட்புப் பணமாக அவர்கள் கோரியிருந்ததாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2021 இல் நிகழ்ந்த சம்பவத்தில் ஒரு பாக். பிரஜையைக் கடத்தி 50 ஆயிரம் யூரோவை கப்பமாகக் கேட்ட குற்றச்சாட்டில் ஸ்தான்புல் பொலிஸார் பாக். கடத்தல் குழுவைக் கைதுசெய்தனர். மேலும் துருக்கியில் வாழும் பாகிஸ்தானியர் தமக்கிடையே துருக்கிய பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பிலான ஆபாச வீடியோக்களைப் பகிர்ந்து ரசிப்பதாக சமூகவலைத்தளங்களில் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. பாக். பிரஜைகள் துருக்கிய பெண்களைப் பின்தொடர்ந்து புகைப்படங்களை எடுப்பதாக டுவிட்டர் பதிவொன்று குறிப்பிட்டுள்ளது.

ஹப்புத்தளை – தம்பேதன்னை

## பிரதான வீதியிலுள்ள கோயில் உடைப்பு

பதுளை தினகரன் விசேட நிருபர்

ஹப்புத்தளை – தம்பேதன்னை பிரதான வீதியில் அமைந்துள்ள குறிஞ்சி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் உடைக்கப்பட்டு, அம்பிகைக்கு அணியப்பட்டிருந்த பெறுமதி மிக்க தங்கச் சங்கிலி மற்றும் உண்டியல்கள் இரண்டும் உடைக்கப்பட்டு அவற்றிலுள்ள பணம் உள்ளிட்ட தங்க நகைகள் ஆகியன திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 1 மணியளவில் இடம் பெற்றுள்ளதாக, ஹப்புத்தளைப் பொலிசார் தெரிவித்தனர். இத் திருட்டுச் சம்பவம் குறித்து,

அதே பகுதியைச் சேர்ந்த இளைஞரொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

நாளாந்த பூஜைகளை நிறைவு செய்துவிட்டு, வழமைபோன்று தேவஸ்தான கதவினை பூட்டிவிட்டு, குருக்கள் தமது வீடு சென்றுள்ளார். மறுதினமான நேற்றுக் காலை குருக்கள் தேவஸ்தானத்தை திறக்க முற்பட்ட போது, தேவஸ்தானம் உடைக்கப்பட்டு இருந்ததைக் கண்டு, அயலவர்களிடம் கூறி, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இம் முறைப்பாட்டை அடுத்து, ஹப்பத்தளைப் பொலிசார் மோப்ப நாய்களுடன் சென்று, அப்பகுதியில் இயங்கிய சீ. சீ. டி.வி கெமராவின் காட்சிகளுடன் ஆய்வுப் பரிசீலனைகளை மேற்கொண்டனர்.

## விலைமனுக்கோரல்

### வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு

இந்திய அரசாங்கத்தின் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் கீழேயுள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தொகையை (Break Bulk Cargo - 50kg Bags) உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மதிப்பீட்டின் கீழ் அப்புறப்படுத்தல் போக்குவரத்து செய்தல் மற்றும் இறக்குதல்

- அரசி 31,000 மெ.தொ.
- பால்மா 450 மெ.தொ.
- மருந்துகள் 4.6 மெ.தொ.

- அத்தியாவசிய உணவுப் பொருட் தொகையை அப்புறப்படுத்தல் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் இணைப்பின் கீழ் மனிதாபிமான உதவியாக கிடைக்கும் மேற்படி அத்தியாவசிய உணவுப் பொருட் தொகை (Break Bulk Cargo -50kg Bags) கொழும்பு துறைமுகத்திலிருந்து மருதானை ஒல்கொட் மாவத்த இரயில் களஞ்சியம்/ ஒருகொடவத்த களஞ்சிய கட்டிடத் தொகுதி வரை சரியான முறைமையின் கீழ் அப்புறப்படுத்துவதற்கான விலைமனுகோரல்

- போக்குவரத்து
ஒருகொடவத்த களஞ்சிய கட்டிடத் தொகுதியில் இருந்து பிரயாண முடிவான சகல மாவட்ட செயலகங்களுக்கு 10, 20 அல்லது 30 மொ.தொ அளவான பொருட்களை கன்டெயினர் மூலம் அல்லது மூடப்பட்டுள்ள லொறி மூலம் போக்குவரத்து செய்வதற்கான விலைமனுக் கோரல்.

- 50 KG பேக்களை லொறிக்கு ஏற்றுதல்
ஒருகொடவத்த மற்றும் வேயன்கொட களஞ்சிய கட்டிடத் தொகுதிகளில் குவிக்கப்பட்டுள்ள 50Kg அரிசி மூடைகளை தோளில் சுமந்து லொறிக்கு ஏற்றுவதற்கான விலைமனுக்கோரல்

மேற்படி விடயம் சம்பந்தமாக ஆர்வம் காட்டுகின்ற கேள்வி தாரர்களுக்கு தேவையான மேலதிக தகவல்களை இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 உணவு ஆணையாளர் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. 0112-424211/ 0112329216) குறித்த விண்ணப்பங்களை கீழ்க்காணும் அலுவலகத்தின் இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். www.fed.gov.lk

பொறியிடப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது உணவு ஆணையாளர் திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு 2022.06.15 பி.ப. 3.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அன்றே பி.ப. 3.05 மணிக்கு திறக்கப்படுவதுடன், அதற்காக ஆலோசனைகளை சமர்ப்பிக்கும் நிறுவனங்களின் பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**உணவு ஆணையாளர் திணைக்களம்,**
**இல. 330, யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு-02.**

## கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில்

இலக்கம் 30, வெஸ்ஹோல்ம் கார்டன் ரூயிஸ்லிப் மிடில்செக்ஸ் HA4 8QJ எனும் முகவரியைச் சேர்ந்த காலஞ்சென்ற சோனியா ஒலிவ் மியூரியல் ஹென்றி என்பவரின் இறுதி விருப்பாவணம் சம்பந்தமாக 1977ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க குடியியல் நடைமுறை கோவை சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட (திருத்தம்) குடியியல் நடைமுறை கோவையின் அத்தியாயம் XXXVIIIB இன் கீழ், இலக்கம் 22, Mount Ephraim Tunbridge Wells Kent TN4 8AS இல் உள்ள CRIPPS TRUST CORPORATION LIMITED நிறுவனத்திற்கு ஜஸ்டிஸ் பிறைட்டன் மேல் நீதி மன்றினால் மீள முத்திரையிடுவதற்காக அனுமதியளிக்கப்பட்ட மரண சாசனப் பத்திரம் தொடர்பிலான விண்ணப்பம்.

**காலஞ்சென்றவர்**

| | |
|---|---|
| வழக்கு இலக்கம் | : DTS168/2021 |
| தன்மை | : மரண சாசனம் |
| நடவடிக்கை | : |
| மதிப்பு | : 11,936,206.90 |

இலங்கையில் இல.47, அலெக்ஷான்ட்றா பிளேஸ், கொழும்பு - 07 எனும் முகவரியிலுள்ள தனது முகவரான சந்தன பத்மகுமார ரூபசின் சிறிவர்த்தன ஊடாக ஆஜராகும் இல.22, Mount Ephraim Tunbridge wells Kent, TN4 8AS எனும் முகவரியைச் சேர்ந்த CRIPPS TRUST CORPORATION LIMITED எனும் நிறுவனம்.

**விண்ணப்பதாரர்:**

இலக்கம் 30, வெஸ்ஹோல்ம் கார்டன் ரூயிஸ்லிப் மிடில்செக்ஸ் HA4 8QJ எனும் முகவரியைச் சேர்ந்த காலஞ்சென்ற சோனியா ஒலிவ் மியூரியல் ஹென்றி என்பவரின் இறுதி விருப்பாவணம் சம்பந்தமாக, இலக்கம் 22, மௌனட் ஏ்.ரைம் டன்பிறிஜ் வெல்ஸ் கென்ற், TN4 8AS (No.22, Mount Ephraim Tunbridge Wells Kent, TN4 8AS) இல் உள்ள கிறிப்ஸ் ட்றஸ்ட் கோப்பரேசன் லிமிட்டட் (CRIPPS TRUST CORPORATION LIMITED) நிறுவனம் தொடர்பில் ஜஸ்டிஸ் பிறைட்டன் மேல் நீதி மன்றினால் அனுமதியளிக்கப்பட்ட மரண சாசனப்பத்திரத்தை மீள முத்திரையிடலுக்காக இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இருபத்தெட்டு (28) நாட்கள் முடிவடைந்த பின்னர், 1977ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க குடியியல் நடைமுறை கோவை சட்டத்தின் (திருத்தம்) அத்தியாயம் XXXVIIIB இன் கீழ் கொழும்பு மாவட்ட நீதி மன்றத்திற்கு விண்ணப்பம் செய்யப்படும் என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**2021ஆம் ஆண்டு ஜுலை மாதம் 2 ஆம் திகதி**

**D.L.& F de சேரம்,**
**மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரிக்கான சட்டத்தரணி**

**அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட / நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு**

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்டவர்களின் தகுதிகளை ஆராயும் :-

| இல. | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1. | அத்மிரல் (பேராசிரியர்) ஜயநாத் கொலம்பகே 606/1, கம மெத வீதி, கட்டுநாயக்க | ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 2. | திரு.என்.எல். காட்பிரே குரே 91, குரே மாவத்தை, கந்தானை | ஜேர்மனிக்கான இலங்கையின் தூதுவராக பெயர்குறிப்பிடப்பட்டவர் |
| 3. | திருமதி அருணி விஜேவர்தன இல. 48, சிறிபா வீதி, கொழும்பு 05 | வெளிவிவகார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |
| 4 | திரு. ஆர்.பி.ஏ. விமலவீர 15 ஏ, “சமுலு நிவாச”, கெப்பெட்டிபொல மாவத்தை, கொழும்பு 05 | தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவல்கள் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |

மேற்குறிப்பிட்ட பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்ட நபர்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, “செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே” என்ற விலாசத்திற்கு 2022 யூன் மாதம் 21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777300 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் இடம்பெற்றுள்ளது (www.parliament.lk)

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே**
**2022 யூன் மாதம் 08 ஆம் திகதி**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### ரூ.50,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

**17.00% 2025 “A” தொடர்களின் கீழ் ரூ.20,000 மில்லியனையும் 18.00% 2028 “A” தொடர்களின் கீழ் ரூ.30,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2022 யூன் 10ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 17.00% 2025 'A' | 18.00% 2028 'A' |
|---|---|---|
| ISIN* | LKB 00425F013 | LKB00628A153 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ.20,000 மில்லியன் | ரூ.30,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 17.00% ஆண்டொன்றிற்கு | 18.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2021 யூன் 01 | 2022 சனவரி 15 |
| **முதிர்வுத்திகதி** | **2025 யூன் 01** | **2028 சனவரி 15** |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 யூன் & 01 டிசம்பர் | 15 சனவரி & 15 யூலை |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ.100.00 இற்கு ரூ.0.6503 | ரூ.100.00 இற்கு ரூ.7.5083 |
| ஏலவிற்பனைத்திகதி | 2022 யூன் 10, வெள்ளிக்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித்திகதியும் நேரமும் | 2022 யூன் 10, வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணி | |
| **தீர்ப்பனவுத் திகதி** | **2022 யூன் 15** | |
| ஏல விற்பனைத் திகதி | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/=) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/- பெருக்கங்களிலிருந்து) | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் தொடர்கள் வழங்கப்பட்ட நாளிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட மின்னியல் வலையமைப்பு முறைகளினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர் /ISIN தொடர்பிலும் சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்ஞாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்வெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் லிமிட்டட் | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம்.ஆசிம்**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
இலங்கை மத்திய வங்கி,
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**


திகதி 06.06.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4778
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,376,360.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 5 1 8 9 0 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,368,734.00

Govisetha
DRAW NUMBER 3020
TOTAL PRIZE WON IN THIS DRAW Rs. 5,181,780.00
WINNING LETTER F
WINNING NUMBERS 36 46 68 75
THE SUPER PRIZE OF THE NEXT DRAW Rs. 67,310,975.76

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1256
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,553,340.00
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 2 5 9 1 7 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,590,735.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 808
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,268,000.00
வெற்றி இலக்கினம் Z
வெற்றி இலக்கங்கள் 01 26 42 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 113,290,568.00

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 0087
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,846,620.00
இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 03 46 55 57
விசேட இலக்கினம் தனுசு
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,744,279.40

கோடி 25 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1126
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,513,380.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 254,765,726.00
O 04 27 28 36 67
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

### க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2021 (2022)

### செய்முறைப் பரீட்சை

இப்பரீட்சையின் மனைப்பொருளியல் பாடத்திற்கான எழுத்துப் பரீட்சைகளுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சையை நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

| பாட எண் | பாடம் | செய்முறைப் பரீட்சை நடைபெறவுள்ள திகதிகள் |
|---|---|---|
| 28 | மனைப்பொருளியல் | 2022.06.11 இருந்து 2022.06.21 ஆம் திகதி வரை |

மேற்குறித்த பாடத்திற்கான பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அவர்களின் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தபால் முகவரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக w.w.w.doenets.lk பதிவிறக்கம் செய்து கொள்வதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்தி தோற்ற வேண்டிய இடம், திகதி என்பன அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவற்றை எக்காரணத்திற்காகவேனும் பின்னர் மாற்றம் செய்ய முடியாது.

இது தொடர்பாக ஏதாவது விசாரணைகள் இருப்பின் இலங்கை பரீட்சைத் திணைக்களத்துடன் பின்வரும் தொலைபேசி எண்கள் மூலம் தொடர்பு கொள்ள முடியுமென்பதை கருத்திற் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| நேரடித் தொலைபேசி எண்: | 1911<br>011-2784208, 011-2784537, 0112786616 | |
| தொலைநகல் இலக்கம்: | 011-2784422 | |
| பொதுத் தொலைபேசி எண்: | 011-2786200<br>011-2784201<br>011-2785202 | நீடிப்பு 263, 265, 280, 282, 433 |

**எல்.எம்.டீ. தர்மசேன**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**6/31/உ.தரம்/செ.ப/2021**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**2022.06.07**



# இலங்கையுடனான முதல் 20க்கு 20 போட்டி

# அவுஸ்திரேலிய அணிக்கு 129 ஓட்டங்கள் வெற்றி இலக்கு



அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதலாவது 20 க்கு 20 ஆட்டத்தில் இலங்கை அணி 19.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களை பெற்றது. அத்துடன் அவுஸ்திரேலிய அணிக்கு வெற்றி இலக்காக 129 ஓட்டங்கள் நிர்ணயித்து இலங்கை அணி.

இலங்கை அணிக்கு ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக பெத்தும் நிசங்க மற்றும் தனுஸ்க குணதிலக்க ஆகியோர் களமிறங்கி நிதானமாக ஆடி நிசங்க 36 ஓட்டங்களுடனும் தனுஷ்க குணதிக்க 26 ஓட்டங்களுடனும் சரித் அசலங்க 38 ஓட்டங்களுடனும் குசல் மெண்டிஸ் ஒரு ஓட்டத்துடனும் பானுக்க ராஜ பக்ஷ ஓட்டம் எதுவும் பெறாமலும் அணியின் தலைவர் தசுன் சானக்க ஓட்டம் எதுவும் பெறாமலும் சாமிக்க கருணராத்தன ஒரு ஓட்டத்துடனும் ,அத்துடன் பின்னர் வந்த பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து செல்ல இலங்கை அணி ஒரு கட்டத்தில் ஓட்டம் பெற தடுமாறி பின்னர் வனிந்து ஹசரங்கவின் நிதான ஆட்டத்தின் மூலம் ஓரளவுக்கு ஓட்டம் பெற்றமை விசேட அம்சமாகும்.அத்துடன் அவரும் 17 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.பின்னர் மஹீஷ் தீக்ஷன மற்றும் நுவான் துஷார ஜோடி சேர்ந்தனர். மஹீஷ் தீக்ஷன ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து சென்றார்.

பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஹேசல்வூட் 4 விக்கெட்டுக்களையும் ஸ்டாக் 3 விக்கெட்டையும் றிச்சர்ட்சன் ஒரு விக்கெட்டையும் பதம் பார்த்தனர்.

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான முதல் 20க்கு20 போட்டி நேற்று (07) இரவு கொழும்பு ஆர்.பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது.இந்த போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் தனது அணி களத்தடுப்பில் ஈடுபடும் என்று அறிவித்தார்.

முதல் போட்டிக்கான பதினொருவரை அவுஸ்திரேலிய கிரிக்கெட் அறிவித்திருந்தது. இந்தநிலையில் இலங்கை அணி தங்களுடைய பதினொருவரை நேற்றுமுன்தினம் அறிவித்திருக்கிறது.

அணியில் 5 துடுப்பாட்ட வீரர்கள் 3 சகலதுறை வீரர்கள் மற்றும் 3 பந்துவீச்சாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இதில், ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக பெதும் நிஸ்ஸங்க மற்றும் தனுஷ்க குணதிலக்க ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளதுடன், மூன்றாமிலக்க வீரராக சரித் அசலங்க பெயரிடப்பட்டனர்.

குசல் மெண்டிஸ் விக்கெட் காப்பாளராகவும், நான்காமிலக்க துடுப்பாட்ட வீரராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், பானுக ராஜபக்ஷ 5ம் இலக்க வீரராக இடம்பெற்றனர்.

இவர்களுடன் மூன்று சகலதுறை வீரர்களாக அணித்தலைவர் தசுன் ஷானக, வனிந்து ஹஸரங்க மற்றும் சாமிக்க கருணாரத்ன ஆகியோரும் வேகப்பந்துவீச்சாளர்களாக நுவான் துஷார மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோரும் இடம்பெற்றனர். இதேவேளை வனிந்து ஹசரங்கவுடன் முதன்முமை சுழல் பந்துவீச்சாளராக மஹீஷ் தீக்ஷன செயற்பட்டார்.

முதல் போட்டிக்கான பதினொருவரில் எதிர்பார்க்கப்பட்ட மதீஷ பதிரணவுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதுடன், சகலதுறை வீரர் லஹிரு மதுசங்கவும் அணியில் இடம்பிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தனுஷ்க குணதிலக்க, பெதும் நிஸ்ஸங்க, சரித் அசலங்க, குசல் மெண்டிஸ், பானுக ராஜபக்ஷ, தசுன் ஷானக, சாமிக்க கருணாரத்ன, வனிந்து ஹஸரங்க, துஷ்மந்த சமீர, மஹீஷ் தீக்ஷன, நுவான் துஷார

இன்று இரண்டு அணிகளும் மோதும் இரண்டாவது போட்டி இதே மைதானத்தில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

பத்திரிகை அச்சுக்கு போகும் வரையான தகவலே இவை




## பொதுநலவாய விளையாட்டு விழாவுக்காக ரூ. 22.5 மில்லியன்களை வழங்கும் இலங்கை கிரிக்கெட்



இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் எதிர்வரும் ஜூலை மாதம் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 22ஆவது பொதுநலவாய விளையாட்டுப் விழாவில் கலந்துகொள்ளும் இலங்கை வீரர்களுக்கு 22.5 மில்லியன் ரூபா நிதியை வழங்க இலங்கை கிரிக்கெட் தீர்மானித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் தலைவர் ஷம்மி டி சில்வாவுக்கும், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கும் இடையில் நேற்று (02) விளையாட்டுத்துறை அமைச்சில் இடம் பெற்ற சந்திப்பின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலின் போது, தேசிய விளையாட்டு நிதியத்தின் ஊடாக மேலும் பல விளையாட்டு சங்கங்களுக்கு இலங்கை கிரிக்கெட் சபை தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என விளையாட்டுத்துறை அமைச்சரிடம் இலங்கை கிரிக்கட் சபையின் தலைவர் மேலும் உறுதியளித்தார்.

நாட்டில் தற்போது நிலவும் டொலர் நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் நமது நாட்டில் உள்ள திறமையான விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு இந்த நிதியானது பெரும் உதவியாக இருக்கும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையில் உள்ள திறமையான விளையாட்டு வீரர்கள் இவ்வாறான சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தி நாட்டுக்கு புகழைப் பெற்றுத் தருவார்கள் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசகர் ரவீந்திர சமரவிக்ரம, இலங்கை கிரிக்கட் உப பொருளாளர் சுஜீவ கொடலியத்த ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முன்னதாக கடந்த ஆண்டு நடைபெற்ற டோக்கியோ ஒலிம்பிக்கில் கலந்துகொள்ளும் இலங்கை அணிக்கு அனுசரணை வழங்க இலங்கை கிரிக்கெட் முன்வந்த போது, தேசிய ஒலிம்பிக் குழு அந்த நிதியை ஏற்க மறுப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## சம்பியன்ஸ் லீக் 2022 தொடரின் செரண்டிப் இலகு வெற்றி; வாய்ப்புக்களை தவறவிட்ட சோண்டர்ஸ்

திருகோணமலை குறூப் நிருபர்



சம்பியன்ஸ் லீக் 2022 தொடரின் முதல் வாரத்திற்கான இறுதி இரண்டு போட்டிகளும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. இதில் செரண்டிப் கால் பந்து கழகம் 4–0 என சென் மேரிஸ் அணியை வீழ்த்த, சோண்டர்ஸ் மற்றும் சொலிட் அணிகளுக்கு இடையிலான போட்டி தலா ஒரு கோலுடன் சமநிலையடைந்தது.

கொழும்பு சுகததாஸ அரங்கில் இடம் பெற்ற இந்தப் போட்டியின் ஆரம்பத்தில் எதிரணியின் மத்திய களத்தில் சோண்டர்ஸ் வீரர் நிரேஷ் சொலிட் வீரரிடமிருந்து பரித்த பந்தின் மூலம் சிறந்த பந்துப் பரிமாற்றத்தை மேற்கொண்ட சோன்டர்ஸ் வீரர்கள் சிரேஷ்ட வீரர் கிறிஷாந்த அபேசேகர மூலம் போட்டியின் முதல் கோலைப் பெற்றது.

இதனால் முதல் பாதி சோண்டர்ஸ் அணியின் முன்னிலையுடன் நிறைவடைந்தது. இரண்டாம் பாதியின் மத்திய களத்தில் இருந்து சொலிட் வீரர் சமித் மதுரங்க எதிரணியின் கோலுக்கு வேகமாக உதைந்த பந்து கோலின் இடது கம்பத்தில் பட்டு உள்ளே சென்றது. மேலதிக நேரத்தில் சோண்டர்ஸ் வீரர்கள் முழுமையாக பந்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்து கோலுக்கான முயற்சிகளை அடுத்தடுத்து மேற்கொண்டாலும் அவற்றினால் சிறந்த நிறைவுகள் எதனையும் அவர்களால் மேற்கொள்ள முடியாமல் போனது. போட்டியின் ஆரம்பம் முதலேயே தொடர்ந்து வாய்ப்புக்களை வீணடித்த சோண்டர்ஸ் வீரர்களால் போட்டியை 1–1 என சமநிலையுடனேயே முடிக்க முடிந்தது.

குருனாகல் மாலிகாபிடிய அரங்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியின் முதல் பாதியில் சென் மேரிஸ் வீரர் அன்டனிப்பிள்ளை கிளின்டஸ் பெற்றுக் கொடுத்த ஓன் கோல் மற்றும் எவான்ஸ் பெற்ற கோல்களுடன் செரண்டிப் வீரர்கள் முன்னிலை பெற்றனர்.

பின்னர் இரண்டாம் பாதியில் எவன்ஸ் மேலும் இரண்டு கோல்களைப் பெற, சம்பியன்ஸ் லீக் 2022 தொடரின் முதலாவது ஹெட்ரிக் கோலை எவன்ஸ் பதிவு செய்தார்.

போட்டியில் முழு ஆதிக்கம் செலுத்திய செரண்டிப் கால்பந்து கழகம் ஆட்ட நிறைவில் 4–0 என இலகுவாக வெற்றி பெற்றது.

## ஐசிசி இன் சிறந்த வீரர்களுக்கான பரிந்துரையில் இரு இலங்கை வீரர்கள்





2022ஆம் ஆண்டின் மே மாதத்திற்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் சிறந்த வீரர்களுக்கான பரிந்துரையில், இலங்கை கிரிக்கெட் அணியினைச் சேர்ந்த இரண்டு வீரர்கள் இடம்பெற்றிருக்கின்றனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு எதிராக நடைபெற்று முடிந்த இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்திய இலங்கை அணியின் அஞ்சலோ மெதிவ்ஸ் மற்றும் அசித்த பெர்ணான்டோ ஆகிய வீரர்களே, ஐசிசி இன் சிறந்த வீரர்களுக்கான பரிந்துரையில் இடம்பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அஞ்சலோ மெத்திவ்ஸ் பங்களாதேஷ் அணிக்கு எதிராக நடைபெற்று முடிந்த டெஸ்ட் தொடரில் இரண்டு சதங்கள் அடங்கலாக 344 ஓட்டங்கள் குவித்திருந்ததோடு, தொடரில் அதிக ஓட்டங்கள் பெற்ற வீரராகவும் மாறியிருந்தார்.

பங்களாதேஷ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் 199 ஓட்டங்கள் குவித்திருந்த அஞ்சலோ மெதிவ்ஸ், இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தனன்ஞய டி சில்வா மற்றும் தினேஷ் சந்திமால் ஆகியோருடன் இணைந்து பெற்ற இணைப்பாட்டங்கள் (முறைய 102, 199 ஓட்டங்கள்), பங்களாதேஷ் அணியுடனான டெஸ்ட் தொடரினை 1–0 என இலங்கை வெற்றி கொள்வதற்கும் காரணமாக அமைந்திருந்தது.

அஞ்சலோ மெத்திவ்ஸ், தனது அபார துடுப்பாட்டம் காரணமாக டெஸ்ட் துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையிலும் 15ஆவது இடத்திற்கு முன்னேறியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக கடந்த மாதத்தில் சிறந்த பல சிறந்த பெறுபேறுகளை வெளிக்காட்டியிருந்தமை அஞ்செலோ மெதிவ்ஸ், சிறந்த வீரர்களுக்குரிய பரிந்துரைக்கு உள்ளானமைக்கு காரணமாக அமைகின்றது.

மறுமுனையில் சிறந்த வீரருக்கான பரிந்துரையில் உள்வாங்கப்பட்டுள்ள அசித்த பெர்னாண்டோ, பங்களாதேஷ் டெஸ்ட் தொடரில் மொத்தமாக 13 விக்கெட்டுக்களை கைப்பற்றி தொடரில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்த வீரராக மாறியதோடு, பங்களாதேஷ் டெஸ்ட் தொடரினை இலங்கை கைப்பற்ற மற்றுமொரு பிரதான காரணமாகவும் இருந்தார்.

பங்களாதேஷ் டெஸ்ட் தொடரில் சிறந்த ஆட்டத்தினைக் காண்பித்த, பங்களாதேஷ் அணியின் அனுபவ துடுப்பாட்டவீரரான முஷ்பிகுர் ரஹீமும், சிறந்த வீரர்களுக்கான பரிந்துரையில் இடம்பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. முஷ்பிகுர் ரஹீம் இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் தொடரில் 303 ஓட்டங்களை குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் குளவி கொட்டி 25 மாணவர்கள் வைத்தியசாலையில்





**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி மகா வித்தியாலயம் நேற்று (07) நிறைவுபெறும் நேரத்தில் குளவி கூடு கலைந்தமையால் 25 மாணவர்களை குளவி கொட்டியுள்ளது. இதனால் 25 மாணவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 11 பேர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்று பகல் 1.30 மணியளவில் குரங்குகளின் நடவடிக்கையால் குளவி கூடு கலைந்துள்ளது. இதன் காரணமாக பாடசாலை விட்டு வெளியேறுகின்ற நேரத்தில் பல மாணவர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

குறித்த நேரத்தில் மாணவர்கள் பதற்றத்துக்குள்ளாகியதோடு, சில மாணவிகள் குளவி கொட்டுக்கு உள்ளாகி மயக்கமடைந்துள்ளனர். இவர்கள் உடனடியாக சமூர்த்தி திணைக்களப் பணிப்பாளரின் வாகனத்தில் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மாணவர்களில் 11 பேர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் விடுதிகளுக்கு அனுப்பபட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் குளவி கூடு கலைந்த போது பாடசாலையின் அபாய சமிக்ஞை ஒலி எழுப்பப்பட்டது. இதன் காரணமாக மாணவர்கள் பதற்றத்துக்குள்ளாகினர். ஆனாலும் பாடசாலையின் பிரதான வாயில் மட்டுமே திறந்துவிடப்பட்டது. ஏனைய இரண்டு வாயில்களும் பூட்டப்பட்டே இருந்தது என்றும் ஆபத்துகளின் போது மாணவர்களை பாதுகாப்பாக வெளியேற்றும் எந்த பொறிமுறையும் இன்றி பாடசாலை காணப்பட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்த பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# அளம்பில் பகுதியில் குடும்பஸ்தர் அடித்து கொலை

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்து கொலைசெய்யப்பட்ட சம்பவம் கடந்த 06 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

செம்மலையினைச் சேர்ந்த 41 அகவையுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் அளம்பில் பகுதியில் வீட்டில் தந்தையுடன் வசித்து வந்த வேளை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அன்று இரவு வீட்டிற்குச் சென்ற இருவர் குறித்த நபரை அழைத்து தாக்குதல் நடத்தியுள்ளார்கள். இதன்போது தலையில் படுகாயமடைந்த குறித்த நபர் நிலத்தில் வீழ்ந்துள்ள நிலையில் உயிரிழந்துள்ளார். வீட்டில் இவரும் இவரது தந்தையுமே வசித்து வந்துள்ளார்கள். இந்த சம்பவத்தினைத் தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு!

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் 2020 / 2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தும் நிகழ்வுகள் எதிர்வரும் 09 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

அன்று காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபா மண்டபத்தில், பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

2020 / 2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும், பெற்றோரும் நிகழ் நிலையூடாக இந் நிகழ்வில் கலந்து கொள்ள முடியும். நிகழ்வுக்கான இணைப்புகள் புதுமுக மாணவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல், மற்றும் கைத் தொலைபேசிக் குறுந் தகவல்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இணைப்புகள் கிடைக்காதவர்கள் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடாதிபதி அலுவலகத்தின் 021 320 5486 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன் அறிவித்துள்ளார்.

# குளவி கொட்டி வயோதிபர் உயிரிழப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

குளவி கொட்டி வயோதிபர் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை உயிரிழந்தார். நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை நடைபெற்ற இச்சம்பவத்தில் பருத்தித்துறை சக்கோட்டையைச் சேர்ந்த சூசைப்பிள்ளை சகாயராணி 64 வயது என்பவரே உயிரிழந்தவராவார். இவ்வயோதிபர் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த போது குளவி கொட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது. பிரேத பரிசோதனையின் பின்னர் வயோதிபரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.





லண்டனைச் சேர்ந்த பீட்டர் சந்திரகாந்தன் லக்சனாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது நிதியுதவியில் தென்மராட்சிமறவன்புலோ பகுதியில் பார்வைக் குறைபாடுடைய 65பேருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கி வைக்கப்பட்டது. சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் நிமலரோகன் லண்டனைச் சேர்ந்த மோறிஸ் என்பவரிடம் விடுத்த கோரிக்கையின் பயனாக தீபா பல், மூக்கு கண்ணாடி நிறுவனம் ஊடாக குறித்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சாவகச்சேரி விஷேட நிருபர்

# கொடிகாமத்தில் தேங்காய் திருடன் பொலிஸாரால் கைது

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் தொடர் தேங்காய் திருட்டில் ஈடுபட்ட நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கொடிகாமப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொடிகாமம் காளி கோவில் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளார். கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். தற்போது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக நாட்டில் களவு உள்ளிட்ட சட்டவிரோதச் செயற்பாடுகள் வெகுவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருடிய சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

கொடிகாமம் பகுதியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை வேளையில் வீடு உடைத்து பணம் திருடிய சந்தேகத்தின் பேரில் கொடிகாமப் பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளார். கைதான நபரிடம் இருந்து பேர்ஸ் (பணப் பை) ஒன்றும் கைப்பற்றப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மன்னாரில் தேனீ மாற்றாற்றல் அமைப்பினரால் விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுப்பு



**மன்னார் குறூப் நிருபர்**

பொது போக்குவரத்தில் மாற்றாற்றல் உடையவர்களுக்கான ஆசன ஒதுக்கீட்டை உறுதிப்படுத்தக் கோரி விழுது அமைப்பின் அனுசரணையில் தேனீ மாற்றாற்றல் அமைப்பினரால் விசேட விழிப்புணர்வு நிகழ்வு மன்னார் பிரதான பேருந்து நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (7) இடம்பெற்றது.

இதன் போது அரச மற்றும் தனியார் போக்குவரத்து பேருந்துகளில் மாற்றாற்றல் உடையவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் பிரத்தியோக ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டதுடன் மாற்றாற்றல் உடையவர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமேல், விழுது அமைப்பின் மாவட்ட இணைப்பாளர், தேனீ அமைப்பின் உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் ஸ்ரிக்கர்களையும் காட்சிப் படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் மண்ணெண்ணெய் விநியோகம்





**யாழ். விசேட நிருபர்**

கமநல சேவைகள் திணைக்களத்தினால் யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் எரிபொருள் அட்டைகளுக்கு செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசனின் அறிவுறுத்தலில் கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணைந்து இந்த நவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயிகளுக்கு எரிபொருளை வழங்குவதற்கு அவர்களது பயிர்ச்செய்கை நிலங்களின் அடிப்படையில் முன்னர் எரிபொருள் அட்டை வழங்கப்பட்டது.

அந்த அட்டையைக் காண்பித்து யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்ள முடியும்.

முதல் கட்டமாக விவசாயிகளின் தேவை அளவின் 25 சதவீத மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, எரிபொருள் அட்டை இல்லாத விவசாயிகள் தத்தமது பிரதேச கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பித்து பெற்றுக்கொண்டு மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவும் இக்கால கட்டத்தில் சுயதொழில் பொருளாதாரத்தில் ஈடுபாடுடைய முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் செல்வம் மேரி நிர்மலா, சுயதொழிலில் ஆற்றல்களையும் திறன்களையும் கொண்டவர். முன்பள்ளி, இசை மற்றும் உளவள ஆற்றுப்படுத்தல் கற்கை துறைகளில் டிப்ளோமா கற்கை நெறியை நிறைவு செய்தவர். அதேவேளை முன்பள்ளிப் பாடசாலை பிள்ளைகளின் மேம்பாட்டுக்காக காவேரி கலாமன்றத்தின் ஊடாக உன்னத சேவையாற்றி வருபவர். இக்கால சூழலைக் கருத்திற் கொண்டு தன்னுடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார் செல்வம் மேரி நிர்மலா.

# பொருளாதார நெருக்கடிக்கு சுயதொழிலும் உந்து சக்தியாக அமையும்



## காணாமல் போண கணவரின் துயரத்தில் துவண்டு விழாமல் முன்னோக்கி செல்லும் வீர மங்கை

**நீங்கள் முன்பள்ளி பாடசாலைகளின் மேம்பாட்டுக்காக பங்காற்றி வரும் ஒருவர். இத்துறையில் ஆர்வம் காட்டுவதற்கான காரணம் என்ன?**

க. பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரம் படித்து விட்டு பரீட்சைப் பெறுபேற்றினை எதிர்பார்த்திருக்கும் சில மாத கால இடைவெளிக்குள் மறையாசிரியர்கள் பிள்ளைகளுக்கு பாடங்கள் கற்பிப்பார்கள். இதைப் பார்த்து மன அடித்தளத்தில் சந்தோசமாக இருக்கும். இதைக் கண்டு சின்னக் குழந்தைகளோடு வேலை செய்ய வேண்டும். அவர்களுக்கு கற்பித்துக் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

கூடுதலாக சின்னஞ் சிறார்களுடைய பாடல்களையும் கதைகளையும் விரும்பிப் படிப்பேன். கள்ளம் கபடமற்ற செல்லக் குழந்தைகளோடு இருந்து வேலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. க. பொ த உயர் தரப் பரீட்சை பெறுபேறு வரைக்கும் முதன் முதலில் முன்பள்ளிப் பாடசாலை ஒன்றுக்கு பாடம் கற்பிக்கச் சென்றேன். அங்கு எல்லோரையும் விட எல்லாத் துறையிலும் பணியாற்ற என்னிடம் ஆளுமை இருந்தது. இதனை பெண் இறை அடிகளார்கள் அறிந்து கொண்டார்கள். முன்பள்ளிப் பாடசாலையில் இடம்பெறும் விளையாட்டாக இருந்தாலும் சரி கலை,கலாசார விழாக்களாக இருந்தாலும் சரி கூடுதலாக முன்னுக்கு வந்து காலம் நேரம் என்று பார்க்காமல் வேலை செய்வேன்.

நான் வீட்டில் இருந்த போதிலும், நாளைக்குச் சென்று எதைச்செய்வேன் என்று யோசிப்பேன். ஒரு பிள்ளையொன்று பின்னோக்கி இருந்தால் அந்தப் பிள்ளையை எப்படி முன்னோக்கி கொண்டு வருவது? அந்தப் பிள்ளையை எந்த விளையாட்டில் ஈடுபடச் செய்யலாம். அவ்வாறான சிந்தனையோடுதான் நான் வேலை செய்தேன். இவ்வாறு பணிகள் செய்து 28 வருடங்கள் நிறைவடைந்து விட்டன.

**உங்கள் இசைத் துறை பங்களிப்புக்கள் தொடர்பாக கூற முடியுமா?**

பிரத்தியேகமாக நான் இசைத் துறையிலும் கல்வி கற்று ஏ தரத்தில் சித்தியடைந்துள்ளேன். எங்களது முகாம் பகுதியில் இசைத் துறைக்கான ஆசிரியைகள் யாருமே இல்லை. பகுதி நேரமாக பாடசாலையிலும் இசைப் பாடத்தை போதித்து வந்தேன். க. பொ. த. சாதாரண தர மாணர்களுக்கான இசைப் பாடத்தையும் நானே கற்பித்தேன். அவர்கள் தமிழ் திறன் போட்டிகளில் கலந்து கொண்டு விருதுகள், சான்றுகள் பெற்றுள்ளார்கள். இந்த இசைத் துறையில் ஒரு பட்டதாரி செயற்படுவதை விட கடவுள் எனக்கு சிறந்த திறனையும் ஆளுமையையும் தந்துள்ளார். சிறந்த குரல் வளத்தையும் தந்துள்ளார். நான் நன்றாகப்பாடுவேன். இது என்னிடம் இருந்து வரவில்லை. ஆண்டவனின் இயற்கையில் இருந்து வந்தது. இந்த இரண்டும் ஒருங்கே அமைந்தமையால் இந்த இசைத் துறையில் பிரகாசித்துக் கொண்டு தொழில் புரிந்து வருகின்றேன்.

க. பொ.த உயர்தரப் பரீட்சையில் இசைப் பாடம் தான் எடுத்தேன். சின்ன வயதில் இருந்து எனக்கு கலையில் விருப்பம். பிள்ளைகளுடைய மறைத்தின விழா, தமிழ் மொழி தின விழா அல்லது வேறு ஏதாவது விழா இடம் பெற்றால் என்னுடைய நிகழ்வொன்று நிச்சயமாக அரங்கேறும். நான் ஒரு சின்ன ஆள்தான். நான் சின்னப் பிள்ளைகளை வைத்து ஏதாவது ஒரு அரங்கேற்றத்தைச் செய்து விடுவேன்.

எனக்கு பல்கலைக்கழகம் அனுமதி கிடைத்தது. அக்கால கட்டத்தில் நிலவிய நாட்டின் யுத்தகால சூழ்நிலையின் காரணமாக பல்கலைக்கழகம் செல்ல முடியாமல் போயிற்று. பொருளாதார நெருக்கடி நிலைமை இருந்தது. குடும்ப உதவிகள் இல்லை. மேற்கொண்டு படிக்க வசதியில்லை. தொண்டர் ஆசிரியையாக பாடசாலையில் கற்பித்து வந்ததை சிறிய காலம் இடைநிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

**நீங்கள் முன்பள்ளிப் பாடசாலைத் துறையில் எத்தகைய பணிகள் ஆற்றினீர்கள்?**

முன்பள்ளிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு கல்வி போதித்தாலும் முன் பள்ளிப் பாடசாலைகளுக்கெல்லாம் ஒரு இணைப்பதிகாரியாகவும் சேவையாற்றியுள்ளேன். வறுமையின் காரணமாக நெருக்கடி நிலைக்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட பிள்ளைகள். அனாதைப் பிள்ளைகள், கற்றலுக்கான சூழல் வசதிகள் இல்லாத பிள்ளைகளை தெரிவு செய்து அவர்கள் பற்றிய ஒரு முழுமையான தகவல்களை சேகரித்து வைத்துள்ளேன். அவர்களுக்கான சிறுவர் விளையாட்டுக் கழகம் அமைத்து தேவையான விளையாட்டு உபகரணங்கள், கற்றல் உபகரணங்கள், சீருடைகள், பாதணிகள் உள்ளிட்ட அனைத்து வகையிலான உதவிகளையும் காவேரி கலா மன்றத்தின் ஊடாகப் பெற்றுக் கொடுத்து வந்தேன். அவை மட்டுமல்ல பிள்ளைகளுடைய தாய்மார்களுக்கிடையே ஒரு குழுவை அமைத்து கோழி வளர்ப்பு. அதன் மூலம் எப்படி இலாபம் ஈட்டலாம்.சிறு உற்பத்திகளை உருவாக்கினால் நாம் நிச்சயமாக முன்னுக்கு வரலாம் என்று அவர்களை விழிப்புணர்வூட்டி, ஆற்றுப்படுத்தல் வேலைகளை மறைமுகமாக செய்வேன்.

சிறுபிள்ளைகள் குடும்பச் சூழலில் படிக்க முடியாத நிலையில் நிறைய நெருக்கடியோடு வருவார்கள். அவர்களுக்கு கற்றலுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குகிறேன். பேக், காலணிகள், சீருடைகள் போன்றவைகள் பெற்றுக் கொடுப்பேன்.

நான் எந்த தொண்டு நிறுவனத்திலும் சம்பளத்திற்கு வேலை செய்வதில்லை. ஒரு மனிதாபிமான அடிப்படையில் பொதுப் பணிகள் புரிந்து வருகின்றேன். அருள் பணி பெனி அடிகளாரின் தொடர்பு ஏற்பட்டது. அவர் காவேரி கலாமன்றம் என்னும் அமைப்பினுடைய ஒரு முக்கிய பிரதிநிதி. அதன் மூலமாக நிறைய முன்பள்ளி மாணவர்களுக்கும் மற்றும் மாலை நேர சிறுவர் கழக மாணவர்களுக்கும் உடல், உள ஆரோக்கியத்திற்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இவை தவிர சகல முன்பள்ளி பாடசாலைப் பிள்ளைகளுக்கு கற்றல்கள் உபகரணங்கள் கொடுத்து வருகின்றேன். சிலவேளையில் தனிப்பட்ட நபர்கள் ஊடாகவும் உதவிகள் செய்து வருகின்றேன்.





அதே போன்று காவேரி கலாமன்றத்தின் அனுசரணையுடன் என்னுடைய வழிகாட்டலின் கீழ் இயங்கும் மகளிர்க் குழுக்களுக்கிடையே சுயதொழிலை ஏற்படுத்தி குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்தி வருகின்றேன். எங்கள் மத்தியில் 15 பெண் குழுக்கள் இருக்கின்றன. காவேரி கலாமன்றத்தின் உதவியோடு சுயதொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் கிடைத்தன. ஒரு குழுவுக்கு குறிப்பிட்ட ஒரு தொகை நிதி உதவியினை வழங்கினார்கள். அந்த வகையில் சின்னப் பிள்ளைகள் விரும்பி உண்ணக் கூடியதும் இப்பிரதேசத்தில் இல்லாத இனிப்பு பண்டமாகவுள்ள நைஸ் உற்பத்திகளை திறன்பட செய்து அதிக இலாபம் ஈட்டி வருகின்றோம். உள்ளூரில் இதற்கு அதிக மவுசு இருக்கிறது.

**உங்களது சுயதொழில் துறையில் சவால்கள் பற்றி**

இதனை ஒரு பெரியளவிலான முறையில் செய்வதற்கு பொது சுகாதார பரிசோதகர்கள் அனுமதி வழங்குகிறார்களில்லை. இதற்கு தனியானதொரு கட்டடம் வேண்டும். இதற்கு நல்ல வருமானம் இருக்கிறது. இவ்வாறான தடையும் இருக்கிறது. மா அரைக்கின்ற இயந்திரமும் வைத்திருக்கின்றோமம். அரசி மாவை அரைத்து அதனைப் பொதி செய்து கடைகளுக்கும் வீடுகளுக்கும் விற்பனை செய்து வருகின்றோம். அவை மாத்திரமல்ல பச்சை அரிசியை கொண்டு வந்தால் அதனை அரைத்து வறுத்துக் கொடுக்கின்றோம்.

**உங்களது உற்பத்திப் பொருட்கள் பற்றி,..**

விசேடமாக நாங்கள் போசாக்கு மாவுப் பொதிகளை உற்பத்தி செய்கின்றோம். தாய் சேய் சுகாதார மருத்துவப் பிரிவினர் இதனை வாங்கி போசாக்கு குன்றிய பிள்ளைகளுக்கு விநியோகம் செய்து வருகின்றார்கள். அதில் எல்லா வகையிலான விட்டமின்களும் இருக்கின்றன. அத்தோடு முருங்கையிலைப் பவுடர், வல்லாரை, குறிஞ்சா, அகத்தி,பெசன் புரூட் இலை, பாவற்காய் முதலியவைகளை அரைத்து பொதி செய்து விற்பனை செய்து வருகின்றோம். வல்லாரை இலைகளை நன்றாக கழுவி அதனை வெயிலில் காய வைத்து பொதி செய்து விற்பனை செய்கின்றோம்.

இந்த உற்பத்திப் பொருட்களை வெளியிடங்களுக்கும் விற்பனை செய்து வந்தோம். தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு, விலையேற்றம் காரணமாக விநியோகம் செய்வது கடினமாக இருக்கிறது. இந்த உற்பத்திப் பொருட்களை உள்ளூரில் வீட்டுக்கு வீடு விநியோகம் செய்கின்றோம்

இந்த நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு முன்னர் இந்த அரைத்த மாவு ஒரு கிலோ மாவு 110 ரூபாவுக்கு விற்பனை செய்தோம். தற்போது அரிசி 240 ரூபாவுக்கு மேல் செல்லுகின்றது. அதனால் இதனை தற்போது நிறுத்தி வைத்துள்ளோம். இப்போது எவ்வாறு வியாபாரம் செய்வது என்று தெரியாது. வீடு வீடாக எடுத்துச் சென்று விற்பனை செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு நிறுனத்திற்கு பொறுப்புக் கொடுத்துள்ளோம். அவர்கள் அதற்கு உதவி செய்கிறார்கள்.

மூலிகைகளை காய வைத்து அதனை தேவைக்கு ஏற்றாப் போல அரைத்து பொதி செய்து விற்பனை செய்கின்றோம். கறிவேப்பிலையை மிக இலகுவான முறையில் அரைத்து அதனைப் பொதி செய்து விற்பனை செய்வோம். எமது குழுவில் 15-20 வயதுக்கிடைப்பட்டவர்கள் அங்கத்துவம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். இக்குழுவிலுள்ள பெண்கள் அனைவரும் பெண் தலைமையை கொண்ட குடும்பத்தவர்கள் ஆவர்.

ஒரு நாளைக்கு 3000 வடைகள் சுட வேண்டும். அதற்கு மூன்று தாய்மார்கள் பணி புரிய வேண்டும். இதில் வரும் இலாபத்தைப் பிரித்தெடுத்து ஐந்தில் ஒரு பகுதியை சேமிப்புச் செய்வோம். அப்படியே பிரித்து அந்த தாய்மார்களுக்கு கொடுப்போம். ஒரு தாய்க்கு தலா ரூபா 2000, 3000 வருமானம் கிடைக்கும். தொடர்ந்து வேலை செய்தால் அதை விடக் கூடுதலாக கிடைக்கும். சராசரி இந்த குழுமத்திலுள்ளவர்கள் தலா 1000 ரூபா பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. சில வேளை கேள்விகளைப் பொறுத்து கொஞ்சம் குறைவாக இருக்கும்.

ஒரு நிரந்தரக் கட்டடம் கிடைத்தால் பெரியளவில் உற்பத்திகள் செய்ய முடியும். வெளி இடங்களுக்கு விநியோகம் செய்து அதிக இலாபம் ஈட்டலாம். எல்லாவற்றிற்கும் மேலாக இதற்கு நிரந்தரக் கட்டடம் மிகுந்த தேவைப்பாடாக இருக்கிறது. தற்போது எனது இல்லத்திலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. இது வீட்டில் வைத்துச் செய்வதால் பொதுச் சுகாதார பரிசோதர்களின் தொல்லை அதிகம். இவை இரண்டு வருடங்களாகச் நடைபெறுகின்றன.

2013 களில் நாங்கள் ஆரம்ப காலத்தில் கல் உரலில் இடிப்போம். சிலதை மர உரலில் இடிப்போம். இதனால் தாய்மார்களின் கைகள் எல்லாம் காய்ச்சிப் போய் விடும். ஆரம்பத்தில் சரியாக கஷ்டப்பட்டோம். இலாபமும் பெரியளவில் கிடைக்காது. கிரைண்டர் மூலம் அரைத்துச் செய்வதில் எனக்கு பெரிய இலாபம் இல்லை. என்னுடைய குழுமத்திலுள்ள தாய்மார்கள் வருமானம் ஈட்டுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கின்றேன். ஒரு மனத் திருப்திகரமான சந்தோசம் இருக்கிறது. இதற்கெல்லாம் ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் செயற்பட்ட அருள் பணி பெனி அடிகளார் அவர்களுக்கு நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

## தான் பட்ட கஷ்டம் மற்றவர்கள் அனுபவிக்க கூடாது என்று சுயதொழில் பொருளாதாரத்தில் மகளிரை ஈடுபடுத்தும் சமூக ஆர்வலர்,...

**உங்கள் குடும்பம் பற்றி கூற முடியுமா?**

என் கணவர் காணாமற் போன ஒருவர். இதுவரையிலும் என்ன நடந்தது என்ற வேதனையில் இருக்கின்றோம். இவர் படையினரிடம் உயிரோடு ஒப்படைக்கப்பட்டவர். இப்போது இல்லை என்று தான் சொல்லுகிறார்கள்.

நான் அலம்பில் ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் க. பொ. த சாதாரண தரம் வரையில் படித்தேன் க. பொ. த உயர்தரம் மடு தேவாலயத்தில் கற்றேன். பின்னர் அங்கேயே வேலை செய்தேன். முருங்கன் நலன்புரி நிலையத்தில் ஒன்பது வருடம் வேலை செய்தேன். அங்கு இடம்யெர்ந்த மக்கள் நிறையப்பேர் இருந்தார்கள். அவர்களுக்கு சேவைகள் செய்தேன். கழிமோட்டை என்ற இடத்திலும் வேலை செய்தேன். ஐந்து ஆறு கிலோ மீட்டர் சைக்கிளில் போவேன். அங்கு முன்பள்ளிப் பாடசாலை இருந்தது. இக்கால கட்டத்தில் தான் திருமணம் செய்து கொண்டேன். போராட்டச் சூழலில் கணவரும் இருந்தவர். அக்கால கட்டத்தில் புதுமாத்தளன் என்ற இடத்திற்கு வந்து பாடசாலைப் பிள்ளைகளுக்குப் படிப்பித்துக் கொண்டு இருந்தேன்.

**நீங்கள் சமூகப் பணியிலும் சுய தொழிலிலும் ஈடுபடுவதற்கான துண்டுதல் எப்படி வந்தது.?**

மீள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வந்த பிறகுதான் என்னை விட பாதிக்கப்பட்டவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு நான்சேவை செய்ய வேண்டும். எல்லோரும் துவண்டு போனால் தம் சமூகம் விழுந்து விடும் என்ற எண்ணம் எனக்குள் இருந்தது. எனக்கு ஒரு துன்பம் வரும் போது நான் யோசிப்பது என்னைப் போலதான் மற்றவர்களும் துன்பப்படுவார்கள். இவற்றை பார்க்கும் போது என்னுடைய தாக்கம் மிகக் குறைவானதாக இருப்பது தெரிகிறது.

சுயமாகச் செயற்பட்டு பல்வேறு சமூக பணிகளில் ஈடுபட்டு வந்தேன். இந்த சந்தர்ப்பத்தில அருள் பணி பெனி அடிகளார் எங்களோடு இணைந்து முன்பள்ளிப் பாடசாலையை மேம்படுத்துவதில் எண்ணற்ற உதவிகள் புரிந்துள்ளார். அவர் கலாமன்றத்தின் மூலமாக 56 முன் பள்ளிப் பாடசாலைகளுக்கு உதவி செய்து வந்தார். முன்பள்ளி ஆசிரியைகளுக்கு 5,200 ரூபா சம்பளம் வழங்கி வந்தார். குறிப்பாக முல்லைத்தீவுப் பகுதிகளில் மட்டும் 56 முன் பள்ளிப் பாடசாலைகள் செய்தார்.

இவை தவிர யாழ்ப்பாணம், மன்னார் மடு, மட்டக்களப்பு, அம்பாறை என்று அவர் ஒன்பது வலயங்களுக்கு உதவி செய்து வந்தவர். கொரோனா காரணமாக சிலதை இடை நிறுத்தி விட்டார். முன்பள்ளிப் பாடசாலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட சேவைப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. சத்துணவு, சீருடை, உபகரணங்கள் வழங்குதல், சிறுவர் விளையட்டு உபகரணங்கள், ஆசிரியைகளுக்கு அன்பளிப்புகள், ஒவ்வொரு வருடமும் ஆசிரியைகளுக்கு வழிகாட்டல்கள் வழங்குதல். நன்றாக வேலை செய்யக் கூடியவர்களைத் தெரிவு செய்து அன்பளிப்பு பாராட்டுக்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இத்தகைய நல்லுள்ளம் கொண்ட சமூகப் பணியாளர்களுடன் இணைந்து சேவையாற்றக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. இதுவே ஒரு முழு நேர சமூகப் பணியாளராகவும் சுயதொழில் நிலையத்திற்கான முகாமையாளராகவும் தன்னை அர்ப்பணித்து செயற்பட வாய்ப்பு வழங்கியமை என்று குறிப்பிடலாம்.

**நீங்கள் இறுதியாக கூறுவது என்ன?**

இந்த பொருளாதார நெருக்கடியான கால கட்டத்திலும் துவண்டு விழாமல் குடும்ப பொருளாதார வாழ்வை மேலும் திறன்பட முன்னெடுத்து செல்வோம். எனவே இந்த நெருக்கடியான கால கட்டத்தில் காவேரி கலா மன்றத்தினர் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் நல்லாதரவையும் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்பது என்னுடைய எதிர்பார்ப்பாகும்.

நேர்காணல் : இக்பால் அலி









# நகர்வலம்



மாத்தறை மாவட்டத்தில்

## 500 வீட்டுத்தோட்டங்களில் விவசாய செய்கை மேற்கொள்ளத் திட்டம்

மாவட்ட உதவி அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(மாத்தறை தினகரன் நிருபர்)

மாத்தறை மாவட்டத்திலுள்ள சகல அரசாங்க மற்றும் தனியார் துறைகளுக்கு சொந்தமான தோட்டங்களில் உணவு உற்பத்தித் திட்டம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தின் சுமார் 500 வீட்டுத் தோட்டங்களில் விவசாய செய்கை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட உதவி அரசாங்க அதிபர் லக்மினி தேனுவர தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கியுள்ள உணவுப் பற்றாக்குறையை தீர்க்கும் பொருட்டு மேற்படி திட்டம் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நாட்டில் விவசாயப் புரட்சியொன்றை ஆரம்பிக்கும் நோக்கிலேயே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் உதவி அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.



மாத்தறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் லக்மினி தேனுவர தலைமையில் றுஹூனு சேவை அலுவலகத்தில் (3) நடைபெற்ற வைபவத்திலே இந்த விடயம் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, மாவட்டத்திலுள்ள சகல அரசாங்க தனியார் துறைகளிலும் உணவு உற்பத்தித் திட்டம் மேற்கொள்ளப்படும். மேலும் மாவட்டத்தின் சுமார் 500 வீட்டுத் தோட்டங்களில் விவசாய செய்கை மேற்கொள்ள நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் 40 இளைஞர்களை உள்ளடக்கிய படையொன்று ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்குத் தேவையான பசளைகள், விதைகள், ஆலோசனைகள் என்பவற்றை விவசாயத் திணைக்களம் வழங்கும். சேதனப் பசளைகள் மாத்திரமே விவசாய செய்கைக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வற்றாளை, மரவள்ளி, சேம்பு கிழங்கு வகைகளும் பயறு, சோயா, கௌபி போன்ற தானிய வகைகளும் மரக்கறிச் செய்கைகளும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் உதவி அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

131ஆவது வருட மனாகிப் மஜ்லிஸ்

## சீனன்கோட்டை பாஸிய்யா ஜும்ஆ பள்ளிவாசலில் நாளை ஆரம்பம்



(பேருவளை விசேட நிருபர்)

பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் 131ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் ஆரம்ப நிகழ்வு நாளை (09)ஆம் திகதி வியாழக்கிழமை மாலை அஸர் தொழுகையின் பின்னர் கலீபத்துஷ் ஷாதுலிகளான மௌலவி எம்.ஐ.எம். ரபீக் (பஹ்ஜி), எம்.எம். செய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி) ஆகியோர் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது. இம்மஜ்லிஸ் சீனன்கோட்டை பள்ளிச்சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

தொடர்ந்து 9 நாட்கள் மனாகிப் மஜ்லிஸ் இடம்பெறுவதோடு, உலமாக்களினால் மார்க்க உபந்நியாசங்களும் நிகழ்த்தப்படவுள்ளன. ஆரம்ப நிகழ்வான நாளை மாத்தறை மின்னதுல் பாஸிய்யா அரபிக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி அஸ்ஸெய்யித் பஸ்மின் மௌலானா (முர்ஸி) உரை நிகழ்த்துவார். தொடர்ந்து 09 தினங்கள் இம்மஜ்லிஸ் நடைபெற்று இறுதி தமாம் வைபவ மஜ்லிஸில் கலீபத்துஷ் ஷாதுலிகளான மௌலவி எம்.இஸட். ஸுஹ்ர் (பாரி), மௌலவி அஸ்ஸெய்யித் அலவி மௌலானா (முர்சி) ஆகியோர் உரையாற்றவுள்ளதாக சீனன்கோட்டை பள்ளிச்சங்க இணைச் செயலாளர் அல்ஹாஜ் எம்.எம். சிஹாப் தெரிவித்தார்.

## மசாஜ் நிலையம் முற்றுகை; இரு பெண்கள் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

ரம்பாவ நகரில் அமைந்துள்ள மசாஜ் நிலையம் ஒன்றை சுற்றிவளைத்தபோது இரு பெண்களை நேற்று முன்தினம் (06) கைது செய்ததாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனை பகுதியைச் சேர்ந்த 32, 34 வயது இரு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

மிஹிந்தலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய குறித்த மசாஜ் நிலையத்தை சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது இரு பெண்களை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில்

## கடந்த 5 மாதத்திற்குள் 13 எச்.ஐ.வி நோயாளர்கள் அடையாளம் காணல்

திறப்பனை தினகரன் நிருபர்



அநுராதபுரம் மாவட்டத்தில் கடந்த ஐந்து மாத காலங்களில் மாத்திரம் எச்.ஐ.வி / எயிட்ஸ் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட 13 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பாலியல் சுகாதார சேவைகளுக்கான நிலையத்தின் வைத்திய நிபுணர் ஹேமா வீரகோன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுர மாவட்டத்தின் கஹட்டகஸ்திகிலிய, தம்புத்தேகம, ஹொரவபொத்தான, அநுராதபுரம் மத்திய நுவரகம் பளாத்த மற்றும் மதவச்சிய ஆகிய பகுதிகளிலேயே தொற்றுக்குள்ளானவர்கள் அதிகம் காணப்படுகின்றனர்.

சமீபத்திய ஆண்டுகளில் மாவட்டத்தில் பதிவாகியுள்ள எச்.ஐ.வி. தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், 2022 ம் ஆண்டின் முதல் 5 மாதங்களில் 13 பேர் பதிவாகியுள்ளனர். இது பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எனலாம்.

சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் அநுராதபுரத்தில் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான முதலாவது நபர் பதிவாகியிருந்தார். அதன் பின்னர் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட மொத்த எச்.ஐ.வி. 2020 ஆம் ஆண்டில் மாத்திரம் 15 நோயாளர்கள் இனங்காணப்பட்டதன் மூலம் அதிகூடிய நோயாளர்கள் பதிவாகியிருந்தனர் என வைத்திய அதிகாரி ஹேமா வீரகோன் இது பற்றி தெரிவித்துள்ளார்.

எச்.ஐ.வி நோயை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சையளிப்பதன் மூலம் மக்கள் தங்கள் உயிருக்கு ஆபத்து இல்லாமல் சாதாரண வாழ்க்கையை வாழ முடியும். ஆனால், எச்.ஐ.வி.,பற்றிய பரிசோதனை செய்வதில் பலர் ஆர்வம் காட்டாததால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்துள்ளார்.

## காலஞ்சென்ற குவைத் தூதுவருக்கு கொழும்பு தூதரகத்தில் அனுதாபம்



இலங்கைக்கும் இலங்கை மக்களுக்கும் அளப்பரிய சேவைகளை செய்த இலங்கைக்கான முன்னாள் குவைத் தூதுவர் அப்துல்லாஹ் நாஸர் அல் ஸனூஸி அண்மையில் காலமானார்.

அன்னாருக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக கொழும்பிலுள்ள குவைத் தூதரகத்தில் திங்கள் முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை அனுதாப புத்தகம் வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள குவைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள குவைத் தூதரகத்தில் 2002, 2005 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கான குவைத் தூதுவராக பணியாற்றிய அப்துல்லாஹ் நாஸர் அல்ஸனூஸி, கடந்த ஜூன் 01ஆம் திகதி குவைத்தில் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிலக்கடலை பயிர்ச்செய்கை இரட்டிப்பான அறுவடை



அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

நிலக் கடலை பயிர்ச் செய்கை தேசிய தேவையை விட இரட்டிப்பான அறுவடை கிடைத்துள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

நிலக்கடலையின் வருடாந்த தேவை 30 மெட்ரிக் தொன்னாகும். ஆனால் 2021 ஆம் ஆண்டு இறுதிக்குள் நிலக்கடலை வேகத்தின் அறுவடை 64 மெட்ரிக் தொன்களை தாண்டியுள்ளதாக பயிர் பூச்சிக்கொள்ளிகள் தொடர்பிலான ஆலோசகர் எஸ்.என்.பி. வீரகோண் தெரிவித்தார்.

விவசாய திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வகை நிலக்கடலை விளைவு காரணமாக Jamibo pinnacle உற்பத்தியின் இறக்குமதி செய்யப்பட்ட பங்குகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் விவசாய திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு

## கைது செய்யப்பட்ட இருவருக்கும் 15ஆம் திகதி வரை விளக்கமறியல்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

கெக்கிராவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரது கடமைக்கு இடையூறு விளைவித்ததோடு அவர்களை தாக்குவதற்கு முற்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கெகிராவ நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் கடந்த 02 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இருவரும் கெக்கிராவ ஒழுகறந்த பகுதியை வசிப்பிடமாக கொண்ட 28 மற்றும் 34 வயதுடையவர்களாவர் என்பது தெரிய வந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, போதைப் பொருள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நீதிமன்ற பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டிருந்த பொலிஸாருக்கு தேவைப்பட்டிருந்த சந்தேக நபர்கள் சிலரை கைது செய்வதற்காக வேண்டி கடந்த 01 ஆம் திகதி ஒழுகறந்த பகுதிக்கு சென்றிருந்த கெக்கிராவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் குலதுங்க உள்ளிட்ட பொலிஸ் குழுவினரை கடமையை மேற்கொள்ளவிடாது இடையூறு விளைவித்து அவர்களை தாக்க முற்பட்டுள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலர் கைது செய்ய ப்படவுள்ள நிலையில் கெக்கிராவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## பாணந்துறை 'ஜீனியஸ் பார்க்' கல்லூரி வருடாந்த பரிசளிப்பும் கௌரவிப்பும்





(பேருவளை விசேட நிருபர்)

பாணந்துறை, ஹேனமுல்லை 'ஜீனியஸ் பார்க்' தனியார் கல்வி நிறுவனத்தின் மாணவர்களுக்கான வருடாந்த பரிசளிப்புவிழா 'செரண்டிப் பென்குவட்' மண்டபத்தில் அதன் பணிப்பாளர் ஹிமாயா இப்றாஹிம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பேருவளை கோல்டன் கேட் சர்வதேச பாடசாலையின் முகாமைத்துவ பணிப்பாளரும் பேருவளை நகர சபை எதிர்க்கட்சித் தலைவருமான ஹஸன் பாஸி பிரதம அதிதி யாக கலந்து கொண்டார். இந் நிகழ்வில் ஹொரேதுடுவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் எஸ்.எச். முத்தலிப் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் சிறப்பதிதியாக கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் உட்பட முக்கிய நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன. வெற்றிபெற்ற மாணவ சிறார்களுக்கு அதிதிகளினால் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

மேலும், 2021ஆம் வருட தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளை அண்மித்த மாணவர்களுக்கும் க.பொ.த. சாதாரண தர கணித, விஞ்ஞான பாடங்களில் தேர்ச்சி அடைந்த மாணவர்களுக்கும் கிண்ணங்கள், பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



வெலிகம இளைஞர் யுவதிகளுக்கு பன்மைத்துவ சிந்தனை என்ற தொனிப்பொருளில் பயிற்சிப் பாசறையொன்று வெலிகம பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் இஸ்லாமிய, பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதகுருமார்கள் கலந்து கொண்டுள்ளதை படங்களில் காணலாம். (படங்கள்: வெலிகம தினகரன் நிருபர்)

## க.பொ.த சா/த மாணவர்களுக்கு இலவச வகுப்புகள் ஏற்பாடு

ஏ.எஸ்.எம். ஜாவித்

கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் சங்கம் ஏற்பாடு செய்துள்ள க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான இலவச வகுப்புகள் எதிர்வரும் சனிக்கிழமை 11 ஆம் திகதி முதல் வத்தளை ஹுணுபிடிய ஸாஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடத்த சங்கத்தின் செயற்குழு உத்தேசித்துள்ளது.

தொடர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நடைபெற உள்ள மேற்படி வகுப்புகளில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படும்.

இதன் முதல் நாள் நிகழ்வில் மாணவர்களுக்கு விழிப்பூட்டும் முகமாக கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஸாபிர் முஹ்ஸின் "நேர முகாமைத்துவம் "என்ற தொனிப் பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். சங்கத்தின் தலைவர் ஜனாப் எஸ்.எச்.எம். நௌபர் தலைமையில் நடைபெறும் மேற்படி கூட்டத்தில் பலரும் கலந்து கொள்வர்.

## சமாதான நீதவான்கள் பேரவையின் புத்தளம் மாவட்ட ஒன்றுகூடல்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



இலங்கை சமாதான நீதவான்கள் பேரவையின் புத்தளம் மாவட்ட விஷேட ஒன்றுகூடல் கடந்த சனிக்கிழமை (04) புத்தளம் ICE TALK மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பேரவையின் தலைவர் எம்.எஸ்.எம்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இலங்கை சமாதான நீதவான்கள் பேரவையின் தேசிய பணிப்பாளர் பஹத் ஏ மஜீத் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், பேரவையின் புத்தளம் மாவட்ட பணிப்பாளர் எம்.எச்.எம்.சபீக் உட்பட அங்கத்தவர்களான சமாதான நீதிவான்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது, இலங்கை சமாதான நீதவான்கள் பேரவையின் எதிர்கால செயற்பாடுகள் பற்றியும், புத்தளம் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய பணிகள் குறித்தும் இந்த ஒன்றுகூடலில் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்தில் சமூக சேவை, அரசியல் மற்றும் ஊடகத்துறையில் பிரகாசிக்கும் மூன்று ஊடகவியலாளர்கள் உட்பட ஒன்பது பேர் தேசகீர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## நாச்சியாதீவில் புதிய பூங்கா திறந்து வைப்பு

(திறப்பனை தினகரன் நிருபர்)

அநுராதபுர மாவட்ட நாச்சியாதீவு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட நாச்சியாதீவு நீர் தேக்கம் அமைந்துள்ள பகுதி ஒன்றில் பூங்காவொன்று அமைக்கப்பட்டு அது அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் பொழுது போக்கும் ஓய்வு பூங்காவாக இது அமைந்துள்ளது. திறப்பனை பிரதேச சபை உறுப்பினர் அன்வர் சதாத் (பஸ்மி) முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட இப் பூங்கா நாச்சியாதீவு பிரதேச செயலாளரால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மரக்கன்று ஒன்றை நட்டி ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வில், பிரதேச சபை உறுப்பினர் அன்வர் சதாத் (பஸ்மி) அமைப்பாளர் ரஸ்கான் உட்பட பிரதேச செயலாளர்,கிராம உத்தியோகத்தர் மற்றும் உத்தியோகத்தர்கள் பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## தேசிய உப்பு லிமிட்டட்

### மேசை உப்பை பதனிடுவதற்கான விலைமனுக்களுக்கான அழைத்தல்

தேசிய உப்பு நிறுவனமானது அரசாங்கத்திற்கு உரிமையுள்ள கம்பனியொன்று என்பதுடன் கைத்தொழில்கள் அமைச்சின் ஆதிக்கவரம்பின் கீழுள்ளதாகும். இக்கம்பனியானது கறியுப்பை மன்னார் மற்றும் ஆனையிறவு உப்பளங்களில் உற்பத்தி செய்கின்றது. கம்பனியானது ஆர்வமுள்ள சேவை வழங்குனர்களிடமிருந்து மேசை உப்பின் பதனிடும் வழங்களை பெறுவதற்கு திட்டமிட்டுள்ளது. எனவே, ஆர்வமுள்ள பதனிடுவோரிடமிருந்து மேசை உப்பின் பதனிடுதலுக்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

விலைமனு ஆவணங்களை **nslhoc@gmail.com** என்ற மின்னஞ்சல் வழியாக பொது முகாமையாளருக்கு கோரிக்கைக் கடிதமொன்றை அனுப்புவதன் மூலம் அல்லது கீழேயுள்ள முகவரிக்கு நேரடியாக வருகை தருவதன் மூலமும் பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் தரவுத் தாளில் குறிப்பிட்டுள்ளவாறு விலைமனுவை சமர்ப்பிக்கும் வேளையில் மீளளிக்கப்படும் விலைமனுப்பிணையாக 25,000 ரூபா விலைமனுவுடன் இணைக்கப்படல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.06.22 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் நேரடியாகவும் ஒப்படைக்கப்படலாம் அல்லது கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'மேசை உப்பை பதனிடுவதற்கான விலைமனுக்கோரல்' என குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கோரல்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கோரல்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தின் பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.

எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் ஒன்று அல்லது அனைத்து விலைமனுக்கோரல்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை தேசிய உப்பு லிமிட்டட் கொண்டுள்ளது.

**தலைவர் (பெறுகைக் குழு),**
**தேசிய உப்பு லிமிட்டட்,**
**கைத்தொழில்கள் அமைச்சு,**
**இல.: 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05.**




### 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பின்வரும் கம்பனி 2022.05.31 அன்று கூட்டிணைக்கப் பட்டுள்ளதென பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பெயர்:
**தடுல ரியாலிட்டி என்ட் எக்கோ வென்ச்சர்ஸ் (பீவீடீ) எல்டீடீ**
இலக்கம்: PV 00258356
பதிவு முகவரி:
**60/5D, மாதின்னாகொட வீதி, ராஜகிரிய.**
**செயலாளர்**

### அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தின் உடுபத்தாவ தபால் பிரிவில் பிபிலா தெனியவில் வசிக்கும் வர்ணகுலசூரிய எலிசபெத் மியுரின்(கடவுச்சீட்டு இல N5081527) ஆகிய நான், மேற்படி உடுபத்தாவ தபால் எல்லையில் பிபிலாதெனியவில் வசிக்கும் தெமிலஸ் வர்ணகுலசூரிய (தே.அ.அ.இல.495620689V) என்பவருக்கு, வெலிபென்ன கறமுல்ல தபால் மீகஹபெலஸ்ஸவில் வசிக்கும் பகிரங்க நொத்தாரிசு திரு.டி.ஜே.எம்.ஈ.வி.ஜயமஹவினால் 2003 ஜனவரி 09ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல.9589 அற்றோணி தத்துவத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரத்தை இன்று முதல் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை குடியரசுக்கும் சகல மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்

**வர்ணகுலசூரிய எலிசபெத் மியுரின்**
**2022 ஜுன் 03**

## இலங்கைத் துறைமுக அதிகாரசபை

### காலி துறைமுக அபிவிருத்தித் திட்டத்திற்கு முதலீடு செய்வதற்கான முன்தகைமை ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

(IEOI No: SLPA/EOI/GPDP/2022-01)

### ஆர்வ வெளிப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கான காலத்தை நீடித்தல்

1. விண்ணப்பங்களைத் தயாரிக்க ஆர்வமுள்ள தரப்பினரின் கோரிக்கைக்கு இணங்க, இந்தப் பத்திரிகையில் 2022 பெப்ரவரி 09 மற்றும் 13ஆம் திகதி, 2022 ஏப்ரல் 3ஆம் திகதி மற்றும் 2022 மே 9ஆம் திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திலுள்ள நேர அட்டவணைகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

| | நிகழ்வு | முன்னர் நீடிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் | திருத்தம் செய்து நீடிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| a. | ஆர்வ வெளிப்பாடு ஆவணத்திற்கான அழைப்புகளை வழங்குதல் | 2022 பெப்ரவரி 9ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் 2022 ஜுன் 6ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை | 2022 பெப்ரவரி 9ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் 2022 ஜுன் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை | குறிப்பு - 1 |
| b. | ஆர்வ வெளிப்பாடு ஆவணத்திற்கு ஆர்வமுள்ள தரப்பினர் தெளிபடுத்துவதற்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி நாள் | 2022 மே 20 | 2022 ஜுன் 13 | |
| c. | ஆர்வ வெளிப்பாடு ஆவணங்களுக்கான அழைப்பிதழ்களுக்கு SLPA விளக்கங்களை வழங்குவதற்கான இறுதி நாள் | 2022 ஜுன் 01 | 2022 ஜுன் 20 | |
| d. | ஆர்வ வெளிப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் | 2022 ஜுன் 09ஆம் திகதி பி.ப. 2.00 மணி | 2022 ஜுன் 23ஆம் திகதி பி.ப. 2.00 மணி | குறிப்பு - 2 |
| e. | ஆர்வ வெளிப்பாடுகளைத் திறத்தல் | 2022 ஜுன் 09ஆம் திகதி பி.ப. 2.00 மணி | 2022 ஜுன் 23ஆம் திகதி பி.ப. 2.00 மணி | குறிப்பு - 2 |

2. ஆர்வத்தை வெளிப்படுத்தும் ஆவண அழைப்பிற்கான திருத்தங்கள் ஏற்கனவே ஆவணங்களைக் கொள்வனவு செய்த தரப்பினருக்கு ஓர் இணைப்பு வடிவத்தில் வழங்கப்படும்.
3. ஆர்வமுள்ள தரப்பினர் 2022 ஜுன் 20ஆம் திகதி வரையில் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் பின்வரும் குறிப்பு - 1 முகவரியில் இணைப்புகள் சகிதமான ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஐம்பதாயிரம் இல. ரூபாவைச் (50,000.00 இல. ரூபா) செலுத்துவதன் பேரில் பின்வரும் குறிப்பு - 1 முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் இணைப்புகள் சகிதமான ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான ஆவணங்களின் தொகுதியொன்றை ஆர்வமுள்ள தரப்பினர் கொள்வனவு செய்யலாம்.


**குறிப்பு - 1**
**தலைமை பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி),**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-1, இலங்கை.**
**தொலைபேசி:** +94 (0) 112483456 **தொலைநகல்** +94 (0) 112323055
**மின்னஞ்சல் முகவரி:** cepd@slpa.lk

**குறிப்பு - 2**
**தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு,**
**துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-1.**


5. ஆர்வ வெளிப்பாடுகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பது தொடர்பாக ஆர்வமுள்ள தரப்பினரால் செய்யப்படும் செலவு அல்லது செலவுகளுக்கு CANC அல்லது SLPA பொறுப்பாகாது.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேர்ச்சுவார்த்தைக் குழு.**

## சிறு விளம்பரம்






### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

CP AAQ-7035 Bajaj Threewheel, 2014, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 034967

NW BGR-1673 Bajaj Pulsar, 2018, Motor Cy cle கூ டிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 034965


Repeat Your ad For Better Offers


### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**எம்பயர் அல்பா (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: **PV 00239343**
கூட்டிணைக்கப்பட்ட திகதி: **05-12-2020**
பதிவு முகவரி:
**இல.37, 4/6, மவுன்ட் பிரிஸ் அப்பார்ட்மன்ட் டெம்பளர்ஸ் வீதி, கல்கிஸ்சை, இரத்மலானை**
**கிரெகரீஸ் பார்ட்னர்ஸ் சபை சார்பாக, கம்பனி செயலாளர்**
**"53/3, கிரெகரீஸ் வீதி, கொழும்பு - 07**

### பெயர் மாற்றம்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் இல 80A ஜெயந்தியாய புணாணையில் வசிக்கும் முகம்மது அலியார் ஹக்கீம் ஆகிய நான் அறியத்தருவதாவது எனது பெயர் முகம்மது அலியார் ஹக்கீம் ஆனால் எனது பிறப்பு பதிவில் ஹக்கீன் என்று உள்ளது எனது சகல ஆவணங்களிலும் ஹக்கீம் என்று உள்ளதால் எனது பிறப்புப் பதிவில் ஹக்கீம் என்று மாற்றம் செய்யவுள்ளேன் என்று இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் நாட்டு மக்களுக்கும் அறியத் தருகிறேன்.
**மு.அ.ஹக்கீம்**

### The Lamp Lanka இன் முகவரி மாற்றம் பற்றிய அறிவித்தல்

(NGO பதிவு இலக்கம் : FL-160710 திகதி 26.01.2017 1998 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் 1980 இன் 31 ஆம் இலக்க சட்டம்)

இலக்கம் 335/5, கொழும்பு வீதி, கெஹெல்வல, கிரிபத்கும்புரவில் இயங்கிய The Lamp Lanka கம்பனியானது, 2022.05.01 முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் அதன் உத்தியோகபூர்வ முகவரியை 3/11, New City 2, BATAKETTARA PILIYANDALA என மாற்றியுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

**தொ.பே : 0112603116/0723216007**


Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams


## தேசிய சேமிப்பு வங்கி

### விலைமனுக் கோரல்

### பெறுகை அறிவித்தல் இலக்கம் N.S.B/P.T/I.T.E./2022/14

கீழே காணப்படும் பெறுகைப் பண்டங்களை வழங்கல். விநியோகித்தல், நிறுவுதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரித்தல்களிற்காக, அங்கீகாரம் பெற்றுள்ள உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற தேசிய முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனு கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| Description of the procurement | 400 Nos Signature Pad and Photo Capture with Portable Document Scanners |
| Method of Procurement | National Competitive Bidding (NCB) |
| Applicable Non-refundable Tender Fee | Rs. 12,000/- |
| Value of Bid Bond to be submitted | Rs. 440,000/- |
| Last Date & Time of Issuing Bid Documents | 28.06.2022 at 3.00 p.m. |
| Date & Time of Closing of Tender | 29.06.2022 at 10.00 a.m. |

1. ஏதேனும் விலைமனுதாரரொருவர் சார்பாக முகவரொருவர் அல்லது உப முகவரொருவர் அல்லது நியமனஞ் செய்யப்பட்ட எவரேனும் நபரொருவர் இதற்காக விண்ணப்பிப்பதற்கு முன்னர். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகுமென்பதுடன், அவரின் பெயரில் ஒப்பந்தமானது, கண்டிப்பாகப் பதிவு செய்யப்படல் வேண்டும்.
2. 2022.06.08 முதல் 2022.06.28 வரை வார வேலை நாட்களில் மு.ப. 08.30 முதல் பி.ப. 03.00 வரை, கொழும்பு 03, காலி வீதி, இல. 255, இல் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவு முகாமையாளரிடம், எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களுடன், விலைமனுதிறக்கப்படும் தினத்திலிருந்து 120 நாட்களுக்குச் செல்லுபடியாகும், வணிக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி அங்கீகரிக்கும் வங்கி வரைவொன்று/ விலைமனுப் பிணையமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. குறித்த தினத்தன்று மு.ப. 10.00 இற்கு விலைமனுக்ள் மூடப்பட்டு உடனடியாக அவை திறக்கப்படுவதுடன், மு.ப. 10.00 இன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. அனைத்து விலைமனுக்களையும் அல்லது விலைமனு ஒன்றை அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது காரணமெதுவும் முன்வைக்கப்படாமல் நிராகரிக்கும் உரிமை தேசிய சேமிப்பு வங்கிக்கு உரித்தாகும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை, தேசிய சேமிப்பு வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் (வழங்கல்) இடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**தாபனப் பெறுகைக் குழு (பிரதான)**
**தேசிய சேமிப்பு வங்கி, இல. 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**

## இலங்கை அரசாங்கம்

நீர் வழங்கல் அமைச்சு

### நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்

### கடன் இல. Cr. 5685 lk மற்றும் - 9255 - lk

### விலைமனு அறிவித்தல்

1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவரகத்திடமிருந்து நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் ஒரு பகுதியை பின்வரும் ஒப்பந்தங்களுக்கு கொடுப்பனவாகச் செய்யவுள்ளது.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப் படும் கேள்விப் பிணை முறி | தகைமை தேவைப்பாடுகள் | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| செயற்றிட்டப் பெறுகைக் குழு (மேல்நிலை) | | | | | |
| **வேலைக் கேள்விகள்** | | | | | |
| பதுளை மாவட்டத்தின் தியத்தலாவ கி.நீ.வ.தி.இன் மிகுதி சிவில் வேலைகளின் நிர்மாணம் MWS/WaSSIP/Badulla/ NCB/Diyathalawa-civil workes/2020/05 | ரூபா 20,000/- | ரூபா 2000,000/- | C3 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புத் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987 இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு, நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம். இல. 230, ஈ.டபிள்யு. பெரேரா மாவத்தை, ஜுபிலி தூண், நுகேகொட. தொலைபேசி/தொலைநகல்: 011-2890943/ 011-2890941 | 2022 ஜுலை 22 ஆம் திகதி 13.00 மணிக்கு |
| முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குதுடுவைக்கு நட்டுக்கோனி கொக்குளாய் நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணம் MWS/WaSSIP/Mullaitivu/ NCB/maritime pattulNEW/ Kokulaiworkes/2021/03 | ரூபா 35,000/- | ரூபா 4000,000/- | C2 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புத் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987 இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு, நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம். இல. 230, ஈ.டபிள்யு. பெரேரா மாவத்தை, ஜுபிலி தூண், நுகேகொட. தொலைபேசி/தொலைநகல்: 011-2890943/ 011-2890941 | 2022 ஜுலை 20ஆம் திகதி 10.00 மணிக்கு |
| செயற்றிட்டப் பெறுகைக் குழு (கீழ்நிலை) | | | | | |
| **வாகனங்களை வாடகைக்கு பெறல்** | | | | | |
| நீர்வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்படுத்தும் திட்டத்திற்கு ஓர் கெப் ஐ வாடகைக்கு பெறல் ஒப்பந்த இல: MWS/WaSSIP/PDO/ NCB/IOC/Hiring of a cabworkes/2022/24 | ரூபா 2,000/- | ரூபா 51,500/- | வாகன உரிமையாளர் அல்லது வாகனங்களை வாடகைக்கு விடும் கம்பனி | செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு, நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம். இல. 230, ஈ.டபிள்யு. பெரேரா மாவத்தை, ஜுபிலி தூண், நுகேகொட. தொலைபேசி/தொலைநகல்: 011-2890943/ 011-2890941 | 2022 ஜுன் 23 ஆம் திகதி 12.30 மணிக்கு |

3. செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பதாரரின் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.
4. சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்பாட்டு செயற்றிட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படுமிடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. கேள்விகளை ஒன்றில் நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அல்லது தூதஞ்சல் மூலம் அனுப்பலாம்.
7. சகல கேள்விகளும் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்.**

***நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்.***
***சமூக நீர் திட்டங்களின் சிக்கல்களுக்கு 1914 எனும் எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.***

## பெருந்தோட்டங்கள் அமைச்சு

### இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்

### பச்சை இலை விற்பனைக்கான கேள்வி - ஜுலை/ஓகஸ்ட் 2022

**கேள்வி இல.: SLSPC/PL/Green Leaf/T-117/2022**

கண்டி/மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள பின்வரும் பெருந்தோட்டங்களிலிருந்து ஜுலை மற்றும் ஓகஸ்ட் ஆகிய இரு மாத காலப்பகுதிக்கு பச்சை இலையை விற்பதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பெருந்தோட்டம் | ஜுலைக்கான மதிப்பீடு செய்யப்பட்டுள்ள விளைச்சல் | ஓகஸ்ட் மாதத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்டுள்ள விளைச்சல் | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் | மீளளிக் கப்படும் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| Allagolla | 63472 | 59620 | 5000/= | 100,000/= |
| Galphille | 95500 | 91000 | 5000/= | 100,000/= |
| Goomera | 60073 | 60073 | 5000/= | 100,000/= |
| Hagalla | 46800 | 42600 | 5000/= | 100,000/= |
| Harepeak | 36195 | 37190 | 5000/= | 100,000/= |
| Hunnasgiriya | 69150 | 38160 | 5000/= | 100,000/= |
| Waithalawa | 21088 | 21334 | 5000/= | 100,000/= |
| Woodside | 6000 | 6000 | 5000/= | 100,000/= |
| Kallebokke | 174240 | 165082 | 5000/= | 100,000/= |

2022 ஜுன் 24ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் ஆவணக் கட்டணமாக 5000 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-12, மீரானியா தெரு, 21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபன தலைமையகத்திலிருந்து அல்லது பன்வில, Galphille பெருந்தோட்டதிலுள்ள பிராந்திய அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல்களை சமர்ப்பிப்பதற்கான விலைமனுப் படிவங்கள் அடங்கலாக கேள்வி ஆவணங்களுடனான நிபந்தனைகள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு பெருந்தோட்டத்திற்கும் விலைமனுப்பிணை வைப்புத் தொகையான 100,000/= ரூபாவானது தனித்தனியாக கொழும்பு-01, மக்கள் வங்கியின் 1 ஆம் நகரக் கிளையில் பேணப்படும் 046 1002 40000 933 என்ற எமது வங்கி கணக்கிலக்கத்திற்கு வைப்பு வைக்கப்படலாம் அல்லது ரொக்கப் பணத்தில் இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபன தலைமையக காசாளரிடம் செலுத்தப்பட்டு செலுத்தப்பட்ட தொகைக்கான வைப்புத் துண்டு/ ரொக்கப் பண பற்றுச்சீட்டானது கேள்வி ஆவணத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.


அனைத்து கேள்வி ஆவணங்களும் **2022 ஜுன் 27ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் 'தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம், இல. 21, மீரானியா தெரு, கொழும்பு-12' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபன கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விகள் 2022.06.27ஆம் திகதியன்று மூடும் நேரம் முடிவடைந்ததும் விரைவாகவே கேள்வி திறத்தல் குழுவின் முன்னிலையில் திறக்கப்படுவதுடன் பெறுகையாளர் அல்லது அவரது பிரதிநிதியானவர் திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். தாமதமான விலைமனுக்கோரல்கள் தொடர்பான எந்தவொரு பொறுப்பையும் கூட்டுத்தாபனமானது ஏற்க மாட்டாது என்பதுடன் கேள்விகளை இரத்துச் செய்வதற்கான உரிமையை பெறுகைக் குழுத் தலைவர் கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, மீரானியா தெரு,**
**கொழும்பு-12.**

04.06.2022.


BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

# நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | பூண்டுலோயா நீர் வழங்கல் திட்டம் - பூண்டுலோயா நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் புதுப்பித்தல் வேலைகள்<br>ஒப்பந்த இல: RSC-C/CE/CIVIL/REH/ PUNDALUOYA/2022/47 | 6,000/- + VAT ** | ரூபா 75,000/- | நீர் வழங்கல் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C6 மற்றும் C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 5.63 மில்லியன் | பிஓநி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 22/06/2022 பி.ப. 2.00 |
| 02 | ஹந்தான நீர் வழங்கல் திட்டம் - ஹந்தான விடுமுறை பங்களாவிற்கு தடுப்புச் சுவரை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: RSC-C/CS/CIVIL/ REH/HANTHANA/2022/120 | 6,000/- + VAT ** | ரூபா 51,500/- | கட்டிட நிர்மாணத் துறையில் C6 மற்றும் C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 5.15 மில்லியன் | பிஓநி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-06-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கெட்டம்பே (மத்திய தெற்கு) முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். | 22/06/2022 பி.ப. 2.00 |
| 03 | தெனியாய நீர் வழங்கல் திட்டத்திற்கு விரைவு மணல் வடிகட்டி, பம்பி நிலையம் மற்றும் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல:<br>**RSC(S)/P&C/C/RSF/DENIYAYA/ RH/2021/86R** | 4,000/- + VAT | ரூபா 44,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C8 மற்றும் C7 தரத்தில் CIDA பதிவு | 4.4 மில்லியன் | பிஓநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 22/06/2022 பி.ப. 2.00 |
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 04 | 1260 லீற்றர்கள் SAE 15W – 40 எண்ணெய் வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல **: O&M(POL)/NC/DGM/OIL/ GEN/POL/2022/085** | 4,000/- + VAT | ரூபா 52,920/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பிஓநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அனுராதபுரம்.<br>Tele : 025-2235993/ 025-2222296<br>Fax: 025-2225609 | 15/06/2022 பி.ப. 2.00 |
| 05 | பொலன்னறுவை பிராந்தியத்திலுள்ள 15 மின் பிறப்பாக்கிகளுக்கான உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல **:O&M(POL)/NC/DGM/JEN-SER/ FILTERS/ POL/2022/086.** | 4,000/- + VAT | ரூபா 65,000/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பிஓநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அனுராதபுரம்.<br>Tele : 025-2235993/ 025-2222296<br>Fax: 025-2225609 | 15/06/2022 பி.ப. 2.00 |
| 06 | மாலிம்பட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு குளோரின் கேஸ் நடுநிலைப்படுத்தல் முறைமை மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: **RSC(S)/P&C/S/NEUTRALIZATION/ MALIMBADA/ RH/2022-52** | 12,500/-+ VAT ** | ரூபா 108,000/- | குளோரின் கேஸ் நடுநிலைப்படுத்தல் முறைமை உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 10.837 மில்லியன் | பிஓநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 29/06/2022 பி.ப. 2.00 |
| | 2022-04-06ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. தென் மேற்கு இலங்கை நகரங்களுக்கு சாக்கடை செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு - துப்புரவேற்பாடு மற்றும் நீரியல் பூர்வாங்க வேலைகளுக்கு உபகரணங்கள் மற்றும் கருவிகளை வழங்குதல் (SHIFT -1) ஒப்பந்த இல: **NWSDB/AFD/SHIFT-1/GOODS/ PACKAGE-2/2020-02 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-06-29ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. | | | | | | |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| 07 | மிட்சுபிஷி ரோசா பஸ் திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல: **DGM/M&E/VEHICLE REPAIR/2022/01** | 2,000/- + VAT | ரூபா 50,000/- | ஆவணத்தின் பிரகாரம் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 29/06/2022 மு.ப. 10.00 |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 08 | பொலன்னறுவை முகாமையாளர் அலுவலகக் கட்டிடத்தின் சுத்திகரிப்பிற்கான சேவை ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல: **O&M(POL)/NC/DGM/JAN-SER/ POL/2022/069** | 2,000/- + VAT | ரூபா 17,370/- | ஜெனிடோரியல் சேவைக்காக பதிவுசெய்யப்பட்டவர்கள் | - | பிஓநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele : 025-2235993/ 025-2222296<br>Fax: 025-2225609 | 15/06/2022 பி.ப. 2.00 |
| 09 | 2022/2023ஆம் வருடத்திற்கு பொலன்னறுவை பிராந்தியத்திலுள்ள தவணை சேவை நிலையங்களுக்கான ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல: **O&M(P)/NC/DGM/VEH-SER/POL REGION/2022/064** | 4,000/- + VAT | ரூபா 50,820/- | வாகன சேவை வழங்குநர்கள் | | பிஓநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele : 025-2235993/<br>025-2222296<br>Fax: 025-2225609 | 15/06/2022 பி.ப. 2.00 |
| 10 | வடக்கு மேல் - பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு தேர்ச்சியற்ற தொழிலாளர்களை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(NW)/DEV/SER/O&M(RSC)/RSC-OFF/2022/37** | 6,000/- + VAT ** | ரூபா 58,700/- | தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குவதில் 2 வருட அனுபவத்தைக் கொண்ட பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 5.87 மில்லியன் | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2221161 / 037-2223158<br>Fax : 037-2230086 | 29/06/2022 பி.ப. 2.00 |
| 11 | மொரட்டுவ அங்குலான புகையிரத நிலைய வீதியிலுள்ள (மேற்கு தெற்கு) பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **W-S/P&C/J (01)/DGM/O&M/ 2022/26** | 4,000/- + VAT | ரூபா 32,500/- | கேள்விகளைச் சமர்ப்பிக்கும் வேளையில் ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்கும் துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் அனுபவத்தைக் கொண்ட இலங்கையில் வியாபாரப் பதிவு ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம். | 3.25 மில்லியன் | பிஓநி (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946 / 0112637947<br>கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-06-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பிஓநி **(W-S)** அலுவலகத்தில் இடம்பெறும். | 23/06/2022 மு.ப. 10.00 |
| 12 | மாத்தளை நீர் வழங்கல் திட்டத்தில் துரிதப்படுத்தப்பட்ட புதிய இணைப்பை வழங்குதல்<br>ஒப்பந்த இல: ප්‍රාසේම-ම/මැ/සේවා/ක්‍රිතත/මාතලේ/2021/339 | 4,000/- + VAT | ரூபா 24,000/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பிஓநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-06-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுகஸ்தோட்ட (மத்திய வடக்கு) முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். | 22/06/2022 பி.ப. 2.00 |
| 13 | அம்பன்கங்க நீர் வழங்கல் திட்டத்தில் துரிதப்படுத்தப்பட்ட புதிய இணைப்பை வழங்குதல்<br>ஒப்பந்த இல: ප්‍රාසේම-ම/මැ/සේවා/ක්‍රිතත/අඹන්ගඟ/2021/297 | 12,500/- + VAT ** | ரூபா 140,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு<br>. | - | பிஓநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-06-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுகஸ்தோட்ட (மத்திய வடக்கு) முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். | 22/06/2022 பி.ப. 2.00 |
| 14 | ஹாரிஸ்பத்துவ நீர் வழங்கல் திட்டம் மற்றும் மத்திய தெற்கு முகாமையாளர் அலுவலக இடப்பரப்புகளில் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பை வழங்குவதற்கான சேவை ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல:<br>ප්‍රාසේම-ම/මැ/සේවා/ක්‍රිතත/මධ්‍යම උතුර, හාරිස්පත්තුව/2022/50 | 6,000/- + VAT ** | ரூபா 78,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | - | பிஓநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-06-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுகஸ்தோட்ட (மத்திய வடக்கு) முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். | 22/06/2022 பி.ப. 2.00 |
| | **வாகனம் வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 15 | தெலவல - மத்திய ஆய்வுகூடத்திற்கு Dual AC வேனை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **T&C/CL/Veh-Hire/2022/01** | 2,000/- + VAT | ரூபா 26,506/80 | ஆவணத்தின் பிரகாரம் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 29/06/2022 மு.ப. 10.00 |
| 16 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடமத்திய) அலுவலகம் - துறைசார் திட்டமிடல் பிரிவிற்கு வாகனத்தை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC/NC/DGM/HV/SP/2022/087** | 4,000/- + VAT | ரூபா 32,550/- | வாகன உரிமையாளர்கள் அல்லது வாகன சேவை வழங்குநர்கள் | | பிஓநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele : 025-2235993/ 025-2222296<br>Fax: 025-2225609 | 15/06/2022 பி.ப. 2.00 |
| 17 | குருநாகல் பிராந்தியத்திலுள்ள ஹெட்டிபொல நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(NW)/M(O&M)-KURU/HV/ O&M/ HETTI/2022/39** | 2,000/- + VAT | ரூபா 10,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2221161 /037-2223158<br>Fax : 037-2230086 | 29/06/2022 பி.ப. 2.00 |
| 18 | ஒரு வருட காலத்திற்கு இரத்தினபுரி நீர் வழங்கல் திட்டத்திற்கு க்ரூ கெப்பை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(SAB)/RM (RAT)/SER/ O&M/RAT/2022/17** | 4,000/- + VAT | ரூபா 10,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓநி (சப்ரகமுவ), தேநீவவச,<br>புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 22/06/2022 பி.ப. 2.00 |
| 19 | பிரதேச பொறியியலாளர் (பாணந்துறை - ஹொரண) அலுவலகத்திற்கு வேன் ஒன்றை (Dual A/C) வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **W-S/P&C/H(12)/DGM/ O&M/2021/95R-01** | 2,000/- + VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓநி (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946 / 0112637947 | 23/06/2022 மு.ப. 10.00 |
| 20 | முகாமையாளர் (களுத்துறை) அலுவலகத்திற்கு டிப்பர் டிரக்கொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **W-S/P&C/H(03)/KAL/ O&M/2022/35** | 2,000/- + VAT | ரூபா 5,000/- | இயையுடைய வாகன உரிமையாளர்கள் | | பிஓநி (மேற்று-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946 / 0112637947 | 23/06/2022 மு.ப. 10.00 |
| 21 | மாத்தறை/மிரிஸ்ஸ நீர் வழங்கல் திட்டத்திற்கு க்ரூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(S)/P&C/HIRING/CREW CAB/MATARA-MIRISSA/O&M/2021-145R** | 2,000/- + VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 22/06/2022 பி.ப. 2.00 |
| 22 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திலுள்ள (தெற்கு) வர்த்தகப் பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(S)/HIRING/VAN/ COMMERCIAL/O&M/2022-66** | 2,000/- + VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஓநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 22/06/2022 பி.ப. 2.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# இலங்கை முதலீட்டு சபை

## பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணும் பெறுகைக்காக பெறுகை கோரல் அறிவித்தல் 2022.06.04 சனிக்கிழமை மற்றும் 2022.06.08 புதன்கிழமை நாட்களில் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

**DESIGN, SUPPLY, INSTALLATON AND COMMISSIONING OF A FLOATING TYPE INTAKE SYSTEM FOR WATER SUPPLY SCHEME AT HORANA EXPORT PROCESSING ZONE (HEPZ)**

**CONTRACT NO BOI/TS/HEPZ/2022/03/02.040**

மேற்படி பெறுகைக்கான குறித்த கேள்விப் பத்திரங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பெறுகை சமர்ப்பிப்பதற்காக ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு 2022.06.04ம் திகதி சனிக்கிழமை மற்றும் 2022.06.08 புதன் நாட்களில் (Daily News) பத்திரிகையின் குறித்த விளம்பரத்தின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

# வெலிமடை பிரதேச சபை

## பெறுகை அறிவித்தல்

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அனுமதியின் கீழ் வெலிமடை நகர மத்தியில் அமைந்துள்ள கொடிக்கம்ப மேடை கட்டிடத்தின 02 (இரண்டாம்) மாடியை நீண்டகால குத்தகையின் கீழ் வழங்குதல்.

1.1 கீழே 1.6 அட்டவணையில் குறிப்பிடப்படும் இடத்தை நீண்டகால குத்தகையில் வழங்குவதற்காக கேள்வி மாதிரிப் பத்திரங்கள் 2022.06.08 மு.ப. 9.00 முதல் 2022.06.28 மு.ப. 10.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் விநியோகிக்கப்படும்.
1.2 விநியோகிக்கப்படும் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் (விலைமனுக்கள்) 2022.06.29 மு.ப. 9.00 வரை ஏற்கப்படும்.
1.3 கேள்வி மாதிரிப் பத்திரங்களை இவ் அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம்.
1.4 கேள்வி நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை சபைச் செயலாளரிடம் விசாரித்து அறிந்து கொள்ளலாம். (தொ.பே. இல. 057 2245973)
1.5 குறித்த கேள்விப் பத்திரங்கள் 2022.06.29ம் திகதி மு.ப. 9.30 இற்கு திறக்கப்படும் கேள்விச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும்.
1.6 அட்டவணை

**பெறுகை விலைமனுக்கள்**

| தொடர் இல. | இடம் | குறைந்தபட்ச கேள்வி (ரூ) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு (ரூ) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூ) | செலுத்த வேண்டிய முழுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கொடிக்கம்ப மேடை கட்டிடத்தின் 02 (இரண்டாம்) மாடி | 5,000,000.00 | 500,000.00 | 5,000.00 | 5,505,000.00 |

**2022.06.06**
**வெலிமடை பிரதேச சபை அலுவலகத்தில்**

**எஸ்.ஏ.ஆர். பந்துசேன**
**தலைவர்**
**வெலிமடை பிரதேச சபை**

# மத்திய சுற்றாடல் அதிகார சபை

## இறுதி தீர்மான பொது அறிவித்தல்

### தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்

### உத்தேசிக்கப்பட்ட ஹெலம்ப வாவி முதலீட்டுச் செயற்திட்ட அதிகார பிரதேசம் மஹாவலி ‘எல்’ வலயம்

### ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப) அறிக்கை

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 22 நவம்பர் 2000ம் திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) ஒழுங்குவிதி 9(i) இற்கமைவாக இல. 500, டி.பி. ஜயா மாவத்தை, கொழும்பு-10 என்னும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகார சபைக்கு மேற்கூறப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைவாக வழங்க தீர்மானித்துள்ளது என்பதனை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகிறேன். 2000ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமாக மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் உள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை**
**‘பரிசரபியச’,**
**இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வணிக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள். கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சு

(மேல் மாகாணம்)

**ஹொரண நிறைவேற்றுப் பொறியியலாளர் பணிமனையினால் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள போருவதண்ட வகவத்தை மற்றும் சொய்ஸாவத்தை வீதி மற்றும் அவிசாவளை நிறைவேற்றுப் பொறியியலாளர் பணிமனையினால் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஹோமாகம கபடாவத்தை வீதிக்காக (Redy Mix Concrete) முன்கலவை கொன்கிறீட் (G25/20/120mmslump) வழங்கல்.**

**விலைமனு இலக்கம்: PRDA/WP/PRO/2022/19**

இவ் அதிகார சபையின் மேற்படி செயற்றிட்டங்களிற்காக கொங்கிறீட் முன்கலவை (G25) கொள்வனவிற்காக வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக் கோரப்படுகின்றது.

| உருப்படி | எண்ணிக்கை (கியுபிக் மீற்றர்) | படிவக் கட்டணம் (பதிவு செய்யப் பெற்றுள்ள வழங்குநர்கள் தவிர்ந்த) | பிணையம் காசாக ரூபா | வங்கி வரைவு ரூபா |
|---|---|---|---|---|
| 1. ஹோமாகம கபடாவத்தை | 48 | 2000.00 + பெசேவ | 66,600.00 | 133,200.00 |
| 2. போருவதண்ட வகவத்தை வீதி | 245 | | | |
| 3. செய்ஸாவத்தை வீதி | 47 | | | |
| மேற்படி படிவக் கட்டணங்களைச் செலுத்தியவர்களுக்கு 2022.06.08 முதல் 2022.06.14 வரை மு.ப. 09.00 முதல் பி.ப. 02.30 வரையும், 2022.06.15 அன்று மு.ப. 09.00 முதல் நண்பகல் 12.00 வரையும் இதற்கான விலைமனுப்படிவங்கள் வழங்கப்படும். | | | | |

02. இதற்கான விலைமனுப் பிணையத்தை,ரொக்கப்பணமாக அல்லது வங்கி/ காப்புறுதிக்காப்பீடு ஒன்றின் மூலம் பெறுகை நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்படி பெறுமானங்களில் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுத் தொகையானது 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் பட்சத்தில் விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 003ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பந்தியின் கீழ், கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்படும், பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினம் 2022.06.15 அன்று பி.ப. 02.30 என்பதுடன், விலைமனுத்திறத்தல் அதேவேளையில் இவ்வலுவலகத்தில் நடைபெறும்.
05. அவ்வேளையில் வழங்குநர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு, கொழும்பு-12.**
**தொ.பே. 011-5676903**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)



மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகார இராஜாங்க அமைச்சு

## உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் -
## செயற்றிட்ட அடையாளம்: P 163305
## கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம்

1. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் (LDSP) செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. மட்டக்களப்பு, வெல்லாவெளி, போரதீவுபற்று பிரதேச சபையின் சார்பில் உள்ளூராட்சி அதிகாரசபையின் பெறுகைக் குழு தலைவர் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவற்றிற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியிலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் PVC குழாய்களுக்கான வழங்கல்கள் மற்றும் விநியோகத்திற்கு இலங்கையில் பரந்தளவில் வழங்குபவராகவிருத்தல் வேண்டும். விலைமனுதாரர் இந்த வியாபாரத்தில் வியாபாரப் பதிவுடன் கடந்த 10 வருட காலம் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
5. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணை (பிரிவு 5) இல் வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மட்டக்களப்பு, வெல்லாவெளி, போரதீவுபற்று பிரதேச சபையின் தலைவர் / செயலாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி இல. 065-2056115 தொலைநகல்: 065-2056133) என்பதுடன் விலைமனு ஆவணங்களை இதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மட்டக்களப்பு, வெல்லாவெளி, போரதீவுபற்று பிரதேச சபையின் தலைவர் / செயலாளருக்கு மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் 2022-06-09ஆம் திகதி முதல் 2022-06-23ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ள வேண்டும்.
8. விலைமனுக்களை தலைவர், போரதீவுபற்று பிரதேச சபை, வெல்லாவெளி எனும் முகவரிக்கு 2022-06-24ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்பதாக ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
9. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் இறுதி நாளின் பின் 2022-09-09ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
10. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைமனுக்களுடன் விலைமனுப் பிணை இணைக்கபட்டிருத்தல் வேண்டும்.
11. விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் 2022-06-17ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு போரதீவுபற்று பிரதேச சபை கட்டிடத்தில் (வெல்லாவெளி) இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்த கூட்டத்தில் பங்கேற்கலாம்.
12. ஒப்பந்தத்தை வழங்குதல் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
13. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன் எந்தநேரத்திலும் இந்தப் பெறுகையை மீளப்பெற்றுக்கொள்வதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை தொழில்தருநர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

| வேலை விபரங்கள் மற்றும் ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தக் காலம் / நாட்காட்டி நாட்கள் | தேவையான விலைமனுப் பிணை முறி | |
|---|---|---|---|
| | | விலைமனுப் பிணை முறி தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் |
| போரதீவுபற்றிலுள்ள களுமுதன்வெளி கிராம சேவையாளர் பிரிவிலுள்ள நீர் வழங்கல் குழாய் வழிகளை விஸ்தரித்தல் - PVC குழாய்கள் மற்றும் பொறுத்தல்களின் வழங்கல் மற்றும் விநியோகம் விலைக்கோரல் இல. LDSP-PT-1s/EP/BT/PPPS/2022-01 | 60 நாட்கள் | 60,000.00 | 2022-10-07 வரை |

**தலைவர்,**
**உள்ளூராட்சி பெறுகைக் குழு,**
**போரதீவுபற்று பிரதேச சபை, வெல்லாவெளி.**
**2022-06-09**

CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## கமத்தொழில் அமைச்சு

# தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

## காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

### செயற்றிட்ட இல.: P163742

**(புத்தளம் (25) திருகோணமலை (10), முல்லைத்தீவு (28) கிளிநொச்சி (24) ஹம்பாந்தோட்டை (14) மற்றும் பொலன்னறுவை (24) ஆகிய ஆறு மாவட்டங்களில் கிராமிய நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்பு மற்றும் அல்லது மீளமைத்தலுக்கான அளவை மற்றும் மட்டப்படுத்தல் வேலைகள்**

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக கடனைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அளவை மற்றும் மட்டப்படுத்தல் வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | வேலையின் விபரம் | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (இல. ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) |
|---|---|---|---|---|
| LK-MOA-279742-CW-RFB/PMU/ Surv(32) /2022/004 | வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் கிராமிய நீர்ப்பாசன திட்டங்களின் புனரமைத்தல் மற்றும் அல்லது மீளமைத்தலுக்கான அளவை மற்றும் மட்டப்படுத்தல் வேலைகள் | 160,000.00 | 2022 நவம்பர் 24 | 3,800.00 |
| LK-MOA-279727-CW-RFB/PMU/Surv(57) /2022/007 | கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் கிராமிய நிர்ப்பாசன திட்டங்களின் புனரமைத்தல் மற்றும் அல்லது மீளமைத்தலுக்கான அளவை மற்றும் மட்டப்படுத்தல் வேலைகள் | 200,000.00 | 2022 நவம்பர் 24 | 3,500.00 |
| LK-MOA-279782-CW-RFB/PMU/ Surv(58) /2022/008 | வட மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராமிய நிர்ப்பாசன திட்டங்களின் புனரமைத்தல் மற்றும் அல்லது மீளமைத்தலுக்கான அளவை மற்றும் மட்டப்படுத்தல் வேலைகள் | 520,000.00 | 2022 நவம்பர் 24 | 8,500.00 |
| LK-MOA-279743-CW-RFB/PMU/ Surv(108)/2022/013 | வட மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமிய நிர்ப்பாசன திட்டங்களின் புனரமைத்தல் மற்றும் அல்லது மீளமைத்தலுக்கான அளவை மற்றும் மட்டப்படுத்தல் வேலைகள் | 360,000.00 | 2022 நவம்பர் 24 | 6,000.00 |
| LK-MOA-279747-CW-RFB/PMU/ Surv(109)/2022/014 | தென் மாகாணத்தில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிராமிய நிர்ப்பாசன திட்டங்களின் புனரமைத்தல் மற்றும் அல்லது மீளமைத்தலுக்கான அளவை மற்றும் மட்டப்படுத்தல் வேலைகள் | 140,000.00 | 2022 நவம்பர் 24 | 3,500.00 |
| LK-MOA-279744-CW-RFB/PMU/ Surv(137)/2022/017 | வட மத்திய மாகாணத்தின் பொலன்னறுவை மாவட்டத்தில் கிராமிய நிர்ப்பாசன திட்டங்களின் புனரமைத்தல் மற்றும் அல்லது மீளமைத்தலுக்கான அளவை மற்றும் மட்டப்படுத்தல் வேலைகள் | 240,000.00 | 2022 நவம்பர் 24 | 4,000.00 |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை ராஜகிரிய, மாதின்னாகொட, MDH ஜயவர்தன மாவத்த, இல. 61/1 காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் செயற்றிட்ட பெறுகை நிபுணர் இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112053252, தொலைநகல்: 0112053252) மற்றும் அதே இடத்தில் 2022 ஜூன் 09 முதல் 2022 ஜூன் 30ஆம் திகதி மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையான வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான விலைமனுதாரர் விலைமனுக்கள் செல்லுபடியாகும் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகளைக் கோரலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்கள் நிதியியல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையரைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
6. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையைப் பார்க்கவும்) 2022 ஜூன் 09ஆம் திகதி முதல் 2022 ஜூன் 30ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 4ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்றும் மற்றும் வேலைத் தள விஜயமும் 2022 ஜூன் 20ஆம் திகதி மேற்படி 06ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தை தங்கள் சொந்த செலவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
9. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு அதில் ‘‘மூலப் பிரதி’’ மற்றும் ‘‘நகல் பிரதி’’ எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பன குறிக்கப்படுதல் வேண்டும்.
11. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 ஜூன் 30ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திட்ட பெறுகைக் குழு, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் ராஜகிரிய மாதின்னாகொட, MDH ஜயவர்தன மாவத்தை, இல. 61/1 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
12. கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் 2022 ஜூன் 30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திட்ட பெறுகைக் குழு,**
**MDH ஜயவர்தன மாவத்தை, மாதின்னாகொட,**
**ராஜகிரிய**
**2022.06.08**

## சுகாதார அமைச்சு

# தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரும் முறைமையின் பிரகாரம் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களிற்கு சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கல் – 2022/2023

## விலைமனு அறிவித்தல்

2022/2023 ஆண்டுகளில் சுகாதார அமைச்சின் கீழுள்ள, பின்வரும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக, பதிவு செய்யப்பெற்றுள்ள நிறுவனங்களிடமிருந்து, சுகாதார அமைச்சின் C2 அமைச்சுப் பெறுகைக் குழுத்தலைவரினால் விலைமனுக்கோரப்படுகின்றது.

1. **இவ் ஒப்பந்தத்திற்காக பின்வரும் அடிப்படைத்தகைமைகள் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.**

I. இலங்கை வியாபாரப் பெயர் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் கீழ், அல்லது 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், சுத்திகரிப்பு நிறுவனமொன்றாக, பத்திரிகை அறிவித்தல் பிரசுரமான தினத்திற்கு குறைந்தபட்சம் ஒவருடகாலத்திற்கு முன்னர் பதிவு செய்யப்பெற்றுள்ள நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டும்.

II. சுத்திகரிப்புச் சேவை வழங்கல் தொடர்பாக அரச/ அரை அரச நிறுவனமொன்றில் அல்லது தனியார் வைத்தியசாலையொன்றில், குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன், குறித்த நிறுவனத்திற்கு சேவை வழங்கல் கடிதம் மற்றும் அந்நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதங்கள் மற்றும் ஒப்பந்தங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

III. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பிரிவின் பிரகாரம், பதிவுச்சான்றிதழ் (குறித்தவைத்தியசாலைகள்/ நிறுவனங்களிற்கான தனித்தனியான பதிவுச்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)

IV. பின்வரும் ஒவ்வொரு வைத்தியசாலை/ நிறுவனங்களிற்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானத்திற்கு நிபந்தனைகளற்ற வங்கிமேலதிகப் பற்று வசதிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய, ஒப்பந்தக்காரரின் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படும் வங்கியினால் வழங்கப்பட்ட கடிதம் (மூலப் பிரதி) (ஒப்பந்தக்காரரினால் வைத்தியசாலைகள்/ நிறுவனங்கள் பலவற்றிக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதாயின் அவ்வைத்தியசாலைகள்/ நிறுவனங்களின் பெறுமானங்களிற்கான மொத்தத் தொகைக்கு நிகரான அல்லது கூடிய பெறுமானத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்றாக இருத்தல் வேண்டும்.) விலைமனுத்திறக்கப்படும் தினத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்றாக இருத்தல் வேண்டும்.

V. வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ நிலையங்களிற்காகப் பின்வரும் பெறுமானங்களிற்கு 06 மாதங்களிற்குள். பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பொது 170 படிவத்தில் பெறுமதிசார் சான்றிதழ் (மூலப் பிரதி)/ ஒப்பந்தக்காரரினால் வைத்தியசாலைகள்/ நிறுவனங்கள் பலவற்றிற்கு விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதானால், அவ் வைத்தியசாலை/ நிறுவனங்களிற்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும். பெறுமானங்களிற்கான கூட்டுத்தொகைக்கு நிகரான அல்லது கூடிய பெறுமானத்திற்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழொன்றாக இருத்தல் வேண்டும். மேலும், நீங்கள் விண்ணப்பிக்கும் வைத்தியசாலை/ நிறுவனம் தொடர்பில் வருடாந்தப் பெறுமானம் பின்வருமாரு அமைந்திருத்தல் வேண்டும். (அரசசார் நிறுவனமொன்று விலைமனுச் சமர்ப்பிப்பதாயின் இச் சான்றிதழுக்குப் பதிலாக, நிறுவனத்தின் பிரதானியினால் இவ் ஒப்பந்தத்தைத் திருப்திகரமாக மேறகொள்வதற்காக, சான்றிதழொன்றைச் சமர்ப்பிப்பது போதுமானதாகும்.)

| | | |
|---|---|---|
| போதனா வைத்தியசாலைகள் மற்றும் பொது வைத்தியசாலைகள் | - | ரூபா 1,000,000.00 |
| ஆதார வைத்தியசாலைகள்/ மாவட்ட வைத்தியசாலைகள் மற்றும் பிராந்திய வைத்தியசாலைகள் | - | ரூபா 500,000.00 |
| சுகாதார நிறுவனங்கள் | - | ரூபா 300,000.00 |

VI. அண்மைக்கால, வியாபாரப் பெயர் பதிவின் கீழ் சுத்திகரிப்புச் சேவையை வழங்கலிற்கான அனைத்து ஊழியர்களினதும், ஊழியர் நலன்புரி நிதியம் மற்றும் ஊழியர்நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சந்தாத் தொகை செலுத்தியமைக்கான இலங்கை மத்திய வங்கி/ ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் வழங்கப்பட்ட கடிதங்கள்/ பற்றுச்சீட்டுக்கள்/ அனுப்பப்பட்ட அறிவித்தல்கள் 2020/2021 ஆண்டிற்கான (கிட்டிய கடந்த 12 மாதங்களுக்கான) 2021.12.31 வரையான கட்டணங்களிற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

VII. அண்மித்த மதிப்பீட்டாண்டிற்கான சுத்திகரிப்பு நிறுவனம் என்ற பெயரில் பெசேவ/ வருமானவரி செலுத்தியமைக்கான ஆதாரங்களை ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும் (வ/ப கம்பனியொன்ரெனின், கம்பனியின் பெயரிலும் தனிநபர்/ கூட்டு வியாபார நிறுவனமானது, அனைத்து பங்குதாரர்களின் பெயர்களிலும், அண்மித்த வருடத்திறகான வருமானவரி, பெசேவ செலுத்தியமைக்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (2020/2021 ஆண்டிற்காக மாத்திரம்.)

VIII. ரூபா............ பெறுமானமுடைய விலைமனுப்பிணையமொன்று அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட நிதி நிருவனமொன்றினால்/ காப்புறுதி நிறுவனமொன்றினால், கொழும்பு-10 வண. பத்தேகம விமலவங்ச ஹிமி மாவத்தை, சுவசிரிபாய, 385 என்ற முகவரியிலுள்ள சுகாதார அமைச்சின் செயலாளரின் பெயரில் வரையப்பட்ட, விலைமனு மூடப்பட்ட தினத்திலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையமொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (2022.06.29 முதல் 2022.10.25) வரை செல்லுபடியாகுதல் வேண்டும்.

2. 2022.06.08 முதல் 2022.06.28 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை இலக்கம் 26, 2ஆம் மாடி, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரியிலமைந்துள்ள, சுகாதார அமைச்சின் (உப அலுவலகம்) பெறுகைப் பிரிவில் இதற்கான விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக, மீளளிக்கப்படாத குறித்த வைத்தியசாலைகள்/ நிறுவனங்களிற்காக கீழ்க்காணப்படும் கட்டணங்கள், இலங்கை வங்கி தப்ரபேன் கிளையின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கணக்கு இலக்கம் 7040244 அல்லது சுகாதார அமைச்சின் சிறாப்பர் பிரிவில் காசாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு மற்றும் விலைமனுப்படிவங்களிற்கான விண்ணப்பக்கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**நிறுவனம்/ வைத்தியசாலை**

| தொடர் இலக்கம் | வைத்தியசாலைகளின் பெயர்கள் | பெறுகை இலக்கம் | பிணைச் சான்றிதழ் ரூபா | வங்கி மேலதிக கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தொகை ரூபா (அல்லது குறையாத) | விலைமனுப் பிணையம் ரூபா | விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 01 | தேசிய வைத்தியசாலை - மூன்றாம் மருத்துவ வாட்டுத் தொகுதி அடங்கும் பிரிவு | MH/PB/CL/01/2022 | 1,000,000.00 | 552,017.08 | 221,000.00 | 3500.00 |
| 02 | இலங்கை தேசிய வைத்தியசாலை 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 59 NQ சென் பீற்றர் லொண்டரிப் பராமரிப்பு, களஞ்சியத் தொகுதி சருமவியாதி மருந்தகம், H ஓவர்சியர் அலுவலகம் ECG, நச்சுத்தகவல்கள், சுகாதாரப் பணிப்பாளர், MIUDU, CECB உள்ளடங்கும் பிரதேசம் | MH/PB/CL/02/2022 | 1,000,000.00 | 890,168.75 | 356,500.00 | 3500.00 |
| 03 | சுகாதார அமைச்சு மற்றும் இணைந்த நிறுவனங்கள் | MH/PB/CL/03/2022 | 1,000,000.00 | 919,092.56 | 368,000.00 | 3500.00 |
| 04 | இலங்கை தேசிய பல் வைத்திய (போதனா) வைத்தியசாலை - கொழும்பு-07 | MH/PB/CL/04/2022 | 1,000,000.00 | 434,577.92 | 174,000.00 | 3500.00 |
| 05 | உயிரின மருத்துவப் பொறியியல் சேவைப் பிரிவு, கொழும்பு-10 | MH/PB/CL/05/2022 | 300,000.00 | 97,201.09 | 39,000.00 | 3500.00 |
| 06 | அம்பாறை பொது வைத்தியசாலை | MH/PB/CL/06/2022 | 1,000,000.00 | 2,048,575.07 | 819,500.00 | 12500.00 |
| 07 | அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை | MH/PB/CL/07/2022 | 500,000.00 | 908,309.53 | 363,500.00 | 3500.00 |
| 08 | அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை கல்முனை | MH/PB/CL/08/2022 | 1,000,000.00 | 1,103,118.12 | 441,500.00 | 3500.00 |
| 09 | தேசிய மனநல சுகாதாரக் கல்வி நிறுவனம் - அங்கொட | MH/PB/CL/09/2022 | 1,000,000.00 | 2,176,957.14 | 871,000.00 | 12500.00 |
| 10 | மாவட்ட வைத்தியசாலை - கந்தானை | MH/PB/CL/10/2022 | 500,000.00 | 441,247.25 | 176,500.00 | 3500.00 |
| 11 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம தாதியர் பாடசாலை - கந்தானை | MH/PB/CL/11/2022 | 500,000.00 | 182,737.62 | 73,500.00 | 3500.00 |
| 12 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம | MH/PB/CL/12/2022 | 1,000,000.00 | 2,279,959.17 | 912,000.00 | 12500.00 |
| 13 | புனர்வாழ்வு வைத்தியசாலை - ராகம | MH/PB/CL/13/2022 | 500,000.00 | 598,169.84 | 239,500.00 | 3500.00 |
| 14 | கண்டி தேசிய வைத்தியசாலை - I, II மற்றும் III பிரிவுகள் | MH/PB/CL/14/2022 | 1,000,000.00 | 4,344,077.02 | 1,738,000.00 | 20000.00 |
| 15 | நாவலப்பிட்டி மாவட்டப் பொது வைத்தியசாலை | MH/PB/CL/15/2022 | 1,000,000.00 | 450,000.00 | 180,000.00 | 3500.00 |
| 16 | மாத்தளை மாவட்டப் பொது வைத்தியசாலை | MH/PB/CL/16/2022 | 1,000,000.00 | 1,499,179.65 | 600,000.00 | 12500.00 |
| 17 | எம்பிலிபிட்டிய மாவட்டப் பொது வைத்தியசாலை | MH/PB/CL/17/2022 | 1,000,000.00 | 773,355.93 | 309,500.00 | 3500.00 |

3. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள், 2022.06.29 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, 'தலைவர், அமைச்சின் பெறுகைக் குழு, 'C2' சுகாதார அமைச்சு (உப அலுவலகம்) 2ஆம் மாடி இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10' என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது அதே முகவரியின் 2ஆம் மாடியிலுள்ள மேலதிக செயலாளர் (பெறுகை) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிட் சேர்த்தல் அல்லது ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் '2022/2023 ஆண்டிற்கான ......................... வைத்தியசாலை/ நிறுவனத்திற்கான சுத்திகரிப்புச் சேவையை வழங்கல்' எனக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

4. இதற்காக விண்ணப்பிக்கும் நிறுவனங்கள், விண்ணப்பிக்கும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், நிறுவனங்கள் பலவற்றிற்கு விண்ணப்பிப்பதாயின், அவற்றின் மூலப் பிரதி, விலைமனுவொன்றுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அது எந்த விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென, ஏனைய விலைமனுக்களில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். ஏனைய விலைமனுக்களுடன், மூலப் பிரதிகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் தனித்தனியாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5. விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக, மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக்குறிப்பிட்டு தனித்தனி உறைகளில் சேர்த்து அவை ஒருறையில் சேர்க்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. 2022.06.29 அன்று மு.ப. 10.00 வரை, இலக்கம் 26 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10 சுகாதார அமைச்சு, உப அலுவலகம். இரண்டாம் மாடியின் மேலதிக செயலாளர், (பெறுகை) அலுவலகத்தில் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். மேலதிக விபரங்களிற்காக மேலதிக செயலாளர் (பெறுகை) ஐ அழைக்கவும். (தொ.பே. இலக்கம் 011-2112713, 011-2112717)

7. 2022.06.16 அன்று மு.ப. 10.00 இற்கு சுகாதார அமைச்சின் புதிய கட்டிடம், இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10 இல் உள்ள மேலதிக செயலாளர் (பெறுகை)யின் அலுவலகத்தில் இதற்கான விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்

8. சமர்ப்பிக்கப்படும விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாவதுடன் பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

**தலைவர்,**
**அமைச்சின் பெறுகைக்குழு, 'C2',**
**பெறுகைப் பிரிவு,**
**சுகாதார அமைச்சு (புதிய கட்டிடம்)**
**இரண்டாம் மாடி**
**இலக்கம் 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு-10.**

# மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்

(அரசுரிமை தொழில்முயற்சி)

## விலைமனுக்களுக்கான அழைப்பு

மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் ஓர் அரசுடமை நிறுவனமானதும், 'ஹைலண்ட்' வர்த்தக நாமத்தில் பால் பதனிடுதல், உற்பத்தி செய்தல் மற்றும் நாடு முழுவதும் சந்தைப்படுத்தல் கருமங்களை மேற்கொள்ளும் ஓர் வர்த்தக நிறுவனமாகும். எமது நிறுவனத்திற்கு கீழ்கானும் பொதியிடல் (Packaging Materials) பொருட்களை வழங்குவதற்கான வழங்குநர்களிடமிருந்து அல்லது அவர்களது தர அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் கேள்வி குழுவின் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**பொருள் இலக்கம்: 1 - UHT பாலுக்கு UHT ASEPTIC MULTY LAYER FILM ஐ வழங்குதல் மற்றும் விநியோகித்தல்**

**கேள்வி இல : M / PUR / TEN / 2022/03**

**கேள்விப் பிணை முறி : ரூபா 500,000.00**

**பொருள் இலக்கம் 2 - யோகட் கோப்பைகளுக்கான அச்சடிக்கப்பட்ட அலுமினியம் பொயில்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்**

**கேள்வி இல : M / PUR / TEN / 2022/ 04**

**கேள்விப் பிணை முறி : ரூபா 500,000.00**

**பொருள் இலக்கம் 3 - யோகட் கோப்பைகளை (H.I.P.S) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்**

**கேள்வி இல : M / PUR / TEN / 2022/ 05**

**கேள்விப் பிணை முறி : ரூபா 500,000.00**

**முடிவுறுத்தப்படும் மற்றும் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்: 30-06-2022ஆம் திகதி பி.ப. 3.00 மணி**

**பொது நிபந்தனைகள்**

1) முழு விபரங்களுடன் கூடிய கேள்விப்பத்திர ஆவணங்கள்/ விபரங்கள், ஆகியவற்றை மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவுப் பிரிவான ஐந்தாம் மாடி, இல. 345, காலி வீதி, கொழும்பு-3, என்ற முகவரியில் 2022-06-08ஆம் திகதி முதல் 2022-06-29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் மாலை 4.00 மணி வரை ஒரு கேள்விப்பத்திர ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
2) கேள்வி ஆவணங்கள் அல்லது வேறு ஆவணங்கள் என்பன கோரிக்கைக் கடிதம் இல்லாமல் வழங்கப்படமாட்டாது.
3) 90 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட சலுகையுடன் கூடிய 500,000.00 ரூபாவிற்கான விலைக் கோரல் பிணை முறி (கேள்வி உத்தரவாத பிணை) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டின் கொள்வனவுப் பிரிவில் 2022-06-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் நேரத்தில் அங்கு சமுகமளித்திருக்கலாம்.
5) கேள்வி ஆவணங்களை கொள்வனவுப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் பெற்றுக்கொள்ளலாம்.
6) கேள்வி பத்திரங்களை ஏற்றுக்கொள்ளவும், நிராகரிப்பதற்கும் மில்கோ நிறுவுனம் உரிமை கொண்டுள்ளதும்.
7) மில்கோ நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் இந்த முத்திரை பொறிக்கப்பட்ட கேள்வியில் பங்குபற்ற முடியாது.

இந்த விலைக்கோரல் பற்றிய மேலதிக தகவல், விபரம் அல்லது விளக்கம், தேவைப்படின் மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டின் கொள்வனவு முகாமையாளரிடமிருந்து 011 4500530/557/512 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்**
**ஐந்தாம் மாடி,**
**இல. 345, காலி வீதி, கொழும்பு-03**

# அறிவித்தல்

**வ/ப சுகாதார திணைக்களத்தின் கூட்டுறவு சிக்கன கடன் கொடுக்கல் வாங்கல் சங்கம் (போட்ஹவுஸ்)**

**'திரியதரு பிரனாம' புலமைப்பரிசிலுக்காக விண்ணப்பங்கள் கோரல் - 2021**

- 2020 ஆம் ஆண்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ள
- 2019 ஆம் ஆண்டில் க.பொ.த (உ/தரம்) சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள

பிள்ளைகளுக்கு உரித்தான "திரியதரு பிரனாம" புலமைப்பரிசில் விண்ணப்பங்கள் கோரல் **2022.06.30** ம் திகதியுடன் முடிவுறுத்தப்படுவதாக அறிவித்துக்கொள்கிறோம். அத்தினத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது என்பதையும் தயவுடன் அறிவித்துக்கொள்கிறோம்.

**வ/ப சுகாதார திணைக்களத்தின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சங்கம் (போட்ஹவுஸ்)**

**'திரியதரு பிரனாம' புலமைப்பரிசிலுக்காக விண்ணப்பங்கள் கோரல் - 2022**

**2022.08.31ம்** திகதிக்கு ஒருவருட அங்கத்துவம் கொண்ட உறுப்பினர்களின்

- **2021** ஆம் ஆண்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ள
- **2020** ஆம் ஆண்டில் க.பொ.த (உ/தரம்) சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

9"X4" அளவான ரூ.45.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட உறையுடன் அங்கத்துவ தகவல்கள் அடங்கிய கடிதமொன்றை 2022.06.10 முதல் 2022.08.31 வரையான காலத்திற்குள் ஆவணங்களை தபாலில் சங்கத்திற்கு அனுப்பி அல்லது நேரில் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2022.09.30ம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன் பதிவுத்தபாலில் அல்லது நேரில் சங்கத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "திரியதரு பிரனாம" - 05 ஆம் ஆண்டு அல்லது "திரியதரு பிரனாம" பல்கலைக்கழகம் என்று குறிப்பிட வேண்டியதுடன் குறித்த தினத்திற்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது என்பதையும் தயவுடன் கவனிக்கவும்.

**பி.எச்.எஸ்.சுதர்ஷன**
**கௌரவ தலைவர்**
**வ/ப சுகாதார திணைக்களத்தின் கூட்டுறவு சிக்கன மற்றும்**
**கடன் கொடுக்கல் வாங்கல் சங்கம்**
**37/36, பன்சல வீதி,**
**கொழும்பு -10**

**2022.06.07 ஆம் திகதி**

**தொலைபேசி - 011-2685016, 0112662870, 0112676088, 0112676099**
**தொடர்புகள் : 071-9773934**

# கிழக்கின் குரல்



பிரிவேல்த் குளோபல் நிதி நிறுவன மோசடி:

## ஜனாதிபதி, தமிழக முதலமைச்சரின் உதவியை கோரும் பாதிக்கப்பட்டவர்கள்



இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களிடமிருந்து 2000 மில்லியன் ரூபாய் அளவில் மோசடி செய்துவிட்டு கடல் வழியாக சட்டவிரோதமாக தமிழகத்தில் நுழைந்து சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரிவேல்த் குளோபல் நிதி நிறுவன பிரதானி ஷிஹாப் ஷரீப் அவரது பாரியார் பர்ஸானா மாக்கர் ஆகியோரை, தமிழகத்திலும் தமிழகத்திற்கு வெளியேயும் தமிழ் பேசும் மக்களுக்காக குரல்கொடுத்துவரும் தமிழக முதலமைச்சர் மு.கா. ஸ்டாலின் நடவடிக்கை எடுத்து இலங்கைக்கு நாடு கடத்த வேண்டும் என பிரிவேல்த் குளோபல் பாதிக்கப்பட்ட அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரிவேல்த் குளோபல் பாதிக்கப்பட்ட அமைப்பினர் சார்பில் தலைவர், செயலாளர், பிரதித்தலைவர் ஆகியோர் நேற்று முன்தினம் (06) மாலை கல்முனை தனியார் மண்டபத்தில் ஊடகங்களிடம் இது தொடர்பாக கருத்து வெளியிட்டனர்.

மேலும் அங்கு கருத்து தெரிவித்த அவர்கள்,

பிரிவேல்த் குளோபல் நிதி நிறுவனத்தினால் பாதிக்கப்பட்ட 1400 குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியினால் நிர்க்கதியாகியுள்ளது. குருவி சேர்ப்பது போன்று சேமித்த பணம், வீடுகட்ட சேமித்த பணம், அங்கவீனர்களின் பணம் என பலரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளோம்.

ஷிஹாப் ஷரீப் அவரது பாரியார் பர்ஸானா மாக்கர் ஆகியோர் தொடர்பில் இந்தியாவில் நடைபெற்று வந்த நீதிமன்ற சட்ட நடவடிக்கைகள் 95 சதவீத அளவில் முடிந்துள்ளதாக அறிகிறோம். சர்வதேச பொலிஸாரினால் தேடப்பட்டு வரும் இவர்களை இலங்கைக்கு நாடு கடத்துவது மூலம் இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள எங்களுக்கு ஏதாவது நன்மை கிடைக்கும் என்று நம்புகிறோம். உங்களின் தந்தை கலைஞரின் வழியில் இலங்கை தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை கிட்டும் வகையில் இது தொடர்பில் நேரடியாக தலையிட்டு இவர்களை இலங்கைக்கு நாடு கடத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றனர்.

மேலும் மட்டக்களப்பு, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை நீதிமன்றங்களில் இவர்களுக்கு எதிராக 100 க்கு மேற்பட்ட வழக்குகள் பதியப்பட்டுள்ளது. கடந்த 2020.03.26 அன்று பாராளுமன்றத்தில் கூட இது தொடர்பில் பேசப்பட்டது. 2020.11.08 அன்று பொலிஸ் ஊடக பேச்சாளர் இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார். இந்த மோசடி விடயத்தில் ஜனாதிபதி தலையிட்டு உரிய நியாயத்தை பெற்றுத்தர வேண்டும்.

## நீரோடையை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பம்

மாளிகைக்காடு நிருபர்



குப்பைகள், விலங்குகழிவுகள் கொட்டப்பட்ட மற்றும் சல்பீனியாக்கள் நிறைந்த கல்முனை சாய்ந்தமருது வண்ட் வீதியில் அமைந்துள்ள நீரோடையை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் நேற்று முதல் நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் கல்முனை மாநகர சபை என்பன இணைந்து முன்னெடுத்து வருகின்றன.

நேற்றுக் காலை ஆரம்பித்துள்ள இந்த வேலைத்திட்டமானது மக்களின் வேண்டுகோளின் பிரகாரம் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எப். ரஹ்மான் ஆகியோர் கல்முனை மாநகர சபைக்கு முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாகவும் மற்றும் கள விஜயத்தினூடாக கண்டுபிடிக்கப்பட்ட விலங்கு கழிவுகளை அகற்றும் நோக்கிலும், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவும் இந்த வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் இவ்வாறான சட்டவிரோத மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை தொடர்ந்தும் செய்து சுற்றாடலுக்கு பங்கம் விளைவிப்போருக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்க கல்முனை மாநகர முதல்வர், ஆணையாளர் உட்பட கல்முனை மாநகர சபை தயாராக இருப்பதாகவும், இந்த வேலைத் திட்டத்தை துரிதகதியில் செய்து மக்களின் நலனுக்காக முன்வந்து இந்தப்பணியை வெற்றிகரமாக செய்ய உதவிய நீர்ப்பாசன திணைக்களத்திற்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.



பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு அரச செலவினத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகரின் நிலத்தடி குழாய்க் கிணறுகள் அமைக்கும் கருத்திட்டத்தின் மூலம் சம்மாந்துறைப்பற்று பாரியளவிலான அரிசி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினால் அண்மையில் குழாய்க் கிணறு நிறுவப்பட்டு வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி அஸாத் எம் ஹனிபாவிடம் கையளிக்கப்பட்ட போது,...

## சர்வோதயம் அமைப்பினால் 350 உலர் உணவுப் பொதிகள்



தோப்பூர் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 350 குடும்பங்களுக்கு சர்வோதயம் அமைப்பின் அனுசரணையில் நேற்று முன்தினம் மூதூர் பிரதேச செயலகத்தில் வைத்து மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக் தலைமையில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன இதில் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் பி.அறபாத், கணக்காளர் நாளீர், நிருவாக உத்தியோகத்தர் அலாவுதீன், சர்வோதயம் அமைப்பின் பிரதிநிதிகள் கிராம சேவையாளர்கள், பயனாளிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இங்குள்ள 42 கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே இவ் இலவச உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன .

## அல்ட்ரா அலுமினிய உற்பத்தி தொழிற்சாலை ரூபா 200 கோடி முதலீட்டில் திறப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கோவில்குளம் பிரதேசத்தில் 200 கோடி முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அல்ட்ரா அலுமினிய உற்பத்தி தொழிற்சாலை (05) ஞாயிற்றுக்கிழமை மாலை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனால் திறந்து வைக்கப்பட்டது.

கட்டடங்களுக்கான பொருத்து வேலைகளுக்குப் பயன்படுத்தும் மூலப் பொருட்கள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டு உள்நாட்டுத் தேவைகளுக்கு விநியோகிக் கப்படவுள்ளதுடன் ஏற்றுமதியும் செய்யப் படவுள்ளது.

அல்ட்ரா அலுமனியம் நிறுவனத்தின் தலைவர் ஏ.எம். உனைஸ் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி சிறிகாந், மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம், காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர், அல்ட்ரா நிறுவனத்தின் ஸ்தாபக தலைவர் ஐ.எல். அக்பர் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இத் தொழிற்சாலையை வைபவ ரீதியாக திறந்து வைத்ததுடன் நினைவுக் கல்லும் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

ஆயுதத்துடன் வந்து உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்தனர்;

## மனித உரிமை ஆணைக்குழுவில் மாநகரசபை உறுப்பினர் ராஜன் முறைப்பாடு

காரைதீவு குறூப் நிருபர்



மின்தடை நேரத்தில் ஆயுதத்துடன் வந்த சீருடையினர், தன்னை விசாரிப்பதாக கூறி விரட்டி உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இவ்வாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் கல்முனை மாநகர சபையின் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் சாமுவேல் சந்திரசேகரம் ராஜன் முறைப்பாடு தெரிவித்துள்ளார்..

கல்முனை மனித உரிமை ஆணைக் குழுவின் இணைப்பாளர் ஏ.சி. அப்துல் அஸீஸ் இடம் அவரது முறைப்பாட்டை திங்கட்கிழமை கையளித்தார்.

அவரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது..

கடந்த 2 ஆம் திகதி இரவு மின்தடை நேரம் பெரிய நீலாவணையிலுள்ள எனது வீட்டுக்கு வந்த ஆயுதம் தரித்த நான்கு பேர் தங்களை கொழும்பு புலனாய்வுப் பிரிவினர் என்று அடையாளப்படுத்திய இருவரும் விசாரிக்க வந்ததாக கூறினர்.

கொழும்பிலிருந்து வந்த புலனாய்வுப் பிரிவினர் என்பதால் அவர்களிடம் அடையாள அட்டையை கேட்டேன்.

ஆனால் அவர்கள் தர மறுத்தனர் .

நான் கல்முனையில் உண்ணாவிரதமிருந்தமை தொடக்கம் கடந்த மாதம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வரை நான் சம்பந்தப்பட்ட விடயங்களில் என்னை துருவித்துருவி விசாரித்தனர்.

இறுதியில் வெளியில் நடமாடக் கூடாது என்று அச்சுறுத்தியதோடு எனக்கும் மனைவி பிள்ளை மற்றும் மருமகனுக்கும் பயமுறுத்தி அச்சுறுத்தல் விடுத்துச் சென்றுள்ளனர்.

எனது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் பயபீதியுடன் காலம் கடத்தி வருகிறேன். இவர்களை அடையாளம் கண்டு எனக்கு நீதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## வடக்கு, கிழக்கில் முதலாவது கணனி விஞ்ஞான (Computer Science) துறை பேராசிரியர்



இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக, பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எச்.எம்.எம். நளீர் 28.05.2022 முதல் பிரயோக விஞ்ஞான பீடத்தின் கணனி விஞ்ஞான (Computer Science) பிரிவுக்கு கணனி விஞ்ஞான பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, 18.12.2020 முதல் செயற்படும் விதத்தில் அத்துறையில் பேராசிரியராக பல்கலைகழக பேரவையின் 258 ஆவது அமர்வில் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கணனி விஞ்ஞான துறையில் முதலாவது பேராசிரியர் என்ற வரலாற்று இடத்தை தனதாக்கிக் கொண்ட கலாநிதி நளீர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1996 முதல் 1998 வரை உதவி விரிவுரையாளராக இணைந்து கொண்ட அவர், பின்னர் இலங்கை தென்கிழக்குப் பல்கலக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தில் 1998 ஆம் ஆண்டு விரிவுரையாளராக இணைந்து கொண்டார். பின்னர் 2014 ஆம் ஆண்டு சிரேஷ்ட விரிவுரையாளர் தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டார்.

இதேவேளை கணனி விஞ்ஞான துறைக்கு 2015 2017 வரை இணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

தற்போது கணனி விஞ்ஞான துறையின் திணைக்களத் தலைவராக பணியாற்றும் கலாநிதி நளீர், பல்கலைக்கழகத்தின் பல்வேறு நிர்வாகம் சார்ந்த பிரிவுகளிலும் பணியாற்றி நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அரும்பணியாற்றியுள்ளார்.

## இலவசமாக மண்ணெண்ணெய் விநியோகிக்கத் திட்டம்

றொட்டவெவ குரூப் நிருபர்

திருகோணமலை குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட வறிய குடும்பங்கள் மற்றும் பெண்கள் தலைமைத்தாங்கும் குடும்பங்களுக்கு இலவசமாக மண்ணெண்ணெய் விநியோகிக்க திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குச்சவெளி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.முபாரக்கின் வழிகாட்டலின் கீழ் வறிய குடும்பங்கள் மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் குடும்பத்திற்கு தலா ஒரு லீட்டர் வீதம் மண்ணெண்ணெய் இலவசமாக வழங்க வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குச்சவெளி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.முபாரக் தெரிவித்தார். அந்த வகையில் வீட்டுத் தேவைக்காக இலவசமாக மண்ணெண்ணெய்யினை பெற தகுதியானவர்கள் மின்சார இணைப்பு வசதியற்ற குடும்பங்கள், வறிய குடும்பங்கள் மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு இவ்வாறு வீட்டுத் தேவைகளுக்காக தலா 01 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் இலவசமாக வழங்க குச்சவெளி பிரதேச சபை தீர்மானித்துள்ளதாக சபையின் தவிசாளர் ஏ.முபாரக் தெரிவித்தார்.

எனவே குறித்த பயனாளிகள் குச்சவெளி பிரதேச சபை அலுவலகத்திலும் சபையின் புல்மோட்டை உப அலுவலக தவிசாளர் காரியாலயத்திலும் தங்களது பெயர் விபரங்களை பதிவு செய்து உங்களுக்கான பதிவு இலக்கங்களை இன்றே பெற்றுக்கொள்ளுமாறும் தவிசாளர் ஏ.முபாரக் கேட்டுக்கொண்டதுடன் மண்ணெண்ணெய் இலவசமாக வழங்கும் போது குடும்ப தலைவன்/தலைவி / அல்லது தகுதியான ஒருவர் வரலாம் எனவும் எக் காரணம் கொண்டும் சிறு பிள்ளைகள் வரக்கூடாது எனவும் பயனாளிகள் கட்டாயம் தேசிய அடையாள அட்டை/ முதியோர் அடையாள அட்டை/அங்கீகரிக்கப்பட்ட அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணத்தை கொண்டுவர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.





காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கின் முதல்நாள் நிகழ்வான கடல்நீர் எடுத்து கல்யாணக் கால் நடும் வைபவம் நேற்றுமுன்தினம்(6)மாலை சிறப்பாக நடைபெற்ற போது. (படங்கள்: காரைதீவு குறூப் நிருபர்)

## தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கோரிக்கை

ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள மக்களின் எதிர்பார்ப்புக்களை காப்பாற்ற வேண்டுமாக இருந்தால் உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் எனதமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன் தெரிவித்தார். திங்கட்கிழமை (06) தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற அரசியல் கட்சி செயலாளர்களுடனான கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது,..

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்படுவதன்காரணமாக மாகாணங்களை அதிகாரிகள் நிருவகிக்க வேண்டிய பொறுப்பு ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் இதனால் வாழ்வாதாரம் வேலை வாய்ப்பு, இடமாற்றம், உள்ளிட்ட அடிப்படை சேவைகளை பெறுவதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள் நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடிக்கு அகக்காரணங்களும் புறக்காரணங்களும் இருக்கலாம். அதேவேளையில் முறையான வளங்கள் முகாமை செய்யப்பட வேண்டிய தேவைப்பாடும் இருக்கின்றது. பல தரப்பினர் மீண்டும் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை முன் வைத்து வருகின்றனர். அதே வேளையில் மாகாண சபைத் தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்படுவது போன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக் காலமும் முடிவடைந்ததால் உரியகாலத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்து இருக்கின்ற மக்களின் ஜனநாயகத் தன்மை பாதுகாக்கப்படும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜுன் மாதம் 8ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.